www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 20

ஜன.25-31,1998

ரூபா 11/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 241


## களமும் காட்சிகளும்

**நூலகத் திறப்பு!**

**பின்னணி என்ன?**



**தேர்தல் விபரீதம்**




படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## அட்டைக் கத்திகளும் அதிகாரமில்லாத இராஜாக்களும்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

மிக அருகில்
நெருங்கி வந்துவிட்டது
யாழ் மினித் தேர்தல்!

இந்த மினித் தேர்தல்
மணியான தேர்தலல்ல!
பிணியான தேர்தல்
என்றுதான்
திருவாளர் பொதுஜனம்
அபிப்பிராயப்படுகிறார்!

உள்ள பிணி
ஒரு புறமிருக்க,
மேலும் பிணியைக்
கொண்டுவரக்கூடிய தேர்தல்!

சூரியக்கதிர்
நடவடிக்கைக்குப் பின்னர்
யாழ் குடாநாட்டு மக்கள்
எதிர்கொண்ட
மனித உரிமை மீறல்களை
மறைக்கின்ற தேர்தல்!

வடக்கு-கிழக்கில்
சிவில் நிர்வாக கடிவாளத்தை
படையினர்தான்
கையில் வைத்திருக்கின்றனர்!

ஆனால், அதிகாரமில்லாத
சில இராஜாக்களின்
கைகளில்
அட்டைக் கத்திகளை
கொடுத்துவிட்டு,
உலகின் கண்களுக்கு
தமிழர்களின் தலைவர்களாக
காட்டப் போகிறார்கள்!

அதற்காகத்தான்
இந்தத் தேர்தல்!

தெருவிளக்குப் போடும்
அதிகாரம் கூட- இப்போது
உள்ளூராட்சிச் சபைகளிடம்
இல்லவே இல்லை!

தேசிய மின்சார சபை
அதனை எடுத்துவிட்டது!

குப்பை அள்ளும்
அதிகாரத்தை மட்டும்-
போனால் போகட்டுமென்று-
விட்டு வைத்திருக்கிறார்கள்!

ஆனால், தமிழ்க் கட்சிகள்
உள்ளூராட்சிச் சபைகளை-
அலாவுதீனின்
அற்புத விளக்குகளாக
கற்பிதம் செய்கின்றன!

கிழக்கில், 1994ல்
உள்ளூராட்சித் தேர்தல்
நடைபெற்றது!

அப்போதும், அங்கும்
வீரமுழக்கத்துடன்தான்
தமிழ்க்கட்சிகள்
பிரசாரம் செய்தன!

"திருமலை மண்ணை
மீட்கும் தேர்தல்"
என்றுகூட ஒரு கட்சி
பிரசாரம் செய்தது!

பாவம், அக் கட்சியின்
நிர்வாகத்தில் இருந்த
நகர சபையால்
சந்தைக் குத்தகை விடயத்தில்கூட
சொந்த முடிவை
அமுல் செய்ய இயலவில்லை!

கிழக்கில் பல சபைகள்
தமிழ்க் கட்சிகளின்
கட்டுப்பாட்டில் உள்ளன!

அன்றாடப் பிரச்சனைகளுக்கு
அச் சபைகள் கண்ட
பரிகாரம் என்ன?

யுத்தம் நடைபெறும்
எந்தப் பிரதேசத்திலும்
துப்பாக்கிக் குழாய்கள்தான்
சிவில் நிர்வாகத்தை
வழி நடத்தும்!

யுத்தம் நடைபெறாத
பிரதேசத்தில்கூட
உள்ளூராட்சி சபைகளால்
பெரிதாக எதனையும்
சாதித்துவிட முடியாது!

முன்பிருந்த அதிகாரங்கள்கூட
அவற்றிடமிருந்து
எடுக்கப்பட்டு விட்டன!

மொத்தத்தில்,
யாழ் மினித் தேர்தலின்
பயன்பாடு என்ன?

'ஜனநாயகம்-
சிவில் நிர்வாகம்'
என்று பொறிக்கப்பட்ட
இரும்புத்திரை
யாழ் குடாநாட்டின் முன்பாக
தொங்கவிடப்பட உதவும்!

உள்ளே- கடிவாளம்
துப்பாக்கிகளிடம் இருக்கும்!
அட்டைக்கத்திகளுடன்
உள்ளூராட்சிச் சபைத் தலைவர்கள்
உலா வருவார்கள்!

இந்த நாடகத்தில்
யாழ் மக்கள்
பங்கேற்கப் போவதில்லை,
என்பதே
பரவலான நம்பிக்கை!

ஆரவாரங்களுக்கு மயங்காமல்,
கட்டாயங்களுக்கு பணியாமல்
திட்டவட்டமான முடிவுகளை
எடுக்கக்கூடியவர்
திருவாளர் பொதுஜனம்!

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## மனிதன் மனிதனாய் வாழ....!

"இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்!" - (எபிரேயர் 13:8)

சந்தேகம் தேவனின் வாக்குறுதிகள் பற்றிக் கேள்வி கேட்கிறது; ஆனால் நம்பிக்கை கடவுளின் வாக்குறுதிகளை ஏற்று, அவைகளை நம்புபவரின் வாழ்க்கைக்குள் பிரயோகிக்கின்றன.

எனவேதான் இறைவனை நம்புகின்றவர்கள், "இறைவன் சொல்லுகிறான்... எனவே நாம் சொல்லமுடியும்!" என்று நன்நம்பிக்கையின் பேரில் சொல்கிறார்கள்.

ஆண்டவன் சொல்லுகிறான் எனவே அடியார்கள் செய்கிறார்கள். எனவேதான் "நான் உங்களோடேயே என்றென்றும் இருப்பேன்!" என்று இறைவன் சொல்லும்போது "இறைவனே நீயே என் துணை. எனவே நான் பயப்படேன்!" என்று தனக்குத் தானே சொல்லிக் கொள்கிறான்.

என்னதான் துன்பம் வரும் பொழுதும் 'எல்லாம் அவன் செயல்' என்று மன நிம்மதியடைகிறான்; யாரையும் தூஷிப்பதில்லை: யாரையும் வெறுப்பதில்லை; இது மேலான உள்ளத்தையும் அன்பு நிறைந்த இதயத்தையும் உருவாக்குகின்றது. மன நிம்மதியளிக்கின்றது; அமைதியான வாழ்வு நடத்துகின்றான். மனிதன் மனிதனாக வாழ்கின்றான்.

ஏ.பி.வி. கோமஸ்.



## நோன்பாளிகள் நாவைப் பேணுதல் கடமை!

வெறுமனே பசியோடும்-தாகத்துடனும் இருப்பது உண்மையான நோன்பன்று. வீணான வார்த்தைகளை விட்டு நாவைப் பேணுவதும், இறைதியானம், குர்ஆன் ஓதல்-நபிகளார் மீது ஸலவாத் மொழிதல், இஸ்திஃபார்-பாவமன்னிப்புக்கோருதல் போன்ற கருமங்களின் மூலம் நோன்பினை ஜீவனுள்ளதாக, பயனுள்ளதாக ஆக்கவேண்டும்.

ஏனைய காலத்தைப் போன்று நோன்பு நாட்களிலும் நம்மில் பலர் வீண் பேச்சுக்களிலும், வாய்த்தர்க்கம், புறம் பேசல், கேலி செய்தல், பிறரைக் கோபமூட்டுதல் போன்ற பாவச் செயல்களில் நேரத்தைக் கழிக்கின்றனர். நற்கருமம் புரிந்து நாயனின் அருளைப் பெற வேண்டிய இப்புனித மாதத்தில் துர்ச்செயல் புரிந்து பாவத்தை விலைக்கு வாங்கிக் கொள்வது அறிவீனமாகும். இப்புனித மாதத்தில் நற்செயல்கள் புரிவோருக்கு அபரிமிதமான நன்மைகளும் நற்பாக்கியங்களும் கிடைப்பதுபோலவே, நோன்பு மாதத்தை மதிக்காது தான்தோன்றித்தனமாய்ப் பாவச் செயல்களில் ஈடுபடுவோர்க்கு இம்மை-மறுமையில் கொடிய தண்டனைகள் கிடைக்கப்பெறும் என்பதை உணரவேண்டும். நாம் மறுமையில் ஏக இறைவனின் விசாரணைக்கு ஆளாகும் வேளையில், எமது வாய்களுக்கு முத்திரையிடப்படும். நமது செயல்கள் குறித்து கைகளும்-கால்களும் ஏனைய உறுப்புக்களும் எமக்கு எதிராக சாட்சியம் கூறும் என இறைமறை இயம்புவதை எண்ணிப் பார்ப்போமா? மரணத்தின் பின்பு விமோசனம் பெறவேண்டுமானால், குறுகிய- தற்காலிகமான இம்மை வாழ்வில் நல்லன செய்து நற்பயன் பெறுவோமாக.

திஹாரிய-ஹாரித்.

## கவிதைப் போட்டி இல. 238

### பரிசுக்குரிய கவிதை

#### கழுத்தறுப்புகள்

நீ
கைக்குவருவாய்
என்று காத்திருக்க,
எம்
கழுத்துக்கள்
விலைபேசப்படுகின்றன!

யாழ்- எஸ். தவமணி.

### இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:



#### என்று?

வெஞ்சமரும் ஓய்வதென்று?
வெண்புறா பறப்பதென்று?
அஞ்சி அஞ்சி வாழும் எங்கள்
அல்லல்களும் தீர்வதென்று?!

சி.மு. சுந்தரேசன்-
அரசினர் வைத்தியசாலை,
மஸ்கெலிய.

#### சண்டைப் புறா

அன்று சமாதானப்புறா;
இன்று சண்டைப்புறா!
இது
அமெரிக்கா செல்கிறது
ஆயுதம் வாங்க!

அம்பிளாந்துறையூர்-அரியரன்.

#### டம்மிப் புறா

"நாட்டி விட்டோம்
நாம் வடக்கில்
ஜனநாயகம்!"
என நாயகம்
காட்டிக் கொள்ளவோ
இந்த 'டம்மி'த்தூது?

ரி.வை. இஸ்நவி-செங்கலடி.

#### வாக்குரிமை

யாழில் தேர்தல்...!
அதனால்;
விடுதலை உனக்கு...!
ஏனெனில்.....
நீயும் வாக்குப் போடலாம்...!

என். மங்களம்-மட்டக்குளி,
கொழும்பு-15.

#### சமாதானப் புறா....?!

சமாதானத்தை
பறக்க விடுகிறோம்!
இருக்க விடுகிறோமா?

சோழியூர் சிவபரீஸ்வரம்-
யாழ்ப்பாணம்.

#### நட்பு

வருடத் தொடக்கத்தில்
புறாவாகத் தெரிகிறது!
வருட முடிவில்
கழுகாகிறது!

சுபா வரன்-கண்டி.

#### சமாதானம்

எட்டாத உயரத்தில்
நீயிருக்க.....
எட்டிப் பிடித்திட
நாம் துடிக்க.....
வற்றாத வெள்ளமாய்
யுத்தம் இருக்க.....
வருவதெப்போ சமாதானம்?

செல்வி எஸ். தேவகி-
எல்லப்பர் மருதங்குளம்,
வவுனியா.

#### புதை குழியில்....!

பொன்னான அமைதியெல்லாம்
புதைகுழியில் தூங்கியபின்,
புறாவைப் பறக்க விட்டு
புலம்புகிறீர் மானிடரே!

சதாகணபதி-அதிகாரவத்தை,
உடபுஸ்ஸலாவ.

#### நீ வருவாயா?

நீ வருவாயா? நீ வருவாயா?
மண்ணில் தொலைந்துபோன எம்
சுதந்திரத்தைத் தர-நீ
வருவாயா?

ஆர். றஜீவன்- நெளுக்குளம் சந்தி, வவுனியா.

#### சாவிலே சமாதானம்

சிறகடித்துப் பறந்ததம்மா வெண்புறா-இன்று
சிறகொடிந்து வாடுதம்மா வெண்புறா! -இனி
பறப்பதற்கு சக்தியில்லை உடலிலே! - 'ஷெல்'
பறந்துவந்து தாக்கியதோ வானிலே...!
துயரகீதம் கேட்குதம்மா காதிலே...!
சமாதானமினி ஒவ்வொருவர் சாவிலே....!

ஜீவசுகி மணிவாசகன்-அக்கரைப்பற்று-07.

## கவிதைப் போட்டி இல.241



கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 31.01.1998

முகவரி: கவிதைப் போட்டி இல.241,
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல—1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை

தைப்பொங்கலை முன்னிட்டு அறிஞர் அண்ணாவின் கடிதத்தை பிரசுரித்திருந்தாய். காலத்திற்கு உகந்த கடிதத்தை எங்கிருந்து தேடிப்பிடித்தீர்? உம்மை இங்கே தேடித்தேடிப் படிக்க வேண்டியுள்ளது.

ம. உதயன், சாவகச்சேரி.

❀●❀

முரசே! காதிலை பூ கந்தசாமியார் என்பதில், 'காதிலை பூ' என்பதை நீக்கிவிடவும். ஏன் தெரியுமா? அவர் கூறும் சங்கதிகள் யாவும் கற்பனைகள் அல்ல, கண்ணால் காண்பவை. காதால் கேட்பவை. யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த என் சகோதரர் சொன்ன தேர்தல் கூத்துக் கதைகள், கந்தசாமியாரின் கருத்துக்கள் கற்பனையல்ல என்பதையே உணர்த்துகின்றன.

திருமதி. வாணி ராசரத்தினம், கொழும்பு-06.

❀●❀

அபாரம் முரசே!

தேர்தல் பற்றிய உனது ஆய்வுகளும், அலசல்களும், ஆணித்தரமான கருத்துக்களும் ஆத்மார்த்தமானவை. இதற்காக சில சிரமங்களை நீ சந்திக்க வேண்டி இருந்திருக்கும். நான் அறிவேன். எனினும் உன் நேர்மையான முயற்சி தொடரட்டும்.

வ. விசுவலிங்கம், கொழும்பு-09.

❀●❀

அன்பின் முரசே!

நீ தாங்கி வரும் அம்சங்கள் அனைத்தும் வெகு ஜோர், குறிப்பாக தொடர்கதைகள், அற்புதன் எழுதும் அரசியல்தொடர், சினிமா செய்திகள், மற்றும் பூலான் தேவியின் வாழ்க்கை வரலாறு, சிந்தியா பதில்கள் என்பன என்னை வெகுவாகக் கவர்ந்தவைகள். முரசு எம் மத்தியில் என்றும் வீறு நடைபோடட்டும்.

எம்.ஐ. மொஹமட் சாபி, அக்குறணை.

❀●❀

அன்பின் முரசே!

நீ சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் வியப்பூட்டுவனவாகவும் சிறப்பாகவும் அமைந்துள்ளன. உன்பணி தொடர என் நல்வாழ்த்துக்கள்.

எஸ். விக்கினேஸ், தாழையூர்.

❀●❀

இனிய முரசே!

பூலான் தேவியின் விறுவிறுப்பான- மனதை உருக்கும் இனிய தொடர், இளவரசி டயானாவின் கண்ணீரில் கரைந்த இரவுகள், காதிலை பூ கந்தசாமி. அத்தனை அம்சங்களும் வெகுஜோர், முரசே உன் பணி தொடர வாழ்த்துக்கள்.

சித்தி ஜெஸீனா நிஸ்றீன், சாய்ந்தமருது-10.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு. -நிர்வாகி.



### பார்க்காத கூத்துக்களா?

உள்ளூராட்சித் தேர்தலில் வான வேடிக்கைகள் காட்டுவர். வாக்குறுதி வீசுவர். நாம் அறிந்தது தான். இதைவிட பாட்டனுக்கு பாட்டனான தேர்தல் கூத்துக்கள் எல்லாம் கண்டு களித்தவர்கள் நாங்கள். இந்த ஏமாற்றுக்கெல்லாம் இழுபட மாட்டோம். 'முரசின்' நிலைப்பாடு பாராட்டத்தக்கது.

சி. ரங்கநாதன், கொக்குவில், யாழ்ப்பாணம்.

### உமாமரணம்

அரசியல் தொடரில் உமாமகேஸ்வரன் மரணம் தொடர்பான மர்மத்தை அற்புதன் விளக்கியிருந்தார். மரணத்தில் ஓரளவு நியாயம் இருப்பதுபோல அற்புதனின் கருத்து அமைந்திருந்தது. குறிப்பிட்ட இயக்க முன்னாள் உறுப்பினரான எனக்கும் அதே கருத்துத்தான்!

வி.எஸ், கவிற்ஸர்லாந்து.

அன்புடையீர்!

சிறப்பாகவும் விறுவிறுப்பாகவும் 'இலக்கிய நயம்' 'பூலான்தேவி' தரும் ரசிகனுக்கு நன்றிகள். மற்றும் 'அதிரடி அய்யாத்துரை', 'அரசியல்தொடர்', 'பாப்பா முரசு' என்பன சூப்பர்.

எம்.எம்.எம். அவூப், மாத்தளை.

❀●❀

பிரிய முரசே!

தொடர்கதைகளை 'எழுத்துச் சித்தர்' பாலகுமாரும், பிரபாகரனும் அசத்திச் செல்கிறார்கள். தகவல் பெட்டியில் பெண் படைகளாகத் தனிப்பாணியில் அசத்தியிருந்தாய். என்றும் எங்கள் முரசு தனிப் பாணியேதான்!

த. லக்ஸ்மணராஜனி, மட்/ சத்துருக்கொண்டான்.

❀●❀

அன்பின் முரசிற்கு

நீ தாங்கி வரும் அனைத்தும் சூப்பர். அதில் இனிய தொடரான 'மேக்கப் புன்னகை', 'இனி என் முறை' ஆகிய இரு தொடர்களும் எம்மை அசத்துகின்றன. அதை தாங்கி வரும் முரசுக்கு பாராட்டுக்கள்.

கி. றெஜிச்சந்திரன், வத்தளை.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட
சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர், த.பெ.இல:- 1772, கொழும்பு.

### கமிஷனாம் கமிஷன்!

பதவிக்கு வந்த புதிதில் வடக்கு-கிழக்கில் காணாமல் போனோருக்காக அம்மையார் நியமித்த கமிஷன் என்னாச்சு? அதுவும் காணாமல் போயாச்சு. இப்போது வடக்கில் காணாமல் போனோருக்காக கமிஷன் போடப்போகிறார்களாம். அப்படி போட்டதும் பயன் என்ன? தகுந்த நேரத்தில் நேர்நின்று உண்மைகளை உரைத்த இராஜதந்திரியாருக்கு சபாஷ்!

இ. செழியன், மட்டக்களப்பு.

### மாயமான்களும் பொய்க்கால் குதிரைகளும்

காணாமல் போனோருக்கான கமிஷன் மக்களை ஏமாற்றும் மாயமான் என்று இராஜதந்திரியார் கூறியது நூற்றுக்கு நூறு உண்மை. மாயமான் பின்னால் மதிகெட்டு ஓடுவதுடன், தமிழ் மக்களையும் தம்பின்னால் ஓடிவருமாறு கூறும் தமிழ்க் கட்சிகளை எப்படி அழைக்கலாம்? நானே கூறிவிடுகிறேன்; பொய்க்கால் குதிரைகள்!

வ. ஆறுமுகம், யாழ்ப்பாணம்.

### போட்டியே வைக்கலாம்

முரசே! நாம் என்ன நினைத்தோமோ அதனை முரசு கூறிவிட்டது. அரசாங்கத்தின் தலைவர்களை சந்தித்து விட்டு, "திருப்தியான பேச்சு, தகுந்த நடவடிக்கைகள், நாங்கள் இப்படிக் கூறினோம், அவர்கள் அப்படிக் கூறினார்கள்..." என்றெல்லாம் செய்தி கொடுக்கும் தமிழ்க் கட்சிகள் அரசின் விளம்பர முகவர்களே தான். அரசுக்காக விளம்பர வாசகம் தயாரிக்கும் போட்டியே நடத்தலாம்! (காதிலை பூ கந்தசாமியார் கவனிக்கவும்)

இ. மகேந்திரராஜா, திருமலை.

### புள்ளடியா பொல்லடியா?

இனிய முரசே!

யாழ் மக்களிடம் தமிழ்க் கட்சிகள் புள்ளடி கேட்பதற்கு பதிலாக, தங்கள் தவறுகளுக்கு பிராயச்சித்தமாக பொல்லடி கேட்கலாம். மக்களும் மனமுவந்து கொடுப்பர். சிந்திக்கும் எந்த மனிதனும், சந்தி சிரிக்கும் இத்தேர்தலில் புள்ளடி போட மாட்டான்.

ஆர்.ஜெயபாலன், கொழும்புத்துறை.



படிப்பகம்

www.padippakam.com

# அகதிகளைத் திருப்பி அனுப்ப நோட்டம்!

## அவுஸ்திரேலிய தூதர் யாழ்ப்பாணத்தில்!

அவுஸ்திரேலியாவின் தற்போதைய அரசாங்கம் இலங்கை அரசுடன் நெருக்கமான நட்பைக் கொண்டிருக்கிறது. இலங்கைக்கு விஜயம் செய்த அவுஸ்திரேலிய வெளிநாட்டமைச்சர், அரசின் தீர்வுப் பொதியைப் பாராட்டியதும், அதனை ஏற்குமாறு தமிழ்க் கட்சிகளுக்கு யோசனை கூறியதும் தெரிந்ததே.

அவுஸ்திரேலியாவில் புகலிடம் கோரியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவதிலும் அவுஸ்திரேலிய அரசு முன்னிற்கிறது.

கடந்த மாதம் இலங்கைத் தமிழர் ஒருவரை அவுஸ்திரேலிய அரசாங்கம் இலங்கைக்கு நாடு கடத்தியிருந்தது.

அவுஸ்திரேலியாவில் உள்ள இலங்கைத் தமிழ் அமைப்புக்கள் வேண்டுகோள் விடுத்தும்கூட நாடு கடத்தும் முடிவை அவுஸ்திரேலிய வெளிநாட்டமைச்சு மாற்றிக்கொள்ளவில்லை.

கொழும்பில் இயல்பான சூழல் இருக்கிறது. அங்கு உயிர்வாழ அச்சுறுத்தல் கிடையாது, என்று அவுஸ்திரேலிய அரசு தெரிவித்திருந்தது. கொழும்பில் உள்ள தூதரகம் கொடுத்த தகவல்களின்படியே தமிழ் மக்களுக்கு கொழும்பு பாதுகாப்பான இடம் என்ற முடிவுக்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் வந்திருந்தது.

சம்பத்தில் அவுஸ்திரேலிய பிரதித் தூதர் யாழ் சென்று, உள்ளூராட்சி தேர்தல் நிலவரங்களை நோட்டமிட்டுள்ளார்.

**அரச பிரசாரம்**

"மக்கள் பெரும் எண்ணிக்கையில் பங்கு கொண்டு தங்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யப்போகிறார்கள். சிவில் நிர்வாகத்தை மக்களின் பிரதிநிதிகளிடம் கொடுக்கப்போகிறோம்," என்று வெளியுலக இராஜதந்திரிகளுக்கு அரசாங்கம் கூறிவருகிறது.

அதன்பின்னரே அவுஸ்திரேலிய பிரதித் தூதர் யாழ் சென்றார். நிலவரம் அவருக்கு திருப்தியாக இருந்தால், அவுஸ்திரேலியாவில் புகலிடம் கேட்டுள்ள- யாழ் குடாநாட்டை பிறப்பிடமாகக் கொண்ட- அகதிகள் திருப்பி அனுப்பப்படுவர் என்று தெரிகிறது.

இதேவேளை சுவிற்ஸர்லாந்து, ஜெர்மன் போன்ற நாடுகள் இலங்கைத் தமிழ் அகதிகள் பலரது புகலிடக் கோரிக்கைகளை நிராகரித்துள்ளன.

சுவிஸில் இருந்து ஏற்கனவே பலர் திருப்பி அனுப்பப்பட்டும் உள்ளனர். வேறு பலர் அயலில் உள்ள நாடுகளுக்கு தப்பிச் சென்றுள்ளனர். சுவிற்ஸர்லாந்து, ஜெர்மன், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் உள்ள மனித உரிமை அமைப்புக்களது தலையீடுகள் மற்றும் வழக்குகள் காரணமாகவே புகலிடம் மறுக்கப்பட்ட மேலும்பலர் திருப்பி அனுப்பப்படாமல் உள்ளனர்.

"வடக்கு-கிழக்கில் இயல்பு நிலை திரும்பிவிட்டது; அவர்களை திரும்பி அனுப்பினால் ஏற்றுக்கொள்வோம்," என்று இலங்கை வெளிநாட்டமைச்சும் பிரசாரம் செய்துவருகிறது.

இந்நிலையில் யாழ் குடாநாட்டில் சிவில் நிர்வாகம் ஏற்பட்டுவிட்டது போன்று அரசாங்கம் பிரசாரம் செய்ய, யாழ் தேர்தல் உபயோகமாக அமையும். அவ்வாறு நடந்தால் குறிப்பிட்ட நாடுகளில் உள்ள மனித உரிமை அமைப்புக்களது குரலும் எடுபடாமல் போய்விடும். வழக்குகளும் வலுவிழந்துவிடும், என்பது தெரிந்ததே. ■

## குண்டுத் தாக்குதல்கள் நடக்கலாம்!

### கரும் புலிகளும் ஊடுருவல்?

### தேர்தல் தினத்தில் பாய்ச்சல் திட்டம்!

யாழ் மாவட்ட உள்ளூராட்சித் தேர்தல் தினமான ஜனவரி 29ம் திகதி வாக்குச் சாவடிகள்மீது புலிகள் தாக்குதல்கள் நடத்தக் கூடும் என்று படையினர் எதிர்பார்க்கின்றனர்.

1983ம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தல் வாக்களிப்புத் தினத்தன்று நல்லூர் கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் அமைந்திருந்த வாக்குச் சாவடி புலிகளால் தாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பாரிய தாக்குதல் திட்டத்துடன் கரும்புலிகளும் யாழ் நகருக்குள்ளும், ஏனைய பகுதிகளிலும் ஊடுருவியுள்ளதாக பீதி நிலவுகிறது.

இதனையடுத்தே யாழ் நகரிலும் மற்றும் யாழ் குடா நாட்டின் பல பகுதிகளிலும் பரவலான தேடுதல் நடவடிக்கைகளை படையினர் முடுக்கிவிட்டுள்ளனர்.

இதேவேளை புலிகள் தவிர்ந்த வேறு சில சக்திகளும் வாக்களிப்பு தினத்தன்று சதி முயற்சிகளில் ஈடுபடக்கூடும் என்றும் சந்தேகிக்கப்படுகிறது.

வாக்குச் சாவடிகளில் கடமைகளில் உள்ள அதிகாரிகள், படையினர் ஆகியோரை திசை திருப்புவதற்காக நாசகார வேலைகளில் ஈடுபட்டுவிட்டு, குளறுபடிகள் செய்ய முற்படலாம் என்று அஞ்சப்படுகிறது.

புலிகள்மீதுதான் பழி விழும் என்ற நம்பிக்கையில், மேற்படி இரகசிய சதி முயற்சிகள் நடக்கக்கூடும் என்று கூறப்படுகிறது.

வாக்குச் சாவடிகளுக்குள் விபரீதங்கள் எதுவும் ஏற்பட்டுவிடாமல் இருக்க வாக்காளர்கள் ஒவ்வொருவரையும் சோதனையிட்ட பின்னரே உள்ளே அனுமதிக்க உள்ளனர்.

கரும்புலிகள் உள்ளே புகுந்து தாக்கக்கூடும் என்று கருதுவதாலேயே மேற்படி ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. எனினும் தேர்தலில் போட்டியிடும் தமிழ் கட்சிகள் விடயத்திலும் படையினர் கடும் கண்காணிப்பு செலுத்துவர் என்று தெரிகிறது.

ஜனவரி 29ம் திகதி என்னாகுமோ, என்ன நடக்குமோ என்ற பீதி யாழ் மக்களிடம் காணப்படுகிறது. புலிகளின் தாக்குதல் நடக்கக்கூடும் என்ற எதிர்பார்ப்பு ஒருபுறமும், தேர்தலில் போட்டியிடும் சில கட்சிகள் இடையேயான முறுகல் நிலை எப்படி வெடிக்குமோ, என்ற அச்சம் மறுபுறமுமாக மக்கள் அங்கலாய்த்துக் கொண்டிருக்கின்றனர்.

## திம்புக் கோட்பாடு விட்டுக் கொடுப்புக்கு இடமில்லை

### அடிப்படை கோட்பாடுகள் சொற்பதங்களல்ல!

திம்புக் கோட்பாட்டில் சில மாற்றங்கள் செய்ய புலிகள் முன்வந்துள்ளதாக கூறப்படும் செய்திகளை வன்னியில் புலிகளின் வட்டாரங்கள் மறுத்துள்ளன.

பேச்சுவார்த்தை மூலம் தமிழ் மக்களின் அடிப்படை கோட்பாடுகளுக்கும், இலட்சியங்களுக்கும் தீர்வுகாண விடுதலைப் புலிகள் எப்போதும் தயாராகவே உள்ளனர்.

ஆனால், பேச்சுக்களுக்கு முன்னரே விட்டுக்கொடுப்புக்க்ள் பற்றி தமிழ் மக்களின் தலைமையிடம் வலியுறுத்துவது எவ்வகையிலும் நியாயமாகாது. சிறீலங்கா ஆட்சியாளர்களிடம் கடந்த 50 வருடகாலத்தில் பல முறை தமிழ் மக்கள் ஏமாந்துபோயுள்ளனர்.

பேச்சுவார்த்தைகள், ஒப்பந்தங்கள் என்ற பெயரில் தமிழ்த் தலைமைகளை அவர்களது அடிப்படை இலட்சியங்களை கைவிடச் செய்துவிட்டு, பின்னர் அவர்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை காற்றில் பறக்க விட்டுள்ளனர் சிறீலங்கா ஆட்சியாளர்கள்.

எனவே, உண்மையான சமாதானத்தை ஏற்படுத்த விரும்பினால், இராணுவ அழுத்தங்களை கைவிட்டு நிபந்தனையற்ற பேச்சுக்கு முன்வர வேண்டியவர்கள் ஆட்சியாளர்கள்தான் என்று புலிகளின் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

திம்புக் கோட்பாடுகளை கைவிடப் புலிகள் தயாராக இருப்பதாகவும், இராணுவ ரீதியில் புலிகள் பலவீனமானதே அதற்கான காரணம் என்றும் அரச சார்பு ஊடகங்கள் உண்மைக்கு மாறான பிரசாரம் செய்து வருவதாகவும் புலிகளின் வட்டாரங்கள் கூறியுள்ளன.

**வெறும் வார்த்தைகளல்ல**

தமிழர் தாயகம் என்பதும், தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம், அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்பதும் ஜீவாதாரமான விடயங்கள். வெறும் சொற்பதங்கள் அல்ல. வார்த்தைப் பிரயோகங்கள் அல்ல. அதனைத்தான் மாவீரர் தின உரையில் விட்டுக்கொடுக்கப்படாத நிலைப்பாடுகள் தொடர்பாக தலைவர் பிரபாகரன் திட்டவட்டமாக தெரிவித்திருக்கிறார் என்றும் புலிகள் இயக்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை திம்புக் கோட்பாடு பற்றிய மாற்றங்கள் தொடர்பாக ஆராய்வதாகக் கருத்துக் கூறிவரும் வெளிநாட்டு தமிழர்கள் புலிகளின் உத்தியோகபூர்வ பிரதிநிதிகள் அல்ல என்பதும் குறிப்பிடத்தக்கது.

## செஞ்சிலுவைச் சங்கக் கொள்ளை!

### சூத்திரதாரிகள் யார்?

வவுனியாவில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அலுவலகக் கொலை- கொள்ளை தொடர்பாக தமிழ் இயக்கம் ஒன்றின்மீது சந்தேகம் எற்பட்டுள்ளது.

9.01.98 அன்று இரவு வைரவப் புளியங்குளம் புகையிரத நிலைய வீதியில் உள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்திலேயே கொள்ளை நடவடிக்கை இடம்பெற்றது.

அலுவலகக் காவலாளியின் கழுத்து நரம்பை கத்தியால் அறுத்துள்ளனர். இவ்வாறான கொலைகளில் பழக்கப்பட்டு கைதேர்ந்தவர்களாலேயே கொலை நடத்தப்பட்டுள்ளது. முன்னர் புனர்வாழ்வு ஊழியர் ஒருவரும் வவுனியாவில் இதேபோன்றுதான் கழுத்து நரம்பை அறுத்து கொல்லப்பட்டிருந்தார்.

கொள்ளையில் ஒரு குழுவாக பலர் சம்பந்தப்பட்டுள்ளனர். பணம் இருந்த இரும்புப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு போயிருக்கிறார்கள். வாகன வசதி, ஆள்வசதி மற்றும் வவுனியாவில் சுதந்திரமாக நடமாடும் வசதி என்பவை உள்ளவர்களால்தான் இப்படியான செயலில் ஈடுபட முடியும்.

காவலாளிக்கு கொள்ளையில் ஈடுபட்டவர்களை நன்கு தெரிந்திருக்கிறது. அதனால் தான் அவரை கோரமாக கொலை செய்துள்ளனர். இல்லையென்றால் கட்டிப்போட்டு விட்டுப் போயிருப்பார்கள்.

பெருந்தொகையான பணம் இருப்பதாகக் கிடைத்த தவறான தகவலை நம்பியே கொள்ளை நடந்திருக்கிறது. ஆனால் இரும்புப் பெட்டியில் மூன்று இலட்சத்து இருபத்தையாயிரம் ரூபா மட்டுமே இருந்திருக்கிறது.

இன்னொரு தகவலின்படி, வவுனியாவில் உள்ள தமிழ் இயக்கம் ஒன்றின் அத்துமீறல் நடவடிக்கைகள் தொடர்பான விபரங்கள் செஞ்சிலுவைச் சங்க ஆண்டறிக்கையில் இருந்தனவாம். அதனை அபகரிக்கும் நோக்கத்துடனேயே கொள்ளை நடந்தது என்றும் சந்தேகிக்கப்படுகிறது. இத் தகவலை ஊர்ஜிதம் செய்ய இயலவில்லை. ■

## எச்சரிக்காமல் சூடு!

### ஈ.பி.டி.பி. எதிர்ப்பு!

யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடியில் படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் அப்பாவி வாலிபர் ஒருவர் பலியானார்.

இச் சம்பவம் தொடர்பாக ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும், யாழ் மாவட்ட எம்.பி.யுமான டக்ளஸ் தேவானந்தா கண்டனம் தெரிவித்துள்ளார்.

"ஊரடங்கு நேரத்தில் நடமாடியதால் சுடப்பட்டதாகக் காரணம் கூறப்படுகிறது. "அவ்வாறு இருந்தால்கூட எச்சரிக்கை செய்து கைது செய்திருக்கலாம். தப்பி ஓடும் சந்தேக நபரைக் கூட முதலில் காலுக்குக் கீழேதான் சுடுவது முறை. ஆனால் இங்கோ எவ்வித எச்சரிக்கையும் இன்றியே அப்பாவி வாலிபர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்."

இவ்வாறான சம்பவங்கள் தொடர்வது எவ்வகையிலும் ஆரோக்கியமானதல்ல" என்று யாழ் மாவட்ட படைத் தலைமை அதிகாரியிடம் டக்ளஸ் தேவானந்தா எம்.பி. தெரிவித்துள்ளார். ■

## எச்சரிக்கை

### போலியான சுவரொட்டிகள்!

### அநாமதேய பிரசுரங்கள்!

யாழ் உள்ளூராட்சித் தேர்தலில் பெரும்பாலான மக்கள் வாக்களிக்க மறுப்பதும், வாக்குகளை செல்லாதவையாக்குவோம் என்று கூறிவருவதும் தமிழ்க் கட்சிகளுக்கு கலக்கத்தைக் கொடுத்துள்ளது.

இதனையடுத்து மக்களை வாக்களிக்கத் தூண்டும் விதமாகவும், ஆர்வத்தை ஏற்படுத்தும் விதமான பரபரப்புக்கும் ஒரு சில கட்சிகள் திட்டமிட்டுள்ளனவாம்.

அநாமதேய துண்டுப் பிரசுரங்கள் வெளியிடுவது, தங்களுக்கு வெற்றி அலை வீசுவது போல கருத்துக் கணிப்புக்கள் வெளிவரச் செய்வது, புலிகளின் பெயரில் தமக்குச் சார்பான பிரசுரங்கள் விடுவது, சுவரொட்டி ஒட்டுவது போன்ற திட்டங்கள் உள்ளதாக தெரியவருகிறது. கடந்த காலத்தில் கிழக்கு மாகாண உள்ளூராட்சித் தேர்தல்களில் இவ்வாறான முயற்சிகள் நடந்துள்ளன.

தமிழ்ப் பத்திரிகைகள் சிலவற்றிடம் தங்களுக்கு சார்பான கருத்துக் கணிப்பு வெளியிடுமாறு இயக்கம் ஒன்று கோரியதாகவும் தெரிகிறது. எனினும் தமிழ்ப் பத்திரிகைகள் அனைத்தும் யாழ் உள்ளூராட்சித் தேர்தலுக்கு எதிரான ஒன்றுபட்ட நிலைப்பாட்டை இம்முறை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். ■

## சுரேஷ் நாடு கடத்தல்

### புளொட் கண்டனம்

உலகத் தமிழர் இயக்கத்தைச் சேர்ந்த சுரேஷ் மாணிக்கவாசகத்தை கனடாவில் இருந்து நாடுகடத்துவதை புளொட் இயக்கம் வன்மையாகக் கண்டித்திருக்கிறது.

இது தொடர்பாக புளொட் இயக்கம் விடுத்துள்ள அறிக்கையில், "இலங்கைக்கு நாடு கடத்தும் அளவுக்கு சுரேஷ் மாணிக்கவாசகம் குற்றவாளியல்ல. கனடா அரசின் முடிவு வன்மையாக கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

யாழ் குடாநாட்டில் காணாமற்போன 600 பேரின் நிலை என்னவென்று ஒரு முடிவு தெரியவில்லை. கொழும்பில் தமிழர் என்ற ஒரே காரணத்திற்காக முறையற்ற முறையிலும், கண்மூடித்தனமான முறையிலும் வகை தொகையின்றி கைதுசெய்யப்படுகின்றனர்.

இந்நிலையில் சுரேஷ் மாணிக்கவாசகத்தை நாடு கடத்த கனடா அரசு செய்த முடிவு கண்டிக்கத்தக்கதாகும்!" என்று புளொட் தெரிவித்துள்ளது. ■

## புலிகளின் நிலைப்பாடு

### வேட்பாளர்களுக்கு வேண்டுகோள்!

### புத்தி புகட்ட மக்கள் முடிவு

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலை பகிஷ்கரிக்குமாறு எந்தவொரு அமைப்பும் நேரடியாக கோரிக்கை விடுக்கவில்லை.

பகிஷ்கரிப்பு கோரிக்கை விடுத்தால், குளறுபடிகள் செய்துவிட்டு மக்கள் பகிஷ்கரிப்பு கோரிக்கையை நிராகரித்துவிட்டதாக பிரசாரம் செய்ய வாய்ப்புள்ளது. அதனால் தான் புலிகள் நேரடியாக பகிஷ்கரிப்பு கோரிக்கை விடவில்லை. ஆயினும் உள்ளூராட்சித் தேர்தலை கண்டித்தும், கேலி செய்தும் தங்கள் கருத்துக்களை 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையில் உத்தியோக பூர்வமாக தெரிவித்தே உள்ளனர்.

யாழ் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை, "சகோதரரே!" என்று விளித்துப் பிரசுரம் ஒன்றும் வெளியிடப்பட்டது. தமிழீழ விழிப்புக் குழு என்ற பெயரில் வெளியிடப்பட்ட அத் துண்டுப் பிரசுரத்தில், 'தேர்தலில் போட்டியிட வேண்டாம்' என்று வேட்பாளர்களுக்கு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

"வேண்டுகோளை மீறும் பட்சத்தில் உங்கள் முடிவை எங்கள் கையில் எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கும்!" என்று அத் துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலிகள் உட்பட எந்தவொரு அமைப்பும் நேரடியாக தமது பெயரில் பகிஷ்கரிப்பு கோரிக்கை விடுக்காதபோதும், யாழ் மக்களில் பெரும்பாலானோர் வாக்களிப்பதில்லை என்று முடிவு செய்துள்ளனர்.

**கேள்விக்குறி**

தேர்தல் கண்காணிப்புக் குழுவினரிடம் நேரடியாகவே தங்கள் முடிவை பலர் கூறியபோது குழுவினர் ஆச்சரியப்பட்டுப் போனார்களாம்.

வேறு சிலர் "வாக்குச்சீட்டுக்களில் கேள்விக்குறிகளை போடுவோம். இத் தேர்தல் எதற்கு என்ற கேள்வியாக அது இருக்கும்" என்று கூறுகிறார்கள்.

மேலும் சிலரோ "தமிழ்க் கட்சிகள் இப்படி தேர்தலுக்காக தங்களுக்குள், மோதுவதும், ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டுவதும் எமக்குப் பிடிக்கவில்லை. அதனால் சகல சின்னங்களுக்கும் பொதுவாக பெரிய புள்ளடியாக போடப்போகிறோம்" என்று கூறுகிறார்களாம்.

"வாக்களிக்காமல் இருப்பதைவிட வாக்களிக்கச் சென்று புத்தி புகட்டப் போகிறோம்" என்று யாழ் பல்கலைக்கழக வட்டாரங்களில் பேசப்படுகிறது. ■

## கிராமங்களில் தபாலகங்கள்!

### தபால் அமைச்சு திட்டம்!

தபால் சேவையை மேலும் இலகுபடுத்துவதற்கு ஏற்ற விதத்தில் நாடளாவிய ரீதியில் கிராமங்கள் தோறும் முகவர் தபாலகங்களை அமைப்பதற்கு தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சும் அஞ்சற் திணைக்களமும் நடவடிக்கை எடுத்து வருவதாக தபால் மா அதிபர் திருமதி கொட்டகதெனிய தெரிவித்துள்ளார். கிராமங்களில் முகவர் தபாலகங்களைத் திறப்பதற்கு ஆர்வமுள்ளோர் உடனடியாகத் தபால் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளார்கள்.

மலையகத்திலுள்ள தோட்டப் புறங்களிலும் முகவர் தபாலகங்களை அமைக்க ஆர்வமுள்ளோர் முன்வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

நாட்டின் இதர பகுதிகளைவிட தோட்டப்புறங்களில் நீண்டகாலமாக தபாலகங்களின் தேவை மிக மிக வேண்டியதாக இருந்துவருகிறது.

தற்போதுள்ள தபாலகங்கள் தோட்டப் புறங்களை விட்டு மிக அதிக தொலைவில், போதுமான வசதிகளின்றி அமைந்துள்ளதால் தோட்டத் தொழிலாள மக்கள் அஞ்சலகத்தில் முடிக்கவேண்டிய அலுவல்களுக்காக ஒரு நாள் லீவு எடுத்துக் கொண்டே வரவேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது.

ஆதலினால் இவ்வேளையில் தோட்டப் புறங்களிலுள்ள தொழிலாள மக்களின் நன்மை கருதி அவர்களது காலடிக்கே முகவர் தபாலகங்கள் அமைப்பதற்குக் கிடைத்துள்ள வாய்ப்பைப் பயன்படுத்தித் தோட்டப் புறங்களில் முகவர் தபாலகங்களை அமைக்க ஆர்வமுடையோர் முன்வருமாறு கேட்கப்படுகின்றனர். ■

## சுகவீனத்திற்காக லீவு தரவில்லை!

### புலிகளிடம் தப்பியோட்டம்!

மட்டக்களப்பு-முறக்கொட்டாஞ்சேனைப் படைமுகாமிலிருந்த சிப்பாய் ஒருவர் தனது பெற்றோருக்குச் சுகவீனம் ஏற்பட்டிருப்பதாகக் கூறி படை அதிகாரியிடம் லீவு கேட்டாராம். எனினும் அவரது லீவுக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதால் மன்முடைந்த அவர் படைமுகாமைவிட்டு மெல்ல நழுவிப் புலிகள் இயக்கத்தினரிடம் தப்பியோடிச் சரணடைந்துள்ளார்.

அவர் தனக்கு நேர்ந்த துர்ப்பாக்கிய நிலையைப் புலிகளிடம் விளக்கிக் கூறி தனது வீட்டுக்கு அனுப்பும் வழிவகையில் உதவி செய்யுமாறு கேட்டுள்ளாராம். புலிகள் இயக்கத்தினரும் அவரை விடுவித்து அனுப்புவதற்கு உதவுவார்கள் என்றே கூறப்படுகிறது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னரும் மட்டக்களப்பு களுவன்கேணியில் இவ்வாறே ஒரு படைவீரர் புலிகள் இயக்கத்தினரிடம் ஓடித் தப்பிச் சரணடைந்தார். அவரையும் புலிகள் இயக்கத்தினர் விடுவித்து வீட்டுக்கு அனுப்பிவைத்தனர்.

இதேவேளை மட்டக்களப்பு மாவடிவேம்பில் வைத்துப் புலிகள் இயக்கத்தினர், தாம் கடத்திச் சென்ற படைவீரரை நல்லெண்ண நோக்கத்திற்காக தைப்பொங்கலுக்கு மறுநாள் விடுவித்தனர். ■

## கண்டித்தார் - தண்டித்தார்கள்!

### மனிதாபிமானி தற்கொலை!

மட்டக்களப்பு- ஆரையம்பதியில் கடந்த மாத இறுதியில் புலிகள் இயக்கத்தின் பிஸ்டல் குழுவினரால் சந்தைக்குள் வைத்து ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். அதன் பின்னர் ஆரையம்பதி வண்ணான் துறையடியில் இளைஞரொருவர் கழுத்தில் சுருக்கிட்டுக் கட்டித் தொங்க வைக்கப்பட்டபின் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார். ஏழு தடவைகள் அவர் மீது சுடப்பட்டிருந்தது. இனந்தெரியாதோரால் அவர் சுடப்பட்டதாக அப்போது தெரிவிக்கப்பட்டது. ஆனால் அவரைச்சுட்டவர்கள் ரெலோ இயக்கத்தினர் என்பது பொதுமக்களுக்குத் தெரியாமலில்லை.

ஒரு அப்பாவியானவரை இப்படி அநியாயமாகக் கொல்லலாமா, என்று தனது உறவினர்களான- சம்பந்தப்பட்ட ரெலோ இயக்கத்தினரிடம் பரிந்து பேசினார் ஒரு மனிதாபிமானி. தாங்கள் செய்ததைக் குறை கூறி இப்படியொருவர் கண்டிப்பதைப் பொறுத்துக் கொள்ளாத அந்த ரெலோ அங்கத்தவர்கள் அவரைத் தாக்கியுள்ளனர். மனிதாபிமானத்திற்காகத்தான் பரிந்து பேசியதால் மனிதாபிமானமற்றவர்களால் அடிபட நேர்ந்துவிட்டதே என்று எண்ணிக் கலக்கமுற்றிருந்த அவர் விஷம் அருந்தித் தற்கொலை செய்துகொண்டார்.

இவ்விதம் சாவை அணைத்துக் கொண்டவர் ஆரையம்பதி பிரதேச சபைத் தலைவரும் (ரெலோ) ரெலோ முக்கியஸ்தருமான திரு. றொபேட் நவரெத்தினராசாவின் மைத்துனருமான திரு. சிவகுமார்(30) ஆகும். பிரதேச சபைத் தலைவரின் சகோதரியையே அவர் திருமணம் செய்திருந்தார். இரு பிள்ளைகளையும் மனைவியையும் தவிக்கவிட்டு அவர் மனிதாபிமானம் பேசி மனமுடைந்து சாவை அணைத்துக் கொண்டார்.

இதனிடையே, ரெலோ இயக்கத்திலுள்ள அந்த உறுப்பினர்களின் மற்றொரு குடும்ப உறுப்பினர் புலிகள் இயக்கத்தில் உள்ளாராம்.

ஆரையம்பதியிலுள்ள ஒரே குடும்பத்தவர்களில் குறைந்தபட்சம் எவராவது வெவ்வேறு இயக்கங்களில் பங்கு பற்றியிருக்கின்றனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ■



படிப்பகம்

www.padippakam.com

# தரங்குறைந்த மா இறக்குமதி
## கொழும்பு ஆங்கில இதழ் தகவல்

கடந்த டிசம்பர் மாதம்-முக்கியமான பண்டிகை காலத்தில்- நாடெங்கிலும் பாண் தயாரிப்புக்கான மா தட்டுப்பாடு ஏற்பட்டது. இத்தகைய மாத்தாட்டுப்பாடு பரவலாக நாடெங்கும் இருந்த போதிலும், இத்தட்டுப்பாடு உண்மையானதல்ல; வீண் வதந்தி என்று அரசாங்கம் திரும்பத் திரும்பக் கூறி வந்தது.

உண்மையிலேயே மாவுக்குத் தட்டுப்பாடு இருந்தமை இப்பொழுது வெளிச்சத்துக்கு வந்திருக்கிறது. இத்தட்டுபாட்டைச் சமாளிக்க பிற நாடுகளிலிருந்து தரக்குறைவான மா, ஏராளமான பொருட்செலவில் தருவிக்கப்பட்டுள்ளது.

வருட முடிவில் ஏற்பட்ட மா தட்டுப்பாட்டுக்கு திருமலை-பிரிமா மா ஆலைக்கு கோதுமை ஏற்றி வந்த 'அவதனா' கப்பலை எல்.ரி.ரி.ஈ. தாக்கியமையே காரணம் என்று உணவுத்துறையுடன் தொடர்புடைய அதிகாரிகள் குற்றஞ் சாட்டினர். ஆனால் கோதுமைப் பொதிகளை ஏற்றி வரும் கப்பல்கள், காலித்துறைமுகத்துக்கு கொண்டு வரப்பட்டு, அங்கிருந்து கடற்படையின் பாதுகாப்புடன் திருகோணமலைத் துறைமுகத்துக்கு வெகு தூரத்துக்கு அப்பால் கப்பல் நிறுத்தப்பட்டு அங்கிருந்து பிரிமா ஆலைக்கு சிறு கப்பல்கள் மூலம் கோதுமை கொண்டு வர மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

1997 மே மாதத்தில்தான் 'அவதனா' கப்பல் தாக்கப்பட்டது. அதன் பின்னரும் பிரிமா ஆலையிலிருந்து மா சிரமமின்றி நாடெங்கும் விநியோகிக்கப்பட்டு வந்துள்ளது.

பாண் உற்பத்திக்குத் தகுதியில்லாத மாவினை கடந்த வருட ஆரம்பத்திலிருந்தே உணவுத் திணைக்களமும் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையமும் தருவித்து வந்துள்ளது. இதனை கடந்த ஏப்ரல் மாத ஆரம்பத்திலேயே பிரிமா ஆலையின் பிரதான நிர்வாகி, கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவகத்தின் ' தலைவருக்குச் சுட்டிக் காட்டியுள்ளார்.

எல்.ரி.ரி.ஈ.யினரின் தாக்குதலால் மா தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டி தரமற்ற கோதுமைத் தானியத்தை கூ.மொ.நிறுவனம் தருவித்திருக்கிறது. இதனால் பலகோடி ரூபா நஷ்டமேற்பட்டிருப்பதாக நம்பப்படுகிறது. கோதுமை இறக்குமதியில் மோசடிகள் பெருகி வருவதைத் தொடர்ந்து, ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க உடனடியாக கோதுமை இறக்குமதியை நிறுத்திவிடுமாறு கடந்த வருடம் மே 29ம் திகதி கட்டளை பிறப்பித்தார்.

இவ்வாறு இடம்பெற்ற முறைகேடுகளினாலேயே பண்டிகை காலத்தில் மாவுக்கு நாடு தழுவிய ரீதியில் பெரும் தட்டுபாடு ஏற்பட்டிருக்கிறது என்பது தெரிய வந்துள்ளது. இத் தகவல்களை 'சண்டே லீடர்' வெளியிட்டுள்ளது.

## நாணய சபைக்கு திருப்தியில்லை

சிறிலங்காவின் உற்பத்தித்திறன் போதுமான அளவு முன்னேற்றம் காண்பதாகத் தெரியவில்லை. இதனால் செலவினங்கள் அதிகரிக்கின்றன. நாட்டின் நிதி நிலமையைச் சீர்படுத்துவதற்கேற்ற வழி முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. சர்வதேச நாணய சபை இவ்வாறு தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியிருக்கிறது.

அரசுடமையான இரு வங்கிகளும் வர்த்தக ரீதியில் பணத்தை முதலீடு செய்வதற்கான சுதந்திரமாச் செயற்படும் அதிகாரம் கொண்டவையாக இயங்க வேண்டும் என்று சர்வதேச நாணய சபை பரிந்துரைத்துள்ளது.

கோதுமை மா கொள்வனவு மற்றும் இவை போன்றவற்றுக்கு வழங்கப்படும் மாநியம் நிறுத்தப்படவேண்டும் என்றும் இச்சபை பரிந்துரைக்கிறது. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தி உண்மையான பொருளாதார மேம்பாட்டுக்கான முதலீடுகளைத் துரிதப்படுத்த வேண்டும் என்பதும் மேற்படி அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள பிரதான அம்சமாகும்.

# கடகட பஸ் வண்டி
## பயணிகள் பாடு அரோகரா

(திருமலை நிருபர்)

திருக்கோணமலையிலிருந்து குச்சவெளி செல்லும் பஸ் சேவை மிகவும் சீர்கேடடைந்துள்ளதாக அப்பகுதிப் பிரயாணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

உப்புவெளி, மூன்றாம் கட்டைச் சந்தி, அலன்தோட்டம், சாம்பல்தீவு, சல்லி, நிலாவெளி, கும்புறுபிட்டி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தங்கள் போக்குவரத்துக்காக இந்த பஸ் சேவையையே நம்பி இருக்கின்றார்கள். இதேபோல் அப்பகுதிகளில் கடமையாற்றும் அரச ஊழியர்களும் நகரிலிருந்து இப்பாதை வழியாகச் செல்லும் பஸ் வண்டிகளையே எதிர்பார்க்கின்றனர்.

ஆனால் இந்தப்பகுதிக்கு விடப்படும் பஸ் வண்டிகள் அடிக்கடி பழுதடைந்து விடுகின்றன. தினமும் ஒரு பஸ் வண்டியாவது வருகிற வழியில் படுத்துவிடுகிறது. இவ்வண்டிகளில் பிரயாணம் செய்பவர்கள் கூடுதல் பணத்துடனும், நேர அவகாசத்துடனும்தான் பயணம் செய்யவேண்டி இருக்கிறது. முழுப் பயணத்துக்கான கட்டணத்தைச் செலுத்திவிட்டு பாதிவழியில் இறங்கி நின்று ஏதாவது வாகனம் வருகிறதா என்று பார்த்து, அதில் தொற்றிக் கொண்டு பயணத்தைப் பூர்த்தி செய்வது அன்றாட நிகழ்ச்சியாகி விட்டது.

கடந்த ஐந்தாம் திகதி குச்சவெளிக்குச் சென்ற பஸ் கும்புறுபிட்டியில் வைத்து மூச்சை நிறுத்திக் கொண்டதால் பயணம் செய்த பயணிகள் பாதிக்கப்பட்டதுடன், நகருக்குத் திரும்பிவர வேண்டிய ஆசிரியர்கள், அரச ஊழியர்கள் வேறு வண்டி இல்லாத நிலையில் அக்கம் பக்கத்திலுள்ள வீடுகளில் இரவைக் கழிக்க வேண்டியதாயிற்று.

ஏனைய மார்க்கச் சேவைகள் ஒழுங்காகவும் அடிக்கொரு தடவையும் நடைபெறும்போது இப்பகுதிச் சேவை மாத்திரம் இரண்டாந்தரமானது எப்படி என்று கேட்கிறார்கள் இங்குள்ள மக்கள்.

நிறுவனத்தின் பெயரை மாற்றி, பெயின்ட்டையும் மாற்றிக் கொண்டால் மட்டும் போதாது; வாகனத்தில் இயந்திர உதிரிப் பாகங்களை மாற்றிக் கொண்டால் தான் நல்ல சேவையை மக்களுக்கு வழங்க முடியும் என்பதை நியூ ஈஸ்டன் பஸ் கம்பனி உணருமா?

# கடைக்குக் கடை நிறுத்தி பொருட்கள் கொள்வனவு!
## முறைகேடான பஸ் சாரதிகளும் நடத்துநர்களும்

மட்டக்களப்பு மாவட்டத்தில் பொதுமக்களின் போக்குவரத்துச் சேவைக்கு மதிப்பளித்து கடமையிலீடுபடும் ஊழியர்கள் மிக அரிதாகவே காணப்படுகின்றனர். கடமை ஒழுங்கும் பண்பும் தெரியாத சாரதிகளாலும், பஸ் நடத்துநர்களாலும் அடிக்கடி பயணிகள் மனம் சலிக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன.

சென்ற 05.01.1998 அன்று மட்டக்களப்பிலிருந்து வாழைச்சேனை நோக்கி பகல் 11.15க்கு இல. 61-6826 பஸ் நிறைந்த பயணிகளுடன் புறப்பட்டது. புறப்பட்ட மாத் திரத்தில் கடைக்குக் கடை பஸ்ஸை நீண்ட நேரம் நிறுத்திவைத்து சாரதியும் நடத்துநரும் ஆளாளுக்கு ஒவ்வொரு பக்கம் இறங்கிச் சென்று பொருட்கள் வாங்குவதில் ஈடுபட்டனர். இவ்வாறு 5 கடைகளுக்குச் சென்று பொருட்கள் வாங்கியதில் சுமார் அரை மணி நேரத்தைச் செலவிட்டனர். வீதியோரத்தில் தகிக்கும் வெய்யிலில் பஸ் நிறுத்தப்பட்டுக்கிடந்ததால் குழந்தைகள், நோயாளிகள், வயோதிபர்கள், பெண்கள் போன்றோர் கொட்டும் வியர்வையால் சலிப்படைய வேண்டியிருந்தது. எட்டு மைல் தூரமுள்ள ஏறாவூரை பஸ் சென்றடைய ஒரு மணித்தியாலம் 10 நிமிடம் எடுத்தது.

குறித்த நேரத்தில் கடமைக்குச் செல்வதற்காக பஸ்களில் ஏறிக்கொள்ளும் பயணிகள் இத்தகைய முறைகேடானவர்களின் நடத்தைகளினால் பல இழப்புக்களைச் சந்திக்கவேண்டியுள்ளது. பயணிகளைப் பற்றிக் கருத்திற்கொள்ளாத சாரதிகள், நடத்துநர்கள், மற்றும் அலுவலர்களுக்கெதிராக சம்பந்தப்பட்ட உயரதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இது போக்குவரத்து அமைச்சருக்குச் சமர்ப்பணம்.

# புதிய இடத்தில் சோதனை! – வர்த்தகர்கள் அதிருப்தி

(மன்னார் நிருபர்)

வெளியிடங்களில் இருந்து மன்னார் நகரத்திற்கு கொண்டுவரப்படும் பொருட்களை சோதனையிடும் நடவடிக்கை கடந்த 6.01.98 முதல் முள்ளிப்பள்ளம் என்ற இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

முன்னர் மன்னார் கூட்டுறவு செயலகக் கட்டிட வளவிற்குள் இந் நடவடிக்கை இடம்பெற்று வந்தது. தற்போது புதிய இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளதால் நகரில் உள்ள வர்த்தகர்கள் பெரும் சிரமப்பட்டு வருகின்றனர்.

லொறிகளில் வரும் பொருட்களை உரியவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டு வருவதற்காக 4 கிலோமீட்டர் தூரம் வரை செல்ல வேண்டியுள்ளதாகவும், அப்பொருட்களை நகருக்குக் கொண்டுவர மேலதிக செலவுகள் சில வேளைகளில் ஏற்படுவதாகவும் வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் பாதுகாப்பு இணைப்பதிகாரி ஊடாக அனுமதி பெறப்பட்டு கொண்டு வரப்படும் பொருட்களின் அளவு தற்போது மட்டுப் படுத்தப்பட்டுள்ளது. இதனால் நகரில் சில பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு வருவதுடன் விலைகளும் அதிகரித்து விடுகின்றன.

முன்பு தள்ளாடி இராணுவ முகாமுக்குள் இருக்கும் இராணுவ இணைப்பதிகாரியிடம் அனுமதி பெற வேண்டிய சகல விடயங்களும் தற்போது சனி விலேஜ்க்கு மாற்றப்பட்டுள்ளன. இதனால் இனிமேல் எவரும் தள்ளாடி இராணுவ முகாமிற்குச் செல்ல முடியாது.

இதேவேளை மன்னார் கச்சேரியைச் சுற்றி முட்கம்பிவேலிகள் அமைக்கப்பட்டு இராணுவ முகாம் போல் காட்சி தருகிறது. கச்சேரிக்குள் செல்லும் சகலரும் சோதனை செய்யப்பட்ட பின்பே உள்ளே செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

சிவில் நிர்வாகத்தைக் குலைக்க கச்சேரி தாக்கப்படக்கூடும் என்ற காரணத்தினாலேயே இந் நடவடிக்கை இடம் பெற்று வருவதாகத் தெரிய வருகிறது.

## மூதூர்-திருமலை படகுச்சேவை

மூதூர்-திருமலை படகுச்சேவை ஒழுங்கான முறையில் நடைபெறுவதில்லை. இரண்டு படகுகள் சேவையில் ஈடுபடுகின்றன. அடிக்கடி இயந்திரக் கோளாறு காரணமாக ஒரு படகு மட்டுமே சேவையில் ஈடுபடுகின்றது.

மூதூர் பிரதேச மக்கள் தங்களுடைய பலதேவைகளுக்காக தினமும் குறைந்தது 1500 பேர் வந்து செல்கின்றனர்.

எனவே மக்களின் நலன் கருதி திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் புதிய படகொன்றை சேவையில் ஈடுபடுத்த முன்வருவார்களா?

அ. அச்சுதன், சேனையூர்–06.


மட்டக்களப்பு மாந்திரீகம்

உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கு, மட்டக்களப்பு மாந்திரீக வசியம் செய்து கொள்வதற்கு பரம்பரை வைத்திய மனோதத்துவ நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள். இரகசியம் வெளியாகாது.

DR. A.P.S. KUTTY
50, THEATRE ROAD
NINTAVUR-21
SRI LANKA.

மகிழ்ச்சியான மணவாழ்விற்குப் பொருத்தமான துணையைத் தேடுகிறீர்களா?

உங்களுக்கு உகந்த மணமகனை அல்லது மணமகளை விரும்பிய நாட்டில் தெரிவு செய்யலாம். நேரடியாக நீங்களே தொடர்பு கொள்ள வசதிசெய்து தரப்படும். திருமணம் நிச்சயிக்கப்படுமிடத்து தேவையெனில் விசா தொடர்பான சேவையும் வழங்கப்படும். விபரங்களுக்கு தொடர்பு கொள்க.

RAJAH INTERNATIONAL MARRIAGE PROPOSALS
P.O.BOX-1050
EPPING MDC. VIC. 3076
AUSTRALIA.

விளம்பரப் பகுதி

UNION
யூனியன் மோட்டிஸ் கதவு பூட்டுக்கள்
Single, Double, Night Latch & Sliding Locks, (English Origin)
றம்சன்ஸ்
443, பழைய சோனகத் தெரு.
கொழும்பு - 12.
தொலைபேசி - 431511, 434411

விளம்பரச் சேவை
(உங்கள் வசதியை முன்னிட்டு)
தமிழ், சிங்களம், ஆங்கிலம்
இலங்கையில் பிரசுரமாகும் சகல மொழிகளிலான பத்திரிக்கைகளில், உங்கள் விளம்பரங்களை பிரசுரிக்க எம்மை தொடர்பு கொள்க.
Tel: 695890 Fax: 684809

மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHOTHERAPHY)

வவுனியாவிலும் சந்திக்கலாம்

இளைஞர்களே! மனோதத்துவ சிகிச்சை மூலம் அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்குங்கள். உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை. இளம் சமுதாயத்தினர் மெலிந்து, கனவில் சக்திமிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்கள் மனோதத்துவ சிகிச்சை அளித்து உடன் நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

SEXUAL DISORDERS

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 90 நிமிடத்தில், தான்வீரியம் உள்ள ஆண்மகனாக்கி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் வசிப்போருக்கு

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான விளக்கத்துடன் கடிதத் தொடர்பு மூலம் அறிவித்தால் மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம். (பதில் தவறாது பெற தபால் செலவுக்குப் பணம் அனுப்பவும்)

மனநிலை பாதிப்புக்கள்; மன நோயகள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம் பயோரியா, வெள்ளைபோதல், நீரிழிவு, கிரந்தி நோய்க்கும் குழந்தைப்பேறு இன்மைக்கும், தீர்க்க முடியாத வியாதிக்கும் மருந்து உண்டு. விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்.

கவனத்திற்கு! புதிய செல்டெல் No. 072-609388

கொழும்பில் ஜனவரி 19 முதல் 28 வரை

DR.P.ARUMUGAM
AHAMED TOURIST INN
BANG BANG BUILDING No. 10, Reclamation Road,
(entrance: Bankshall St, Opposits Renjanas) Colombo-11.
T.P. 436383, 436390.

கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் No. 072-609388
கொழும்பில் முன்கூட்டியே பதிவு செய்யவும்.

ஓட்டமாவடியில் பெப்ரவரி 4. 5ம் தினங்களில்
Dr. முகைதீன் டிஸ்பென்சரி, ஓட்டமாவடி. T.P.065-57345

கல்முனையில் பெப்ரவரி 7.8.9.10ம் தினங்களில்
T.M.M. பாமசியிலும் T.P.065-29329

வவுனியாவில் பெப்ரவரி 14.15.16.17ம் தினங்களில்
வன்னியில் ஞான வைரவர் கோவில் வீதி, VANNI INN இல் சந்திக்கலாம்
T.P.024-22074ல் முன்கூட்டியே பதிவு செய்யவும்

மற்றைய நாட்களில் Dr.P.Arumugam
No.33. Tissa Weerasingam Sq.,
Boundary Road, Batticaloa விலும் சந்திக்கலாம்.

விஞ்ஞானம்

* விஞ்ஞானம் ஆண்டு 11 -73/= (குறிப்புகள், விரிவான வினா-விடை)
* விஞ்ஞானம் ஆண்டு 10 -77/= (குறிப்புகள், விரிவான வினா-விடை)
* விஞ்ஞான விளக்கம் ஆண்டு 10,11-32/= (210 வினா-விளக்கம்)
* விஞ்ஞானச்சுருக்கம் ஆண்டு9,10,11-23/= (ஆண்டு 9 முதல் 11 வரை சுருக்கம்)
* விஞ்ஞானம் ஆண்டு 9 -70/= (குறிப்புக்கள், விரிவான வினா-விடை)
* விஞ்ஞானம் துரித மீட்டல் O/L -42/= (பகுதி I, பகுதி II வினா-விடை)
* கணிதம் துரிதமீட்டல் O/L -42/= (பகுதி I, பகுதி II வினா-விடை)

(ஆசிரியர்: திலீபன்)

ஆசிரியர்: ஆ. யோகராஜா
எல்லா புத்தக சாலைகளிலும் கிடைக்கும்
தொடர்பு:
A. JOGARAJAH,
90/1. CHRISTURAJA MW,
NAYAKKANDA, HENDALA,
WATTALA.

BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
கல்வி நெறிகள்
★ 90 Days Spoken English
★ 90 Days Spoken Sinhala
★ Method of Book-Keeping
★ Method fo Computerised Book-Keeping & Accountancy (MCBA)

மேற்படி பாடநெறிகள் நேரிலும்/தபால் மூலமும் நடைபெறுகின்றன. வகுப்பு நேர விபரங்களை நேரிலோ, தொலைபேசியிலோ, தபால் மூலமோ அறிந்து கொள்ளலாம். மேலதிக விபரங்களுக்கு கீழ்க் காணும் விண்ணப்ப படிவத்துடன் தொடர்பு கொள்க.

விரும்பும் பாடநெறி:.................
பெயர்:.................
முகவரி.................

BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
S-27, First Floor, P.O. Box-162,
Colombo Central Super Market Complex.
Colombo -11. Tel: 434770, 074-718592

நவீன தொழில் நுட்பம்
ஆயுள் பூராவும் உழைக்கக்கூடிய உத்தரவாதம்
PHOENIX
பைசிக்கள்
அசல் நூறு வீதம் சீனாவின் தயாரிப்பு




பைசால் ஹாட்வெயார் ஸ்டோர்ஸ்
(FAIZAL HARDWARE STORES)
74, டாம் வீதி, கொழும்பு 12. தொலை: 433727
பெக்ஸ்: 446088, E-mail - faisto@sri.lanka.net
இலங்கை மக்களின் ஏகோபித்த தெரிவு - பீனிக்ஸ் பைசிக்கள்

ரிஷி அஜமாமிச லேகியம்
(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 250/=,150/=
தங்க பஸ்பம் கலந்தது 1125/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 1025=

ஞான சுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு,
கொழும்பு 11,
போன்: 421398




படிப்பகம்

www.padippakam.com

# கைக்கெட்டாத காலவரையறை

## பொன்விழாவில் நிறைவேறாத கனவு

**இரண்டாம் உலகப்போரில் 'ஒப்பரேசன் பார்பரோசா' இலங்கைப் போரில் 'ஒப்பரேசன் ஜயசிக்குறுய்' 250 நாட்கள் பூர்த்தி. நீண்ட சமர்!**

பெப்ரவரி நாலாம் திகதிக்கு முன்னர் வவுனியா-யாழ் தரைப்பாதையை திறந்துவைத்த வெற்றிச் செய்தியை சுதந்திரப் பொன்விழா மேடையில் வைத்து ஜனாதிபதியிடம் கையளிக்க நினைத்தார் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர்.

**முன்னர் இப்படித்தான் 'யாப்பா பட்டுன'வை கைப்பற்றிவிட்ட செய்தியையும் பேழை ஒன்றில் வைத்து ஜனாதிபதியிடம் கையளித்தார் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர்.**

சுதந்திர தின பொன்விழாவை முன்னிட்டும் இன்னொரு பேழையை கையளிக்கவே பல முனைகளில் படை நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டன.

**நாட்டை ஒன்றுபடுத்துவது என்று தமது முயற்சிக்கு அரசாங்கம் காரணம் கூறினாலும்கூட, சுதந்திர தினத்துக்கு முன்பாக தரைப்பாதை திறக்கப்படுமானால் தமிழ் மக்கள்மீதான வெற்றியாகவும், தமிழர் பலம் வெற்றிகொள்ளப்பட்ட நிகழ்வாகவுமே பேரினவாதிகளால் கொண்டாடப்படும்.**

யாழ் குடாநாட்டை படையினர் கைப்பற்றிய தருணத்தில் தென்னிலங்கையில் ஏற்பட்ட பெரும்பான்மை இன பெருமித உணர்ச்சிகளை அரசாங்கம் கண்டும் காணாமல் இருந்ததுடன், அந்த உணர்ச்சிகள் வற்றிவிட முன்பாக தெற்கில் மாகாண சபைத் தேர்தல்களை நடத்தி முடித்துவிடலாமா என்றுகூட யோசிக்கப்பட்டது.

தமது தளப் பிரதேசத்தை மாற்றிக் கொண்ட புலிகள், தமது தாக்குதல்களை தொடுத்ததும், முல்லை முகாமை கைப்பற்றியதும்தான் அரசாங்கத்தின் தேர்தல் வியூக கணக்குகளைப் பொய்யாக்கியது.

கோணலான தமது கணக்குகளை நேராக்கவே வன்னியில் பாரிய படை நகர்வை அரசாங்கம் ஆரம்பித்தது.

**விரைவான வெற்றி பற்றிய நம்பிக்கையில் ஆரம்பித்த 'ஜயசிக்குறுய்' பலத்த ஆட்பல, ஆயுதபல இழப்புடன் எட்டு மாதங்களை கடந்துவிட்டது. 22.01.98 அன்று 250 நாட்களை பூர்த்தி செய்துள்ளது.**

**இலங்கையில் மட்டுமல்லாமல், ஆசியாவிலேயே மிக நீண்டகாலம் நடைபெறும் சமராக 'ஜயசிக்குறுய்' மாறியிருக்கிறது.**

இரண்டாம் உலகப் போர் காலத்தில் ஹிட்லரின் படைகள் சோவியத் யூனியன் மீது பாரிய படையெடுப்பு ஒன்றை ஆரம்பித்தன.

'ஒப்பரேசன் பார்பரோசா' என்று அதற்கு பெயர் சூட்டியிருந்தனர்.

இரண்டாம் உலகப் போர் காலத்தில் நடைபெற்ற மிகப்பெரும் சமர் என்று அதனை அழைக்கலாம். 'ஒப்பரேசன் பார்பரோசா' இரண்டு வருட காலம் தொடர்ச்சியாக நடைபெற்றது.

சமரின் முடிவில் ஜெர்மன் படைகள் பாரிய இழப்புக்களுடன் படுதோல்வியைத் தழுவின. அந்தச் சமர்தான் உலகப் போரில் ஜெர்மனியின் வீழ்ச்சிக்கு கட்டியம் கூறுவதாகவும் அமைந்தது.

ஒப்பரேசன் பார்பரோசாவுக்கு அடுத்ததாக நீண்ட காலமாக நடைபெறும் சமர் 'ஒப்பரேசன் ஜயசிக்குறுய்'.

போர் என்பதும் சமர் என்பதும் போர் அகராதியில் ஒன்றல்ல. போர் நீண்டகாலம் நடக்கும். அந்தப் போரில் பல சமர்கள், சண்டைகள் உள்ளடக்கப்பட்டு இருக்கும்.

இரண்டாம் உலகப்போர் ஆறு வருடங்கள் நடந்தது. ஆனால் அந்த போருக்கு உட்பட்ட சமர்கள், சண்டைகள் என்பன வெவ்வேறு முனைகளில் சில நாட்களோ, சில மாதங்களோதான் நடைபெற்றன.

**இலங்கையிலும் வடக்கு-கிழக்கில் போர் நீண்டகாலம் நடைபெற்றுவருகிறது. ஆயினும் ஒரு குறிப்பிட்ட முனையில் அல்லது களத்தில் நீண்ட பல மாதங்களாக நடைபெறும் முதல் சமர் தற்போது நடைபெறும் வன்னிச் சமர்தான்.**

ஜெர்மன் படையினருக்கும், சோவியத் படைகளுக்கும் இடையிலான யுத்தத்தின் போது சோவியத் படைகளும் ஆட்பலத்தில் மோலோங்கி இருந்தன. ஜெர்மன் படையினரைவிட அதிக எண்ணிக்கையான மக்கள் சோவியத் படையில் இணைந்தனர்.

மரபுப் போரில் ஈடுபடத்தக்க விமானங்கள், டாங்கிப் படையணிகள், மற்றும் ஆயுத தளபாட வசதிகளும் சோவியத் படையிடமும் இருந்தன.

எனவே இரண்டு வருட காலம் ஜெர்மன் படைகளுக்கு தண்ணிகாட்டிவிட்டு, இறுதியில் மரண அடி கொடுக்க முடிந்தது.

**ஆனால் வன்னிச் சமரில் ஒருபுறம் ஆட்பலம், ஆயுத தளபாட பலம் என்பவற்றில் மலையளவான மரபுப்படையும், மறுபுறம் ஆட்பல, மரபுப்போருக்கான ஆயுத தளபாட வசதியில் மடு அளவான கெரில்லா படையும் மோதுகின்றன.**

பலம் வாய்ந்த மரபுப் படையும், இயக்கமொன்றின் ஆயுதப் படையும் குறிப்பிட்ட களத்தில் மிக நீண்டகாலம் சமரில் ஈடுபடுவது போர் வரலாற்றில் இதுதான் முதற் தடவை என்று கூறலாம்.

**அது மட்டுமல்லாமல் கடந்த எட்டுமாத கால யுத்தத்தில் அரச படைகளிடம் இருந்தே மரபுப் போர் ஆற்றலை பெருக்கிக் கொள்ளும் ஆயுத தளபாடங்களையும், வெடி பொருட்களையும் மட்டுமன்றி மருந்துப் பொருட்களையும் புலிகள் கைப்பற்றியுள்ளனர்.**

'ஜயசிக்குறுய்' படை நடவடிக்கை தொடர்வதால் இருதரப்பிலும் ஆட்பல இழப்புக்கள் ஏற்பட்டு வருகின்றன.

**ஆயினும் படையினரைவிட புலிகளுக்கு 'ஜயசிக்குறுய்' மூலம் அரசியல் இராணுவ ரீதியான பலன்கள் கிடைத்துள்ளன.**

எட்டுமாத காலமாக தரைப்பாதையை திறக்க படையினரால் முடியாமல் போனமையானது, புலிகளின் இராணுவ ஆற்றல் தொடர்பாக குறைத்து மதிப்பிட முடியாது என்ற உண்மையை உள்நாட்டில் மட்டுமன்றி வெளியுலகின் முன்பாகவும் எடுத்துக் காட்டியுள்ளது.

**யாழ் சமரின் பின்னர் புலிகளுடன் பேசத் தேவையில்லை என்று வெகு அலட்சியமாக கூறிவந்த அரசாங்கம், இப்போது அவ்வாறு கூறமுடியாத நிலையில் இருக்கிறது.**

புலிகளின் அரசியல், இராணுவ நிலைப்பாடுகளுக்கு அப்பாற்பட்ட வகையில் இலங்கையில் அமைதியைக் கொண்டுவர முடியாது என்பதை சர்வதேச நடுநிலையாளர்கள் நன்கு உணர்ந்து கொண்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் சூரியக் கதிர் இராணுவ நடவடிக்கையின் பின்னர் தமிழ் மக்களிடம் ஏற்பட்டிருந்த நம்பிக்கையீனங்கள் படிப்படியாக களையப்பட்டு வருகின்றன. எட்டு மாதச் சமரில் புலிகளின் தாக்குதல்களும், தாக்குப் பிடிக்கும் ஆற்றலும் புலிகள்மீதான நம்பிக்கைகளை உருவாக்கி உள்ளன.

பின்வாங்குவது, தமது அணிகளைப் பாதுகாக்க சில பகுதிகளை விட்டு அகல்வது, தொடர்ந்து போரிடத் தக்கதாக முரட்டுத்தனமான சண்டையில் இருந்து தந்திரோபாயமாக விலகிச் செல்வது போன்ற உத்திகள் இப்போது பழக்கமாகிவிட்டன.

**'புலிகள் பின்வாங்குவது என்ற பேச்சுக்கே இடமில்லை' போன்ற தவறான எண்ணங்கள் முன்னர் மக்களிடம் இருந்தன. அதனால்தான் யாழ் குடாநாட்டை விட்டு புலிகள் தங்கள் அணிகளை தந்திரோபாயமாக விலக்கிக் கொண்டபோது மக்கள் நம்பிக்கை இழந்தனர்.**

யாழ் குடாநாட்டில் படையினர் அசுரபலத்துடன் முன்னேறியபோது, புலிகளும் முரட்டுத் தனமாக நின்று சமர் செய்திருந்தால் புலிகள் இயக்கத்தின் ஒட்டுமொத்தமான தற்கொலை முயற்சியாகவே அது இருந்திருக்கும்.

அவ்வாறு நிகழ்ந்திருந்தால் இன்று எத்தகைய நிலை தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் என்பதை யாழ் குடநாட்டு மக்கள் மட்டுமன்றி, தமிழ் பேசும் மக்களில் பெரும்பாலானோர் எண்ணிப்பார்க்கின்றனர்.


ஜனாதிபதி சந்திரிக்காவும் பிரபாகரனின் பெயரைச் சொல்லித்தான் தனது எடை குறைந்த தீர்வுப் பொதிக்குக்கூட பேரினவாதிகளிடம் நியாயம் கற்பிக்க வேண்டியிருக்கிறது.

**இன ஒடுக்குமுறைக்கு எதிரான சின்னமாக புலிகளையும், பிரபாகரனையும் ஜனாதிபதியே சிங்களமக்களிடம் சுட்டிக்காட்டும் போது, தமிழ் மக்கள் தங்கள் பலத்தின் சின்னமாக புலிகளை நினைப்பதும், அந்தப் பலம் வீழ்ந்துவிடக் கூடாது என்று நினைப்பதும் தவறில்லைத்தான்.**

அந்த நினைப்பு மேலும் வளர்ந்து செல்லுகிறது என்பதுதான் உண்மை. அதனால்தான் யாழ் குடாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் தமிழ்க் கட்சிகளும் புலிகளை விமர்சிப்பதை தவிர்த்து வருகின்றன.

சூரியக்கதிர் மற்றும் மாபெரும் இடம்பெயர்வின் பின்னர் புலிகளைப் பற்றிய கசப்புக்கள் யாழ் மக்களிடம் குறிப்பிட்டளவில் இருந்தன. இப்போது படிப்படியாக அவை மறைந்து வருகின்றன.

அதற்கு 'ஜயசிக்குறுய்' சமரும் ஒரு முக்கிய காரணம்தான்.



**புலிகள் பின்வாங்கியது தங்கள் பலத்தை பாதுகாத்துக் கொண்டு தொடர்ந்து போரிடவே என்பதை 'ஜயசிக்குறுய்' சமரில் புலிகள் நிரூபித்துக் காட்டிவிட்டனர்.**

இப்போது மக்களே புலிகளுக்கு தந்திரம் சொல்லிக் கொடுப்பார்கள் போலிருக்கிறது. வன்னியில் படை கடுமையாக நின்றால் புலிகள் கூடுதலாக பலிகொடுக்காமல் உள்ளே முன்னேற விட்டு அடிக்கலாம் தானே. பாதையை திறந்தால்கூட படையினரால் நிற்க முடியாது தானே என்று மக்கள் பேசிக்கொள்வதை கேட்க முடிகிறது.

புலிகளின் பலம் வீழ்ச்சி கண்டுவிட்டால், தங்கள் கௌரவமும் வீழ்ச்சி கண்டுவிடும் என்ற நினைப்பில் இருந்துதான் மேற்கண்ட கருத்துக்கள் மக்களிடம் எழுகின்றன.

இன்றைய உண்மை நிலை உணராமல் கண்ணை மூடிக்கொண்டு புலி எதிர்ப்பு பேசிய கட்சிகளின் கண்களை யாழ் உள்ளூராட்சித் தேர்தல் திறந்துவிட்டுள்ளது.

**புலிகளுக்கு எதிராக வாய்திறந்தால் விழுகிற வாக்கும் விழாது என்று தெரிந்துவிட்டதால், 'புலிகளுக்கும் எங்களுக்கும் பிரச்சனை இல்லை'யென்று தங்கள் வாயாலேயே தமிழ்க் கட்சிகள் கூறுவதுதான் வேடிக்கையாக இருக்கிறது.**

யாழ் தேர்தல் களத்தில் தமிழ்க் கட்சிகளின் புலிச் சார்பு நாடகம், ஒரு உண்மையைத் தெட்டத் தெளிவாக உணர்த்திவிட்டது. தமிழ் மக்களின் தலைமைச் சக்தி புலிகளே என்பதை ஏனைய தமிழ்க் கட்சிகளும் உள்ளூர ஒப்புக் கொண்டுவிட்டன. மறைமுகமாக அங்கீகரித்து விட்டன.

இதில் வெட்கப்பட ஏதும் இல்லை. உண்மை அதுதான். மறுத்துப் பேசுவது வீம்பான பிடிவாதமாக இருக்கும், பேசுகிறவர்கள் கேலிக்குள்ளாவர்.

யுத்தத்தை மட்டுமே நம்பி பொதுத் தேர்தல் வியூகங்களுக்காக காத்திருக்கும் அரசும், அதன் அரைகுறை தீர்வுப் பொதியும் நாடெங்கும் பாதுகாப்பு என்ற ரீதியில் தமிழ் மக்களை நோக்கி விரியும் சந்தேக வலைப்பின்னலும் அரசு எதிர்பார்ப்பதற்கு மாறான விளைவுகளையே ஏற்படுத்தி வருகின்றன.

அரச சார்பு மற்றும் புலிகளுக்கு எதிரான தமிழ்க் கட்சிகள்கூட தங்களை அரச எதிர்ப்பு கட்சிகளாக காண்பித்தாக வேண்டிய நிலையில் உள்ளன.

**எனவே, அரசாங்கத்தின் அரசியல், இராணுவ அழுத்தங்கள் புலிகளின் அரசியல், இராணுவ அவசியத்தை உணர்த்துவதாக மாறிக் கொண்டிருப்பதே உண்மையாகும்.**

அதேசமயம் எட்டுமாத கால 'ஜயசிக்குறுய்' சமரை சுதந்திர தினத்தின் முன்பாக முடித்து வைக்கப்போவதாக விதிக்கப்பட்ட காலவரையறைகூட, தமிழ் மக்கள் மத்தியில் கசப்பானதும், சந்தேகமானதுமான உணர்வுகளையே உருவாக்கியுள்ளன.

எவ்வாறுதான் சுதந்திர தினம் பற்றி பிரசாரம் செய்தாலும், தமிழ் மக்கள் சுதந்திர தினத்தை தமக்கு அந்நியமாகவே நினைத்து பழக்கப்பட்டுவிட்டனர்.

இராணுவ அழுத்தங்கள், பாதுகாப்பு நெருக்கடிகள் இல்லாத காலங்களில்கூட சுதந்திர தினத்தை கரிநாளாக கொண்டாடும் கூட்டணியின் முடிவை பெரும்பாலான தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்டிருந்தனர்.

இப்போதோ முன்பைவிட பன்மடங்கு நெருக்கடிகள் சூழ்ந்துள்ளன. தங்களை இரண்டாம் தர பிரஜைகளாக நடத்துகின்றனர் என்ற உணர்வு தமிழ் மக்களிடம் முன்பைவிட அதிகமாகி இருக்கிறது.

**இக் கட்டத்தில் சுதந்திரதின பொன்விழாவை யாழுக்கான தரைப்பாதை திறப்புக்கான காலவரையறையாக குறிப்பிட்டமை, தமிழ் மக்களிடமும் அதனை ஒரு கௌரவப் பிரச்சனையாக மாற்றியிருக்கிறது.**

இதனால் 'ஜயசிக்குறுய்' நடவடிக்கைக்கு எதிரான புலிகளின் எதிர் நடவடிக்கை தமிழ் மக்களின் ஆதரவு பெற்ற ஒன்றாகவும், கௌரவம் சார்ந்த ஒன்றாகவும் மாறியிருக்கிறது. பெப்ரவரி 4 வரை தரைப்பாதை திறப்பை புலிகள் தடுத்துவிட்டாலே அது ஒரு சாதனையாகப் போகிறது.

**தமிழ் மக்களின் உணர்வுகள், இன்றைய காலகட்டம் என்பவற்றை அரசு நன்கு அறிந்திருந்தால், மேற்கண்ட ரீதியில் காலவரையறைகளை அறிவித்திருக்க மாட்டாது.**

எதனை எந்தத் தருணத்தில் அறிவிப்பது என்பதைப் பொறுத்துத்தான் அதன் முக்கியத்துவமும், சாதக பாதகங்களும் இருக்கின்றன.

சுதந்திர தினத்தின் முன்பாக தரைப்பாதையை திறக்கப் போவதாக காலவரையறை அறிவித்தமை மூலம், 'சிங்கள மக்களிடமும் நம்பிக்கையீனங்கள்' ஏற்படப்போகின்றன.

காலவரையறைப்படி தரைப்பாதையை திறக்க முடியாவிட்டால் எதிர்க்கட்சி சும்மா இருக்காது.

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

**காலவரையறை 'ஜயசிக்குறுய்' நடவடிக்கையில் புதியதல்ல. கடந்த ஆண்டு மே 13ம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை ஜயசிக்குறுய் ஆரம்பமானது. அப்போதே முதலாவது காலவரையறை விதிக்கப்பட்டது. வெசாக் தினத்தின் முன்பாக (22.05.1997) வெற்றி உறுதி என்று அறிவிக்கப்பட்டது.**

அதாவது பத்து நாட்களில் காரியம் முடியும் என்று கணக்குப் போட்டார்கள். அது தப்புக் கணக்கானது. அதன்பின்னர் பல காலவரையறைகள் விதிக்கப்பட்டுவிட்டன.

**எனினும், சுதந்திரப் பொன்விழாவை முன்னிட்டு விதிக்கப்பட்ட காலவரைதான் இவற்றில் முக்கியத்துவம் பெற்றுள்ளது.**

சரித்திர முக்கியத்துவம் பெற்ற சவால் போலாகிவிட்டது.

ஆனால், கள நிலவரம், அரசாங்கம் அவசரப்பட்டு காலவரையறையை அறிவித்துவிட்டது என்பதையே காட்டப் போகிறது.

250 நாட்களுக்குள் முடியாத காரியத்தை இன்னமும் இரு வாரங்களுக்குள் முடித்து வைப்பது முடியாத காரியம்.

அவசரப்பட்டு இசகு பிசகாக நகர்ந்தால், நினைத்தது ஒன்று நடந்தது ஒன்றாகியும் விடலாம்.

**எனவே, பாரிய முயற்சிகளில் ஈடுபடுவது போன்ற பிரசாரங்களுக்கான நடவடிக்கைகளில் மட்டும்தான் 'ஜயசிக்குறுய்' படையினர் ஈடுபட்டாக வேண்டும்.**

கனகராயன் குளத்தை கைப்பற்றிவிட்டதாக சமீபத்தில் வெளியான செய்தியும் அப்படித்தான்.

புளியங்குளம், கனகராயன் குளம், மாங்குளம் போன்ற பகுதிகளை நெருங்க முடியாதளவுக்கு புலிகளின் தற்காப்பு அரண்கள் பலமாக உள்ளன.

மாங்குளம் ஒட்டிசுட்டான் வீதியில் ஒலுமடுவில் இருந்து மாங்குளம் நோக்கி முன்னேற முயன்றனர் படையினர். புலிகள் தடுத்தனர்.

கரப்புக்குத்தி, கற்கிடங்கு பகுதிகளில் இருந்து கனகராயன் குளம் நோக்கி முன்னேறும் முயற்சிகளும் தடுக்கப்பட்டன.

வவுனியா, யாழ் சாலையில் தாம் நிலை கொண்டுள்ள இடத்தில் இருந்து இரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள புளியங்குள நகரை கைப்பற்ற குறைந்தது ஆறுமாதமாக படையினர் சண்டையிட்டு வருகின்றனர்.

**வன்னிச் சமரில் புலிகளின் அணிகளை பரவலாக்க பல முனை முன்னேற்றத்தில் படையினர் ஈடுபட்டனர். படையினரின் அதே தந்திரம் இப்போது புலிகளுக்கு சாதகமாகிவிட்டது.**

படைகள் பரவலாக பல முனைகளில் நிலைகொள்ள அனுமதிப்பது, கேந்திர முனைகளை நெருங்காமல் தடுத்து தாக்குவது என்பதே புலிகளின் உத்தியாக இருக்கிறது.


பரவலாக நிலை கொள்ள அனுமதித்து விட்டு தாக்குவது, கேந்திர முனைகளை பாதுகாப்பது என்ற ரீதியில் புலிகள் செயற்படுவதால், படையினரை குறிப்பிட்ட தூரம் முன்னேற அனுமதிக்கின்றனர். பின்னர் தாக்குகின்றனர்.

கனகராயன் குளத்தை படையினர் சென்றடைய வேண்டுமானால் புலிகளின் பாரிய தற்காப்பு அரண்களை தாண்ட வேண்டும். ஆனால், கரப்புக்குத்தி கற்கிடங்கு போன்ற பகுதிகளை அண்டிய இடங்களில் நடைபெறும் சண்டைகளை கனகராயன் குள மோதல் என்றும், ஒலுமடுப் பக்கம் நடைபெறும் சண்டைகளை மாங்குளத்தில் மோதல் என்றும் செய்திகளில் சொல்லப்படுகின்றன.

பெப்ரவரி நான்குக்கு முன்னர் வன்னிச் சமர் பற்றி பரபரப்பான செய்திகளையாவது படைத்தரப்பு வெளியிட்டுக் கொண்டே இருக்கும். ஆனால் பொன்விழாவுக்கு முன்னர் தரைப்பாதை திறப்பு என்ற காலவரையறை மட்டும் கைக்கெட்டப் போவதில்லை. ■

**நாரதர்**

## அதிரடி அய்யாத்துரை



***யாழ்ப்பாண மருத்துவ மனைக்கு*** அருகில் கழகத்தினர் கட்-அவுட் ஒன்று வைத்திருந்தவை. மலைக்குப் பின்னால் இருந்து உதய சூரியன் எழுவதுபோலவும், கடலில் நங்கூரம் இடப்பட்டிருப்பதுபோன்றும் வரையப்பட்டிருந்தது. கூட்டான கட்சியின் வாக்குகளைக் கவருவதற்காக உதயசூரியனையும் கீறி வைத்திருந்தவையாம். வழக்கில் கூட்டான கட்சி வெற்றி பெற்ற செய்தி வெளியானதும் கட்-அவுட்டில் இருந்த சூரியனைக் காணவில்லையாம். மளமளவென்று அழித்து காணாமல் போகச் செய்துபோட்டினம். எல்லாம் அனுபவம்தான்!

***வாசகசாலை*** கட்டடம் ஒன்றைத் திருத்த கட்சி ஒன்று நிதி உதவி செய்ததாம். விஷயம் காதில் விழுந்ததும் நோட்டுக் கட்டோடு அங்கு விஜயம் செய்ததாம் இன்னொரு கட்சி. வாசகசாலைக் காரருக்குக் கொண்டாட்டம். அடிக்கடி எலக்ஷன் வந்தால் மாடிக் கட்டடமே கட்டிப்போடலாம் என்று சொல்லுகினமாம். எங்கே நடக்குது இந்தக் கூத்து என்று தெரியும்தானே!

***சனசமூக நிலையக்காரர்***, சங்கங்களைச் சேர்ந்தோர் ஆகியோரை தமிழ்க் கட்சிகள் துரத்துகின்றன. எலக்ஷன் தினத்தன்று இத்தனை பேரைத் தந்தால் இத்தனை ஆயிரம் என்று 'ரேட்' பேசப்படுகிறதாம். சில தலைவர்களின் பை நிரம்புதாம். "சங்கம் சொன்னால் என்ன, யார் சொன்னால் என்ன சீட்டைப் பங்கம் செய்து போட்டுத்தான் வருவோம்" என்கின்றனராம் நாலும் தெரிந்த சனங்கள்.

நிற்க, குறிப்பிட்ட பிரமுகர்களை ரெண்டு எழுத்து உளவுப் பிரிவும் கண் காணித்துக் கொண்டிருக்குதாம்.

***'குடிகாரன் பேச்சு*** விடிந்தால் போச்சு' அதில் எங்கள் அரசியல்வாதிகளையும் சேர்த்துக் கொள்ளலாம். மனு நிராகரிக்கப்பட்டதும் கூட்டான கட்சி சங்கதியார் பேசிய பேச்சு என்ன, மனு ஓ.கே ஆனதும் 'வீ ஆர் ரெடி' என்று துள்ளிய துள்ளல் என்ன என்ன என்ன....! "உங்களுக்கு சான்ஸ் இருக்குது" எண்டு யாரோ சொல்லிப் போட்டினமாம். அதுதான் அண்ணர்மார் வேட்டியை மடிச்சுக்கட்டிக் கொண்டு கோதாவில் இறங்கியிருக்கினமாம். அம்மணியும் உஷாராகத்தான் உலா போயிருக்கிறார்.

***தலைநகருக்கு*** யாழில் இருந்து கிரிக்கெட் குழு ஒன்று வந்திருக்குதல்லோ! குழுத்தலைவராக வந்திருப்பவர் ரெண்டு எழுத்து இயக்க யோகியார். யாழ் இந்துவில் கிரிக்கெட் கப்டனாக இருந்தபோது அவர் குழுவில் விளையாடியவராம். இப்ப சனத்தின் உணர்வுடன் விளையாடுகிறார். பந்தாக அடிபடுகுதுகள் யாழ்ப்பாணச் சனங்கள். இவை பந்தாட வந்திருக்கினம். உலகுக்கு 'ஷோ' காட்டும் முயற்சியை, 'விளையாட்டுத்துறை முன்னேற்றம்' என்று இவை விளங்கிக் கொள்ளலாமோ? "சுதந்திர தினத்தை முன்னிட்டு யாழுக்கான பாதையைத்தான் திறக்க முடியவில்லை; யாழ் கிரிக்கெட் அணியை தோற்கச் செய்தாவது சந்தோசப்பட நினைக்கினமோ?" எண்டு நண்பர் ஒருத்தர் கேட்டார். நான் மூச்சுக் காட்டலை.

***பச்சை உடை அதிகாரி*** ஒருவர் கொழும்பு பத்திரிகையாளர் ஒருவரிடம் சொன்னாராம்: "தமிழ்க் கட்சிகளுக்கு கடும் எச்சரிக்கை கொடுத்திருக்கிறேன். இதனையும் கேட்காவிட்டால் காதில் பிடித்துக் கொண்டுபோய் உள்ளே போடவேண்டி வரும்!" வாழ்க தேசிய நீரோட்டம்!

***மறுபடி பேச்சு வார்த்தை*** பற்றி வதந்திகள் பரவும் சீசன் தொடங்கிவிட்டது. பொன்விழா நெருங்க நெருங்க பொன்னான வதந்திகள் எல்லாம் பரவும். நாங்கள்தான் ஜாக்கிரதையாக இருக்க வேணும். அதிகாரத் தரப்பாராக முன்வந்து விட்டுக் கொடுப்பு செய்யாதவரை, ரெண்டு எழுத்தாரிடம் விட்டுக் கொடுப்பை எதிர்பார்க்கும் காரியம் நடக்குமோ? அதனால் தேவையற்ற பிரமைகள் கொள்ளக்கூடாது!

***வவுனியாவில்*** கிரிக்கெட் போட்டி ஒன்று நடைபெற்றதாம். கழக ஆதரவு அணிக்கு எதிரான அணியை ஆதரித்துக் குரல் கொடுத்த இரசிகர்கள் பிஸ்டல் முனையில் எச்சரிக்கப்பட்டனராம். எச்சரிக்கப்பட்ட ஒருத்தர் சொன்னது: "உப்பிடியென்றால் போட்டி வைக்காமலேயே 'கப்' கொடுத்திருக்கலாமே!"

***இவ்வாரக் கவிதை***. மு.மேத்தா. வாக்குச் சீட்டு பாடுகிறது பாருங்கள்:

"ஜாதி விலை ஸாரி விலை
சரக்கென்று கொடுக்கின்ற
போதை விலை
பொய்மை விலை
நோட்டெடுத்து நீட்டுகின்ற
வீதி விலை கை குவிக்கும்
வெத்து விலை இப்படியே
நீதி விலை போவதுதான்
எனது நிலை!" ■



படிப்பகம்

www.padippakam.com

ஐந்து தமிழ்க் கட்சிகள் யாழ் குடாநாட்டு உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுகின்றன.

**1) தமிழர் விடுதலைக் கூட்டணி.**
**சின்னம்: உதயசூரியன்.**
**2) ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி**
**சின்னம்: வீணை.**
**3) ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி.**
**சின்னம்: நங்கூரம்.**
**4) ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி.**
**சின்னம்: பூ**
**5) தமிழ் ஈழ விடுதலை இயக்கம்.**
**சின்னம்: வெளிச்சவீடு.**

ஊர்காவத்துறை, வேலணை ஆகிய இரண்டு பிரதேச சபைகளில் சுயேட்சைக் குழு போட்டியிடுகிறது. சின்னம்: மீன்.

பெரும்பாலான யாழ்ப்பாணக் குடா நாட்டு மக்கள் இத் தேர்தலில் வாக்களிக்கப் போவதில்லை. வலுக்கட்டாயமாக அழைத்துச் சென்றால் வாக்குகளைச் செல்லாதவையாக்குவோம் என்று பகிரங்கமாக துணிந்து கூறுகிறார்கள்.

எனினும் ஒரு பகுதி மக்கள் வாக்களிப்பர்.

வாக்களிக்கும் மக்களின் மனோநிலை எப்படிப்பட்டதாக இருக்கும்.

**1) உரிமைப் போராட்டம் பற்றிய அக்கறையோ, உணர்வோ இல்லாதவர்கள். ராமன் ஆண்டாலென்ன அவன் செருப்பு ஆண்டாலென்ன என்ற மனோநிலை உள்ளவர்கள்.**

**2) போட்டியிடும் கட்சிகளின் ஆதரவாளர்கள். (இது மிக குறைந்த வீதம்).**

**3)தமக்குரிய சலுகைகளை இக்கட்சிகள் பெற்றுத்தரும் என்று நம்புகிறவர்கள். உதாரண மாக: பதவி உயர்வு, வேலை வாய்ப்பு, தமது பகுதி வாசகசாலை போன்றவற்றின் புனரமைப்பு போன்றன.**

**4) பொய்யான பிரசாரங்களை இனம் காண முடியாதவர்கள்.**

**5) தெரிந்தவன், ஊரவன், உறவினன், நம் சாதிக்காரன், நம் மதத்தினன் போன்ற குறுகிய உணர்வுகளுடன் உடன் பாடானவர்கள்.**

**6) கௌரவமான வாழ்க்கைக்காகப் போராடும்போது பல்வேறு சோதனைகள், வெற்றிகள், தோல்விகள் என்பவற்றுக்கு முகம் கொடுத்தாக வேண்டும் என்பதை உணராமல், மனம் தளர்ந்து போகும் ஒரு பகுதியினர்.**

மேற்கண்ட ஆறுவகையினர்தான் எதிர் வரும் உள்ளூராட்சித் தேர்தலில் வாக்களிக்கப் போகிறார்கள். இந்த வகையான மனோநிலை உள்ளவர்களின் எண்ணிக்கை யாழ் மக்கள் மத்தியில் அதிகம் இல்லை.

எனவே, 30 வீதமான வாக்களிப்புக் கூட நடைபெறுமா? என்பது சந்தேகத்துக்கு உரிய ஒன்றுதான்.

இத் தேர்தலில் பொது ஜன முன்னணியோ, ஐக்கிய தேசியக் கட்சியோ போட்டியிட்டிருந்தால்கூட மேற்கண்ட ரகமான வாக்காளர் மத்தியில் இருந்து வாக்குகளை பெற்றிருக்க முடியும்.

குறிப்பாக ஆளும் கட்சியின் சார்பாக பிரபலமான ஒருவர் நிறுத்தப்பட்டிருந்தால்

# யாழ் தேர்தல் களம்

## ஸ்பெஷல் ரிப்போர்ட்

### நாரதர்



மேற்கண்டரக வாக்காளர்களில் கணிசமானோரை கவர்ந்திழுத்திருக்கலாம்.

பொதுவாக எந்தவொரு தேர்தலிலும் வாக்கு வங்கிகளை மூன்றாக வகைப் படுத்தலாம்.

**1) நிரந்தரமான வாக்கு வங்கி:**

**குறிப்பிட்ட கட்சிகளுக்கு என்று இருக்கக்கூடிய வாக்காளர்களைக் கொண்டது.**

**2) விலை போகும் வாக்கு வங்கி:**

**சலுகைகள், அன்பளிப்புக்கள், பதவி உயர்வுகள், வேலை வாய்ப்புக்கள் என்று வீசப்படும் ஆசை வலைகளுக்குள் சிக்கக் கூடியவர்களும், போலி வாக்குறுதிகள், பொய்ப் பிரசாரங்கள் என்பவற்றுக்கு பலியாகக் கூடியவர்களும் இதில் அடக்கம். நாம் முன்னர் குறிப்பிட்ட ஆறு ரகத்தினரும் இதற்குள் அடங்குவர்.**

**3) ஊசலாடும் வாக்கு வங்கி.**

**வாக்களிப்பு நாள் நெருங்கும்போது அப்போதைய நிலமைக்கு ஏற்ப முடிவு செய்யும் வாக்காளர்கள் இதற்குள் அடங்குவர். வெற்றிக் காற்று யார் பக்கம் வீசுகிறது என்று பார்த்து அந்தப் பக்கம் சாய்ந்து விடுவர்.**

அரசியல் கட்சிகளுக்குள் தனித்துவமான வேறுபாடுகள், குறிப்பிடத்தக்க கொள்கை முரண்பாடுகள், கொள்கைகளை வென்றெடுக்க மேற்கொள்ளப்படும் அணுகு முறைகளில் உள்ள வித்தியாசங்களைப் பார்த்துதான் சிறந்த கட்சி எது? என்பதை மக்கள் அடையாளம் காணமுடியும்.

அதன்பின்னரே குறிப்பிட்ட கட்சியின் உறுப்பினராகவோ, ஆதரவாளராகவோ, மாறுவர். அவர்களே நிரந்தரமான வாக்கு வங்கியாகவும் இருப்பர்.

தற்போது யாழ் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் ஐந்து தமிழ்க் கட்சிகளில் கூட்டணி மட்டுமே நிரந்தர வாக்கு வங்கியை முன்னர் கொண்டிருந்தது.

1977 பொதுத் தேர்தல், 1979 உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் கூட்டணியினரின் சரணடைவு அரசியல் போக்குக் காரணமாக அந்த வாக்கு வங்கி மெலிந்து போனது.

1981 மாவட்ட சபைத் தேர்தலில் அரச படைகளின் அட்டூழியங்களுக்கு எதிரான அடையாள எதிர்ப்பாக கூட்டணிக்கு மக்கள் வாக்களித்தனரே தவிர, கூட்டணிக்கான வாக்குகளாக அவற்றை கருத முடியாது.

1983ல் யாழ் மாவட்ட உள்ளூராட்சித் தேர்தலில் கூட்டணி போட்டியிட்டது. 90 வீதமான மக்கள் அத் தேர்தலை நிராகரித்தனர்.

எனினும், முன்னைய அளவில் இல்லையென்றாலும், கூட்டணி போட்டியிட்டால் அவர்களுக்குத்தான் வாக்குப் போடுவோம் என்று கூறத்தக்க வாக்காளர்கள் இன்னமும் இருக்கவே செய்கிறார்கள்.

ஏனைய நான்கு கட்சிகளைப் பொறுத்த வரை, நிரந்தரமான வாக்கு வங்கி என்று எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஏனெனில் இக் கட்சிகளின் அமைப்பு முறையும், செயற்பாடுகளும் குழப்பமாக உள்ளன.

இவை சட்ட பூர்வமான அரசியல் கட்சிகளாகவும் முழுமையாக மாறவில்லை. ஆயுதம் ஏந்திய போராளி அமைப்புக்களுக்குரிய போர்க் குணத்தையும் கொண்டிருக்கவில்லை.

சட்டபூர்வமான அரசியல் கட்சிகள் என்றால், மக்களிடம் தமது கட்சிப் பணிகளை முன்னெடுக்க வேண்டும். கட்சிக் கிளைகளை ஊர்கள் தோறும் நிறுவ வேண்டும். அவற்றின் ஊடாக உள்ளூர் தலைவர்களை உருவாக்கி இருக்க வேண்டும். தேர்தல்களில் அவர்களையே நிறுத்தி இருக்க வேண்டும்.

**சட்டபூர்வ அரசியல் கட்சி, ஆயுதங்களுடன் உள்ள இயக்கம், இந்த இரண்டுக்கும் இடைப்பட்ட குழப்பமான வடிவத்தில்தான் ஏனைய நான்கு தமிழ்க் கட்சிகளும் இருக்கின்றன.**

ஆயுதங்களுடனும் சீருடைகளுடனும் நடமாடவும் ஆசைப்படுகிறார்கள். ஆயுதங்களை முற்றாக கைவிட்டால், முன்னாள் போராளிகள் என்ற பந்தாவும், மக்களுக்குள் தம்மீது ஒரு பயமும் இல்லாமல் போய்விடுமோ என்றும் அஞ்சுகிறார்கள்.

அதேசமயம், அந்தக் கால கூட்டணிப் பாணியில் அரசியல் நடத்தி, தாங்களும் ஒரு அமிர்தலிங்கம் போன்று, அரசியல் தலைவர்களாக மக்களால் பேசப்பட வேண்டும் என்றும் ஆசைப்படுகிறார்கள்.

**ஆனால், 1977 வரை கூட்டணி நடத்திய அரசியலில் காணப்பட்ட கம்பீரமும், வசீகரமும், ஆளுமையும் இன்றைய தமிழ் அரசியல் கட்சிகளிடம் துளியும் காணப்படவில்லை.**

எனவே, ஏனைய நான்கு தமிழ்க் கட்சிகளும் தனியான நிரந்தர வாக்கு வங்கிகளை உருவாக்க முடியவில்லை.

அதனால், விலைபோகும் வாக்கு வங்கி, ஊசலாடும் வாக்கு வங்கி ஆகிய இரண்டின் மீதே தங்கள் பிரதான கவனத்தை திருப்பியுள்ளன. அந்த வாக்கு வங்கிகளைக் குறிவைத்தே வலைகளை வீசிக் கொண்டிருக்கின்றன.

விலைபோகும் வாக்கு வங்கியைக் கவருவதற்கு பின்வரும் தந்திரங்கள் கையாளப்படுவதை காணமுடிகிறது.

1) பண உதவிகள். 2) அன்பளிப்புப் பொருட்கள் 3) மதுபான வகைகள் 4) சாதி, மத, ஊர்வாதங்கள், 5) கட்டட நிதிகள். 6) வேலை வாய்ப்பு, பதவி உயர்வுகள் பெற்று தருவதாக வாக்குறுதிகள்.

ஊசலாடும் வாக்கு வங்கியைக் கவர பின்வரும் உத்திகள் கையாளப்படுகின்றன.

1) தங்களுக்கு வெற்றி வாய்ப்பு இருப்பது போன்று கதைகளைக் கட்டி விடுகிறார்கள்.

2) பிரசாரப் போட்டிகளில் முன்னணியில் நின்று மக்களுக்கு பிரமிப்பூட்டுகிறார்கள்.

3) கட்-அவுட்டுகள், பிரமாண்டமான வர்ணச் சுவரொட்டிகள், எங்கு நோக்கிலும் காணக் கூடியதாக சின்னங்கள் வரைதல் போன்ற ஆரவாரங்கள் மூலம் தாம் முன்னணியில் நிற்பது போன்ற பிரமையை ஏற்படுத்த ஒவ்வொரு கட்சியும் படாதபாடு படுகின்றன.

மாற்றுத் தலைமையை உருவாக்கப் போவதாக அரசாங்கம் சொல்வதை நம்பத்தான் வேண்டும், ஆனால் 'ஏ' என்று ஒரே ஒரு எழுத்தை அதனுடன் சேர்த்தாக வேண்டும்.

ஏமாற்றுத் தலைமைகளை உருவாக்குவதும் யாழ் மாவட்ட உள்ளூராட்சித் தேர்தலின் விளைவுகளில் ஒன்றாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. ▭

# போட்டியிடும் கட்சிகள்

## பலமும்–பலவீனமும்

### தமிழர் விடுதலைக் கூட்டணி:

*இதன் பலம்:* பழம்பெரும் கட்சி என்ற முத்திரை. பழக்கப்பட்ட சின்னம். மக்களுடனான அணுகுமுறைகளில் கெட்ட பெயர் கிடையாது.

*பலவீனம்:* கொள்கையைக் கைவிட்டது, பொதுஜன முன்னணி அரசுக்கு முண்டு கொடுப்பது. அரைகுறையான தீர்வுப் பொதியை போற்றிப் புகழ்வது. நீண்டகாலமாக யாழ் மக்களுடன் தொடர்பு இல்லாமல் இருந்தது. அதனை விட யாழ் மாநகர சபைக்கு சிறந்த வேட்பாளர் ஒருவரை நியமிக்க தவறியதும், பிரசாரத்திற்கு போதிய அவகாசம் இன்மையும் பிரதானமான பலவீனங்களாக உள்ளன.

ஆயினும் யாழ் மாநகர சபையில் ஓரளவான ஆசனங்களையும், வலிகாமம் வடக்கில் வெற்றி வாய்ப்பையும் இக்கட்சி எதிர்பார்க்கிறது.

### ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி:

*இதன் பலம்:* யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏழுபேரைக் கொண்ட கட்சி. யாழ் குடாநாட்டில் மக்களுடனான அணுகுமுறையில் கட்சிக்கு பெரியளவில் கெட்ட பெயர் கிடையாது.

நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருப்பதால், சலுகை நாடும் மக்களுக்கு உதவிகளையும், வாக்குறுதிகளையும் வழங்க முடியும். அரசின் தீர்வுப் பொதிக்கு எதிரான நிலைப்பாடு. மற்றும் பிரசார பலமும், ஆட்பலமும்.

*பலவீனம்:* அவசரகால சட்டத்திற்கு ஆதரவு வழங்குதல், அரசாங்கத்திற்கு ஆதரவான நிலைப்பாட்டை தொடருதல். உள்ளூர்களில் கட்சி அமைப்புக்களையோ, தலைவர்களையோ கொண்டிராமை.

### ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி:

*பலம்:* முன்னாள் போராளி இயக்கம் என்ற முத்திரை. சில பகுதிகளில் அந்தந்த ஊரவர்களை முன்னிலைப் படுத்தியுள்ளமை. தாராளமாக வீசக் கூடியளவுக்கு நிதி வசதி.

*பலவீனம்:* புளொட்டின் கடந்தகால கறைபடிந்த வரலாறு. வவுனியாவில் இன்றும் தொடரும் புளொட்டின் அராஜகம். அரசுக்கு ஆதரவு வழங்குதல். (அவசரகால சட்ட வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் நழுவினால்கூட, ஏனைய வாக்கெடுப்புக்களில் அரசுக்கு சார்பாக வாக்களிக்கின்றனர்).

### ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி:

*பலம்:* இந்திய அமைதிப்படைக் காலத்தில் தலைமையில் இருந்தவர்கள் பலர் இல்லாமல் போனமை. இந்தியப் படை காலத்தில் மக்களுடன் தகாத முறையில் நடந்த உறுப்பினர்கள் பலர் வெளியேறிவிட்டமை. இந்தியப் படைகால நடவடிக்கைகளுக்கு துணிந்து மன்னிப்புக் கோருதல். பொதுமக்கள் மத்தியில் இருந்து பலரை வேட்பாளராக நிறுத்தியுள்ளமை. ஊர் மற்றும் ஜாதிரீதியான வேட்பாளர் தெரிவு.

*பலவீனம்:* இந்தியப்படை கால கொடுமைகள் என்றதும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். பெயரும் மக்களுக்கு நினைவில் வருதல். இந்தியப்படை கால சம்பவங்களை அடிக்கடி நினைவூட்டும் ஏனைய இயக்கங்களின் பிரசாரம். அரசுக்கு ஆதரவான நிலைப் பாடு.

### தமிழீழ விடுதலை இயக்கம்:

*பலம்:* முன்னாள் போராளி இயக்கம் என்ற முத்திரை. சில பகுதிகளில் ஊரவர்களை முன்னிறுத்தி உள்ளமை.

*பலவீனம்:* ஏற்கனவே உள்ள கெட்ட பெயர். படைகளுடன் சேர்ந்து புலிகளைக் காட்டிக் கொடுக்கும் நடவடிக்கைகள், அடிக்கடி புலிகளால் இதன் உறுப்பினர்கள் கிழக்கில் சுட்டுக் கொல்லப்படும் சம்பவங்கள்.

மேற்கண்ட பலம், பலவீனங்களோடு ஐந்து தமிழ்க் கட்சிகளும் களத்தில் இறங்கியுள்ளன.

**இக்கட்சிகளின் பலம், பலவீனம் என்று கணிப்பிட்டவை எவையும் தமிழ் பேசும் மக்களின் நலன்களுக்கு எவ்வகையிலும் உபயோகமானவை அல்ல என்பதையும் மறந்துவிடக்கூடாது.**

**விலைபோகின்ற, ஊசலாடுகின்ற வாக்கு வங்கிகளை கவர்வதில் இக் கட்சிகளுக்குரிய பலம், பலவீனம் என்றளவில்தான் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.**

உண்மையில் இவ்வாறான அணுகு முறைகள் மூலம் தமிழ்க் கட்சிகள் தங்களுக்குரிய படுகுழியைத் தாங்களே தோண்டி வருகின்றன.

சலுகைகளுக்கும், ஆசை வார்த்தைகளுக்கும், பண பலத்திற்கும், அதிகார பலத்திற்கும் முன்னால் மயங்கக்கூடிய இந்த வாக்கு வங்கிகள் உறுதியானவை அல்ல.

எதிர்காலத்தில் ஆளும் கட்சி வேட்பாளர்கள் களத்தில் இறங்கினால், தமிழ்க் கட்சிகள் கூறுவதைவிட கவர்ச்சிகரமான சலுகைகளை அவர்கள் வீசியெறிவர். தமிழ்க்கட்சிகள் வீசுவதைவிட பெரிய வலைகளை வீசுவர்.

இன்றைய உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்க் கட்சிகளுக்கு விழும் வாக்குகள், எதிர்காலத்தில் ஆளும் கட்சி வேட்பாளர்களுக்கு செல்லக்கூடும். அப்போது இக் கட்சிகள் பரிதாபமாக தோற்றுப் போகலாம்.

தமிழ்க் கட்சிகள் எலும்புத் துண்டுகள்மீது வாக்காளர்களிடம் ஆசையை வளர்த்துவிட்டால், தமிழ்க் கட்சிகள் வீசுவதைவிட கொழுத்த எலும்புத் துண்டுகளை வீசக்கூடிய தென்னிலங்கை கட்சிகளை நோக்கி இதே வாக்காளர்கள் நாளை ஓடிச் செல்வதில் என்ன தவறு இருக்க முடியும்?! ■

# மாநகரசபை வேட்பாளர்கள்

யாழ் மாநகரசபையில்தான் ஐந்து கட்சிகளுமே தீவிர கவனம் செலுத்தி வருகின்றன.


யாழ் மாநகர முதல்வருக்காக போட்டியிடும் வேட்பாளர்கள் இவர்கள்தான்.

### சரோஜினி யோகேஸ்வரன்:

முன்னாள் யாழ்தொகுதி எம்.பி. யோகேஸ்வரனின் மனைவி என்பதைத் தவிர வேறெந்த குறிப்பிடத்தக்க அரசியல் தகுதியும் இவருக்குக் கிடையாது. சென்ற பொதுத் தேர்தலில் கொழும்பிலும் கூட்டணி சார்பாக போட்டியிட்டு படுதோல்வி கண்டவர். இவருக்குப் பதிலாக வேறு நல்ல வேட்பாளரை நியமித்திருந்தால் கூட்டணிக்கு சாதகம் அதிகம் இருந்திருக்கும்.

### கே. ஜெகன்:

1986ல் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்க வட்டுக்கோட்டைப்பகுதி இராணுவப் பொறுப்பாளராக இருந்தவர். இயக்க உள் பிரச்சனை காரணமாக பின்னர் ஒதுங்கி இருந்தார். 1995 முதல் ஈ.பி.டி.பி.யில் தீவிர உறுப்பினரானார். யாழ்ப்பாண நகரில் ஈ.பி.டி.பி. அலுவலகப் பொறுப்பாளராக இருந்து பணியாற்றி வருகிறார். மக்களுடன் பழகுவதில் நல்ல பெயர் உண்டு. காணாமல்போனோர் சங்கம் உருவாகக் காரணமாக இருந்தவர். காணாமல்போனோர் தொடர்பாக விபரங்களைத் திரட்டுவதில் முக்கிய பங்கு வகித்தார்.




இம்முறை வாக்குச் சீட்டில் கேள்விக்குறி அல்லது பூச்சியம் (முட்டை) இடப்போவதாக வாக்களர்கள் கூறிவருகின்றனர். இது மக்கள் தாங்களாகவே தெரிவு செய்துள்ள போராட்ட வழிமுறை.

### த. சுபத்திரன்:

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தின் மூத்த உறுப்பினர். ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தின் யாழ் மாவட்ட முதல் இராணுவத் தளபதி. யாழ் குடாநாட்டில் ஆரம்பகால இராணுவ நடவடிக்கைகளில் பங்குகொண்டவர்களில் முக்கியமானவர். சிறையில் இருந்தவர்.

கிண்ணியா வங்கிக் கொள்ளை, யாழ் நகரில் பொலிஸ் ஜீப் மீதான குண்டுத் தாக்குதல், சத்தியப் பிரமானத்திற்கு எதிரான நடவடிக்கைகள், மற்றும் இயக்கத்திற்கான அரச நிதிப் பறிப்பு நடவடிக்கைகள் போன்றவற்றில் ஈடுபட்டவர். இந்திய அமைதிப்படை காலத்தில் அன்றிருந்த தலைமையால் ஒதுக்கப்பட்டார். சாவகச்சேரி பிரதேச பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். இந்தியப்படை காலத்தில் சாவகச்சேரியில்தான் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்புக்கு கெட்டபெயர் ஏற்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

### மாணிக்கதாசன்:

புளொட் இயக்க ஆரம்பகால உறுப்பினர்களில் ஒருவர். புளொட் இயக்க உள் முரண்பாடுகளால் பலர் வெளியேறினர். பலர் உள்ளேயே கொல்லப்பட்டனர். அதன்பின்னர் புளொட் இயக்கத்தில் மாணிக்கதாசன் முக்கியத்துவம் பெற்றார்.

1981மாவட்ட அபிவிருத்திச்சபை தேர்தல் பகிஷ்கரிப்புக்காக யாழ் நாச்சிமார் கோவிலடியில் பொலிசார்மீது நடைபெற்ற தாக்குதல், கிளிநொச்சி வங்கிக் கொள்ளை போன்றவை இவர் பங்குகொண்ட முக்கிய நடவடிக்கைகளாகும். லெபனானில் இராணுவப் பயிற்சி பெற்றவர்.

### சிவாஜிலிங்கம்:

ரெலோவின் சிதைவின் பின்னர் அந்த இயக்கத்தில் முக்கிய தலைவரானவர். கூட்டணி காலத்தில் இருந்து அரசியலில் ஈடுபாடு உண்டு.

கொழும்பு மாநகரசபைக்கும் முதன்மை வேட்பாளராகப் போட்டியிட்டவர். 1994ல் கிழக்கில் உள்ளூராட்சிச் சபைகளில் ரெலோ வெற்றிபெறுவதற்கு முக்கிய பங்கு வகித்தவர். இயக்கத்திற்கு நிதி தேடிக் கொடுப்பதிலும் முக்கிய பங்கு உண்டு. ■

## தமாஷான பிரசாரம்

யாழ் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் ஐந்து கட்சிகளும் ஈழமே முடிந்த முடிவு என்று போராட்டம் நடத்திய கட்சிகள்தான்.

ஆனால், கூட்டணி மட்டும்தான் கொள்கையைக் கைவிட்டது போல ஏனைய கட்சிகள் பிரசாரம் செய்வது தமாஷாக இருக்கிறது. கூட்டணியினர் ஈழக் கோரிக்கையை கைவிட்டனர் என்று கூறித்தான், அவர்களை நிராகரிக்குமாறு சகல இயக்கங்களும் தமிழ் மக்களிடம் கோரின. ஆயுதப் போராட்டத்திற்கு ஆதரவு தேடின.

தற்போது போட்டியிடும் நான்கு தமிழ்க் கட்சிகளும் பல நூற்றுக்கணக்கான போராளிகளை ஈழக் கோரிக்கைக்காக பலி கொடுத்தன. ஈழத்திற்கு குறைந்த தீர்வுக்கு இடமில்லை என்பதே சகல இயக்கங்களதும் பிரதான நிலைப்பாடாக இருந்தது. இப்போது பழியை கூட்டணிமீது மட்டும் போட்டுவிட்டு தாங்கள் தப்பிக்கொள்ளப் பார்க்கிறார்கள். ■

## எட்டிக்குப் போட்டி

புளொட் பாடசாலை மாணவர்களுக்கு குறிப்புப் புத்தகமும் பென்சிலும் கொடுக்கிறது. ஈ.பி.டி.பி. பொக்கெட் கலண்டர் கொடுக்கிறது. ஈ.பி.ஆர். எல்.எஃப். கட்சிச் சின்னத்தை ஸ்டிக்கராக தயாரித்துத் தருகிறது. ரெலோ இந்த உத்தியில் பின்தங்கிவிட்டது.

மாணவர்களை கைக்குள் போட்டுக் கொண்டால், அவர்களது பெற்றோர்களின் வாக்குகள் தங்கள் சின்னத்தின் எதிரே கொட்டும் என்று நினைக்கிறார்கள். ■

அற்புதன் எழுதும்
அல்பிரட் துரையப்பா முதல்
காமினிவரை அடுத்த வாரம்
இடம்பெறும்.
இட நெருக்கடி காரணமாக
தொடர் இடம்பெறவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

அலசுவது– இராஜதந்திரி

# யாழ்–மக்கள் பூசப்போகும் கரி!

## கடைசி நேரப் பந்தயக் குதிரை


யாழ் மாவட்ட உள்ளூராட்சித் தேர்தலை நடத்தும் நோக்கம் என்னவென்று அரசு பகிரங்கமாகவே கூறத்தொடங்கியுள்ளது.

**யாழ் குடாநாட்டு மக்களுக்கு மாற்றுத்தலைமை ஒன்றை உருவாக்கிக்கொடுப்பதும், தீர்வுத்திட்டத்துக்கு ஆதரவு தேடுவதுமே தமது நோக்கம் என்று ஆட்சியாளர்கள் கூறத்தொடங்கியுள்ளனர்.**

ஆட்சியாளர்களின் இத்தகைய கருத்துக்களை தேர்தலில் போட்டியிடும் எந்தவொரு தமிழ்க்கட்சியும் நேரடியாக மறுத்துரைக்க முன்வரவில்லை.

யாழ் மாவட்ட உள்ளூராட்சித் தேர்தலில் பொதுஜன முன்னணி போட்டியிடவில்லை. அவ்வாறு இருந்தும், தீர்வுப் பொதியை யாழ் மக்களிடம் எடுத்துச் செல்ல இத் தேர்தல் உதவும் என்று நீதியமைச்சர் கூறியிருக்கிறார்.

**அங்கு போட்டியிடும் தமிழ்க் கட்சிகளை தமது சொற்படி கேட்கக்கூடியவையாகவும், அல்லது தங்கள் முகவர்கள் போன்றும் ஆட்சியாளர்கள் கருதுகின்றனர் என்பதே புலனாகின்றது.**




முன்னர்போன்று தங்கள் கட்சிக் கிளைகளை அங்கு நிறுவுவதற்கான அவசியம் தற்போது ஆளும் கட்சியினருக்கு இல்லாது போயுள்ளது. தமிழ்க் கட்சிகள் ஒவ்வொன்றும் ஆளும் கட்சியின் கிளைக்கட்சிகளாகவே மாறியுள்ளன.

எனினும், முன்னாள் போராளிகளான இந்நாள் தமிழ்க் கட்சிகளை தேவை கருதி ஆட்சியாளர்கள் அனுசரித்து வருகின்றனரே தவிர, இக் கட்சிகள்மீது உள்ளூர அதிருப்தியே கொண்டுள்ளனர்.

**தவிர்க்க முடியாமல் இந்த 'துஷ்டர்களை' தாங்கள் சகித்துக்**

**கொண்டிருப்பதுபோன்றே ஆட்சியாளர்களின் அணுகுமுறைகள் அமைந்திருக்கின்றன.**

யாழ் குடாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் போட்டியிடுவதை ஆளும் தரப்பின் உயர் மட்டத்தினர் பெரிதும் விரும்பியிருந்தனர்.

வேட்புமனு நிராகரிப்பை எதிர்த்து வழக்குத் தொடுக்கும் யோசனை கூட்டணியின் தலைவர்கள் பலருக்கு இருக்கவில்லை. வேட்புமனு நிராகரிக்கப்பட்டமை நன்மைக்கே என்றுதான் கூட்டணியின் உபதலைவர் திரு. ஆனந்தசங்கரி செய்தியாளர்களுக்கு தெரிவித்திருந்தார்.

**எனினும், உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறுவதற்கு முன்பே கூட்டணியின் பிரமுகர் ஒருவர் ஆளும் தரப்பினருக்கு கொடுத்திருந்த உத்தரவாதத்தின் அடிப்படையிலேயே, போட்டியிடும் முடிவும், பின்னர் நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுவை ஏற்குமாறு கோரும் வழக்கும் தொடுக்கப்பட்டிருந்ததாக தெரியவருகிறது.**

வழக்குத் தீர்ப்பு விடயத்திலும் ஆளும் தரப்பினருக்கு ஆர்வம் இருந்தது எனவும் அறிய முடிகிறது.

யாழ் மாநகரசபையை கூட்டணியினர் கைப்பற்றினால்தான், தேர்தலுக்கு ஜனநாயக தோற்றப்பாடு சற்றுக் கூடுதலாக இருக்கும் என்பதும் ஆட்சியாளரின் விருப்பம் என்று தெரிகிறது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தின் அரசியல், இராணுவ நலன்கள், மற்றும் பிரசார நலன்கள் கருதியே இயக்கங்கள் ஆயுதம் வைத்திருப்பதற்கு ஆட்சியாளர்கள் அனுமதித்துள்ளனர்.

விடுதலைப் புலிகள் போரில் வெல்லப்பட்ட மறுநொடியே குறிப்பிட்ட இயக்கங்களின் ஆயுதங்கள் களையப்படுவதுடன், அவற்றை அரசியலில் இருந்து ஓரம் கட்டவுமே ஆட்சியாளர்கள் எண்ணியுள்ளனர் என்பதற்கு இன்றைய அணுகுமுறைகள் கட்டியம் கூறுவதாய் உள்ளன.

இதனை தமிழ்க் கட்சிகள் ஓரளவு உணர்ந்துள்ள போதிலும், புலிகளை சுலபமாக ஆட்சியாளர்களால் வெற்றிகொள்ள முடியாது என்ற நம்பிக்கை தமிழ்க் கட்சிகளுக்கு இருக்கிறது.

**அரசுக்கும், புலிகளுக்கும் இடையிலான போரில் குளிர்காய்ந்து கொண்டிருக்கும் தமிழ்க் கட்சிகள் தங்களையோ, அரசையோ நம்புவதைவிட புலிகளையும், பிரபாகரனையும் மலையாக நம்பியிருக்கின்றன.**

ஆட்சியாளரும் இனப்பிரச்சனையை தீர்க்கப்போவதில்லை, அதனால் புலிகளும் போராட்டத்தை நிறுத்தப்போவதில்லை, எனவே அரசுக்கு தங்கள் உதவியும், தேவையும் தொடர்ந்து அவசியப்படும் என்பதுதான் முன்னாள் போராளிகளான தமிழ்க் கட்சித் தலைமைகளின் இன்றைய நம்பிக்கையாகும்.

**ஆனால், ஆட்சியாளர்கள் இந்த 'துஷ்டர்களை' கட்டுக்குள் வைத்திருக்க வேண்டும் என்பதிலும், ஒரு அளவுக்கு மேல் வளரவிட்டுவிடக்கூடாது என்பதிலும் அவதானமாக உள்ளனர். படையினர்கூட அவ்வாறான அணுகுமுறையைத்தான் கைக்கொண்டு வருகின்றனர்.**

யாழ் உள்ளூராட்சித் தேர்தலில் தென்னிலங்கைக் கட்சிகள் போட்டியிடவில்லையே என்று யாழ் படை அதிகாரியொருவர் சமீபத்தில் கவலை தெரிவித்திருந்தார்.

தமிழ் மக்களை விடுதலைப் புலிகளிடம் இருந்து மட்டுமல்ல, முன்னாள் போராளிகளிடமிருந்தும்' விடுவிப்பதுதான் படையினரின் இறுதி நோக்கம் என்பது ஒன்றும் இரகசியமல்ல.

**தமிழ் மக்களை மிகப் பணிவுடன் கூடிய மக்களாகவும், ஆட்சியாளரதும் அவர்களது படைபலம் குறித்தும் மிகவும் பயந்த சுபாவம் கொண்ட மக்களாகவும் வாழ வைப்பது ஒன்றுதான் படையினரின் இலட்சியம். சமாதானத்திற்கான யுத்தம் என்பதை அவர்கள் அவ்வாறுதான் புரிந்துகொண்டுள்ளனர்.**

அந்த இலட்சியத்தை ஈடேற்றுவதற்கு முதலில் விடுதலைப் புலிகளை வெற்றி கொண்டாக வேண்டும். அதுவரை தந்திரோபாயமாக முன்னாள் போராளி இயக்கங்களுடன் படையினர் உறவு வைத்திருக்கின்றனர்.

மொத்தத்தில், முன்னாள் போராளிகளான தமிழ்க் கட்சிகள் இப்போது ஆயுதங்களுடன் பந்தாவாக, உலாவித்திரிவதற்கும், தங்கள் இன்றைய நிலைப்பாடுகளுக்கும் எவ்வகையிலும் பொருத்தமற்ற ஈழம், தமிழீழம் என்று தொடங்கும் கட்சிப் பெயர்களுடன் இயங்குவதற்கும் புலிகளின் இருத்தல்தான் காரணமாகும்.

**இத்தகைய தந்திரோபாய உறவுகளின் மூலமாக ஆட்சியாளர்கள் பெற்றுள்ள பயன் பாரியதாக உள்ளது. அந்தப் பயன்பாடு சிங்கள, பௌத்த மேலாதிக்க நலன்களுக்கு சாதகமாகவும் அமைந்திருக்கிறது.**

தமிழ்க் கட்சிகளும் ஆட்சியாளருடனான உறவுமூலம் பயன்பெற்றுள்ளன. ஆனால் அந்தப் பயன்பாடு என்பது குறிப்பிட்ட கட்சித் தலைமைகள் தனிப்பட்ட ரீதியில் தங்கள் வசதிகளை பெருக்கிக் கொண்டு, வளமான வாழ்க்கைக்கும், படாடோபமான நடைமுறைகளுக்கும் மாறுவதற்கே உதவியுள்ளன.

தமிழ் பேசும் மக்களின் தரப்பை அரசியல் ரீதியில் வலுப்படுத்துவதாக அரசு, தமிழ்க் கட்சி உறவுகளின் பயன்பாடு எவ்வகையிலும் சாதகமாக அமைந்திருக்கவில்லை.

யாழ் மாவட்ட தேர்தல் பிரசாரக் காட்சிகள் தமிழ்க் கட்சிகள் மீதிருந்த குறைந்தபட்ச நம்பிக்கைகளைக்கூட இல்லாதொழித்துவிட்டன.

தாம் அரசுடன் நேருக்கு நேர் நின்று உரிமைக் குரல் கொடுப்போர் போன்று யாழ் மக்களிடம் இக் கட்சிகள் பிரசாரம் செய்து வருகின்றன. அரசின் தீர்வுப் பொதியை கடுமையாகக் குறைகூறியே தேர்தலில் போட்டியிடும் முன்னாள் போராளிக் கட்சிகள் பிரசாரம் செய்வதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

அதேசமயம், யாழ் உள்ளூராட்சித் தேர்தல் என்பது அரசின் தீர்வுப் பொதியை மக்களிடம் எடுத்துச் சொல்லும் தேர்தல் எனவும், போட்டியிடும் கட்சிகள் தங்கள் நட்புக் கட்சிகள் எனவும் ஆட்சியாளர்கள் வெளியுலகின் காதுகளுக்கு எட்டக்கூடியதாக உரத்துக் கூறிவருகின்றனர்.

**யாழ் மக்கள் முன்பாக தீர்வுப்பொதியை தூக்கி எறிந்து பேசும் தமிழ்க் கட்சிகள், உலக அரங்கில் தீர்வுப்பொதியைச் சொல்லி அனுதாபம் தேடும் ஆட்சியாளரின் பிரசாரத்தையிட்டு மௌனம் சாதித்து வருகின்றன. இவ்வாறான தருணங்களில் ஆட்சியாளர்களின் பிரசாரங்கள் தங்கள் காதுகளில் விழாதது போன்று இருந்துவிடுவதே தமிழ்க் கட்சிகளின் அணுகுமுறையாக மாறிவருகிறது.**

யாழ் உள்ளூராட்சித் தேர்தலில் தாம் போட்டியிடாவிட்டால், ஆளும் கட்சி வேட்பாளர்கள் போட்டியிட்டுவிடுவர் என்று தமிழ்க் கட்சிகள் சில பூச்சாண்டி காட்டியிருந்தன.

ஆனால், ஆட்சியாளரின் முகவர்களாகவே தமிழ்க்கட்சிகள் அங்கு போட்டியிடுகின்றன என்பதையே ஆட்சியாளர்களும், அமைச்சர்களும் கூறிவரும் கருத்துக்கள் நன்கு எடுத்துக்காட்டுகின்றன.

இன்னொரு அதிர்ச்சிகரமான உண்மையும் வெளிவராமல் உள்ளது. பொதுஜன முன்னணி போட்டியிடுவதை தமிழ்க் கட்சிகள் சில விரும்பவில்லை. அரசுக்கு ஆதரவு தரும் தங்கள் கட்சிகள் உள்ளபோது பொதுஜன முன்னணி யாழில் போட்டியிடவேண்டிய தேவை என்ன? என்று கேட்டனராம்.

அமைச்சர் பெர்னான்டோ புள்ளேயும் குறிப்பிட்ட தமிழ்க்கட்சிகளின் கருத்தை ஏற்றுக்கொண்டு கட்சிக்குள் வாதிட்டாராம்.

யாழ் தேர்தலை ஜனநாயகத் தேர்தலாக காண்பிக்க வேண்டுமானால் ஆளும் கட்சி போட்டியிடுவதைவிட தமிழ்க் கட்சிகள் போட்டியிடுவதுதான் வெளியுலகின் கண்களுக்கு திருப்தியாக இருக்கும் என்பதையும் ஆட்சியாளர்கள் உணர்ந்தே உள்ளனர்.

இவ்வாறான நிலையில்கூட முன்னாள் போராளி இயக்கங்களைவிட, கூட்டணியினர் வெற்றி பெறுவதுதான் மேலும் சிறப்பாக இருக்கும் என்று ஆட்சியாளர்கள் விரும்பினர்.

**புலிகளை யாழ் மக்கள் ஓரம் கட்டியதுடன், முன்னாள் தீவிரவாதிகளையும் நிராகரித்துவிட்டனர். என்றும், அரசின் சமாதான முயற்சிகளின் பின்னர் யாழ் மக்களிடம் ஏற்பட்டுள்ள மனமாற்றம்தான் இது என்றும் உலகுக்கு காண்பிப்பதே ஆட்சியாளரது நோக்கமாக அமைந்திருக்கிறது.**

கூட்டணியினரின் வேட்புமனுக்களை ஏற்குமாறு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கூட வியப்பளித்திருக்கிறது.

வேட்பு மனுவில் உள்ள ஒருவரது தகுதியின்மைக்காக குறிப்பிட்ட வேட்பு மனு முழுவதையுமே நிராகரிப்பது எவ்வாறு நீதியாகும்? என்று கூட்டணி சார்பாக எழுப்பப்பட்ட கேள்வி நியாயமானதாக இருக்கலாம். ஆனால் தேர்தல் சட்டம் அவ்வாறுதான் இருக்கிறது.

எனவே சட்டதை மாற்றிவிட்டு எதிர்காலத்தில் இத்தவறு ஏற்படாமல் தடுக்கலாமே தவிர, தற்போதுள்ள சட்டத்திற்கு புறம்பாக தீர்ப்பு அமையாது என்றே பொதுவாக எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் புளொட் சட்டத்தரணியின் பலத்த ஆட்சேபனை மத்தியிலும் நீண்ட வாதப் பிரதிவாதத்தின் பின்னர் கூட்டணியினருக்கு சாதகமாக தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

**அதனால், ஆட்சியாளர்களுக்காக யாழ் மாவட்டத்தில் நடத்தப்படும் உள்ளூராட்சித் தேர்தல் களத்தில் கடைசிநேரப் பந்தயக் குதிரையாக கூட்டணியும் கலந்து கொண்டிருக்கிறது.**

ஏதாவது குளறுபடிகள் நடந்தால் தவிர பந்தயத்தில் முன்னுக்கு வரும் வாய்ப்பு கூட்டணிக்கு அரிதாகவே உள்ளது.

**தேர்தல் பந்தயத்தில் கூட்டணி முன்னே வராவிட்டால்கூட பழம்பெரும் தமிழ்க் கட்சி, முதுபெரும் அரசியல்வாதிகளைக் கொண்ட கட்சி என்ற முத்திரைகளுடன் உள்ள கூட்டணியும் பங்குபற்றுவது இதனை நியாயமான தேர்தல் என்று உலகுக்கு காட்டும் அரசின் முயற்சிகளுக்கு மேலும் ஒரு சாதகமாகவே அமைந்திருக்கிறது.**

எவ்வாறெனினும் இத்தேர்தலில் மிகக் குறைவான வாக்களிப்புத்தான் நடைபெறும் எனத் தெரிகிறது.

கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தல்களில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையான வாக்குகள் தமிழ்பேசும் மக்களின் ஒட்டுமொத்தமான அபிலாசைகளுக்கு எதிராக அளிக்கப்பட்டு வந்தன.

**1977ல் தமிழீழக் கோரிக்கை மக்கள் கோரிக்கையாக எழுச்சி கண்டிருந்தபோதுகூட, அதற்கு எதிரான வேட்பாளர்களுக்கும் வாக்களிக்க ஆட்கள் இருந்தனர்.**

தமிழ் சமூகத்தில் சிறுபான்மையான எண்ணிக்கையுடைய மேற்படி வாக்கு வங்கியைத்தான் இம்முறை சகல தமிழ்க் கட்சிகளும் தங்களுக்குள் பங்கு போட்டுக் கொள்ளப் போகின்றன.

பதவி உயர்வுகள், வேலை வாய்ப்புப் பற்றிய நம்பிக்கைகள், சலுகைகள், மற்றும் பண உதவிகள் பற்றிய வாக்குறுதிகள், கவர்ச்சிகரமான பிரசாரங்கள் மூலம் தமிழ் சமூகத்தின் பெரும்பாலான மக்களின் வாக்குகளை இக் கட்சிகள் பெறுவது இயலாத ஒன்றாகும்.

மக்களை நிர்ப்பந்தப்படுத்தி வாக்களிக்க அழைத்து சென்றால்கூட இக் கட்சிகளின் முகத்தில் கரிபூசும் அளவுக்கு மக்கள் தெளிவு பெற்றுள்ளதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

எந்தவொரு கட்சியும் வழிகாட்டாமல் இருந்தும்கூட, தாங்கள் செல்லவேண்டிய வழியை சுயமாகத் தெரிவு செய்துள்ள பெரும்பாலான யாழ் மக்களின் அரசியல் முதிர்ச்சி வியப்புக்குரியதேயாகும். தேர்தல் குளறுபடி இல்லாமல் நடந்தால் உலகமும் வியக்கும். கூட்டணி உட்பட தமிழ்க் கட்சிகளும், அரசாங்கமும் அப்போது திகைத்து நிற்கும் காட்சியை காணக்கூடியதாக இருக்கும். ■

---

## சந்திக்கு வராத சங்கதிகள் –நக்கீரன்–

எல்லாம் கச்சிதமாக நடக்கின்றன. தமிழ் மக்களுக்கு ஜனாதிபதி பொங்கல் பரிசாக தந்திருப்பது யாழ் நூலக தற்காலிக கட்டடம்.

பொங்கல் பரிசு தருவது ஜனாதிபதிக்கு புதிய விடயமல்ல.

யாழ் நூலகத் திறப்பு ஆரவாரங்களுக்குள் கடும் சட்டம் ஒன்று புகுந்துவிட்டது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் சிறையில் இருப்பவர்களைப் பார்வையிட கடும் கட்டுப்பாடு வந்திருக்கிறது. வாரத்தில் ஒரே ஒருவர்தான் கைதியைப் பார்வையிடலாம். அவ்வாறு பார்வையிடும் நபர், தான் வசிக்கும் பொலிஸ் நிலைய முன் அனுமதியைப் பெற வேண்டும் என்பதுதான் புதியவிதி.

பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டிருப்போரில் அநேகமானோர் தமிழர்கள்தான்.

இனிமேல் அவர்களை உறவினர்கள் பார்வையிடுவதற்கும் பலத்த சோதனை வந்துவிட்டது. பொலிஸ் நிலையத்தில் முன் அனுமதி பெறுவது என்றால் எத்தனை சிரமம்? எத்தனை அலைச்சல்? அதுதவிர வாராவாரம் அனுமதி கொடுப்பார்களா? என்பதும் சந்தேகம்தான்.

ஆக, ஒருவாரத்திற்கு ஒருமுறைகூட பார்வையிட முடியாமல் போகலாம்.

களுத்துறை சிறைப்படுகொலைக்கு காரணமானவர்களுக்குத் தண்டனை கொடுக்கப்படவில்லை. தமிழ்க் கைதிகளுக்கு ஏற்கனவே இருந்த உரிமைகள்கூட வெட்டிக் குறைக்கப்பட்டுவிட்டன.

இதுவும் பொங்கல் பரிசுதான்.

முன்புபோல அல்லாமல் இப்போது மிக நாசூக்காக காரியங்கள் நடக்கின்றன.

தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட வரலாற்று அநீதிக்கு தனது அரசு பரிகாரம் செய்துள்ளதாக ஜனாதிபதி கூறியிருக்கிறார்.

ஜனாதிபதி எப்போதுமே நன்றாகப் பேசுகிறார். ஆனால் காரியத்தில் நன்றாகவும் அவர் செய்ய யார் தடையாக இருக்கிறார்கள் என்பதுதான் தெரியவில்லை.

யாழ் நூலக எரிப்பு வரலாற்று அநீதி என்பதில் ஐயமில்லை. ஆனால் அந்த அநீதிக்கு காரணமானவர்களில் ஒருவரான காமினி திசநாயக்காவுடன்தான் சந்திரிக்கா அம்மையார் சில காலம் அரசியல் கூட்டு வைத்திருந்தார் என்பதும் நினைவுக்கு வராமல் இல்லை.

இன்னொரு முக்கியமான கேள்வியும் இன்றைய ஆட்சியாளரின் இதய சுத்தி பற்றிய சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. ஐ.தே.கட்சி ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற சம்பவங்கள் மட்டும்தான் வரலாற்று அநீதிகளா? அதற்கு முன்னர் சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியிலும், இன்றும் நடைபெற்ற, நடைபெறுகின்ற சம்பவங்கள் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்ட தகுந்த நீதி என்று அர்த்தமா?

தைப்பொங்கல் தினத்தன்று யாழ் மண்ணில் நின்றுகொண்டு, ஐ.தே.கட்சியின் ஆட்சியில் செய்யப்பட்ட அநீதி பற்றி கௌரவ அமைச்சர்கள் உரையாற்றினார்கள்.

உண்மையில், தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட வரலாற்று அநீதிகளை அவர்கள் நினைத்துப் பார்த்திருந்தால், அவற்றுக்காக வருந்துவதாக இருந்தால், யாழ் முற்றவெளிப் பக்கம் சென்றிருக்க வேண்டும்.

1974 தை மாதம் பத்தாம் நாள் தமிழாராய்ச்சி மாநாட்டில் நடைபெற்ற மற்றொரு மிகப் பெரும் வரலாற்று அநீதியின் ஞாபகார்த்தமாக ஒன்பது நினைவுக் கற்கள் அங்கு இருக்கின்றன.

தமிழாராய்ச்சி மாநாட்டில் புகுந்து வேட்டையாடிய பொலிசாரால் கொல்லப்பட்ட ஒன்பதுபேரின் நினைவுக்கற்களே அவை. அந்த நினைவுக் கற்கள்கூட அடிக்கடி பொலிசாரால் உடைத்து வீழ்த்தப்பட்டமை மற்றொரு சோகம்.

### யாழ் நூலக திறப்பும் ஒன்பது நினைவுக் கற்களும்



சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியில் நடைபெற்ற அப்படுகொலைக்கு செய்யப்பட்ட பரிகாரம் என்ன தெரியுமா? சம்பந்தப்பட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி சந்திரசேகராவுக்கு பதவி உயர்வு தரப்பட்டது. யாழில் இருந்தால் ஆபத்து என்பதால் வேறு பகுதிக்கு இடமாற்றமும் தரப்பட்டது.

தமிழாராய்ச்சி மாநாட்டின் படுகொலைக்கு பழி வாங்க புறப்பட்ட முதல் போராளியாக பலியானவன்தான் சிவகுமாரன். உரும்பிராயில் உடைந்து கிடக்கிறது அவனது சிலை.

ஆக, தமிழ் பேசும் மக்கள் ஒடுக்கப்பட்டதும், அநீதிக்கு உள்ளானதும் ஆயுதப் போராட்டம் எழக் காரணமானதும், ஐ.தே.கட்சி ஆட்சியில் மட்டும்தான் எனக் கூறுவதுகூட ஒருவகையில் வரலாற்று அநீதிதான். சுயலாப அரசியல் கண்ணோட்டத்துடன் வரலாற்றை திரிபுபடுத்துவதுதான்.

அவர்கள் செய்த தவறை இவர்கள் சொல்லுவார்கள். இவர்கள் செய்த தவறை அவர்கள் சொல்லுவார்கள். தாங்கள் தாங்கள் செய்த தவறுகளை ஒப்புக்கொள்ள மாட்டார்கள். பரிகாரமும் செய்ய மாட்டார்கள். இதுதான் இங்கு வரலாறு. இப்போதும் அதில் மாற்றமில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் காமினி திசநாயக்கா குதித்தபோது, யாழ் நூலக எரிப்பு தொடர்பாக விசாரணைக் கமிஷன் போடப்படும் என்று சந்திரிக்கா அம்மையார் அறிவித்தார். அதனை வானொலி, தொலைக் காட்சிகள் திரும்பத் திரும்பக் கூறின என்பது யாருக்காவது நினைவு இருக்கிறதா?

இப்போது அந்தக் கதையே இல்லை. அரசியல் தேவை கருதித்தான் இங்கே நியாயம், அநியாயம் தீர்மானிக்கப்படுகிறது.

யாழ் நூலகம் அமைக்க கோடிக்கணக்கான ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாம். பொங்கல் தினத்தை முன்னிட்டு மும்மொழிகளிலும் சமாதான உரை நிகழ்த்தினார் ஜனாதிபதி. இவையெல்லாம் இங்குள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளை நன்கு கவர்ந்திருக்கும்.

உள்ளூராட்சித் தேர்தல், யாழ் நூலக திறப்பு விழா. நிதி ஒதுக்கீடு இவையெல்லாம் யாழ் குடாநாட்டை அரசாங்கம் சொர்க்கபுரியாக்கப் போகிறது என்று உலகுக்கு விடுக்கும் செய்திகள்தான்.

இனி உலகம் தாராளமாக உதவ முன்வரும். வடக்கை புனரமைப்பதில் அரசுக்குள்ள அக்கறையைக் கண்டு உலக நாடுகள் வாரிவழங்கும்.

"நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியோடி புல்லுக்கும் அங்கே பொசியுமாம்" உதவிகள் கிடைத்த பின்னர் நாட்டின் ஏனைய பகுதிகள் நெல்லாகவும்; யாழ் குடாநாடு புல்லாகவும் ஆட்சியாளரின் கண்களுக்கு தெரியாவிட்டால் சரிதான். ■



படிப்பகம்

www.padippakam.com

# கொள்ளை ராணி பூலான்தேவி

79

தருவது ரசிகன்

கலெளி கிராமத்துக்குள் புழுதியைக் கிளப்பிக் கொண்டு வந்த பொலிஸ் ஜீப்புக்களின் உறுமல் சத்தம் சோப்ரானுக்குக் கேட்டுவிட்டது.

பூலான்தேவியும், மான்சிங்கும் வருவார்கள் என்று ஆவலோடு இருந்தவனுக்கு, அது எதிர்பாராத அதிர்ச்சிதான்.

பூலானின் ஆட்களான ராம் சங்கர், லால்தூ இருவரும் தரையில் படுத்துக் கண்ணயர்ந்து போயிருந்தனர்.

சோப்ரானை நல்லவன் என்று நம்பியதால், அவனை பூலானிடம் அறிமுகம் செய்வதோடு, தங்கள் கோஷ்டியிலேயே இருக்குமாறு கேட்க வேண்டும் என்று நினைத்தவாறே ராம்சங்கர் தூங்கி விட்டான்.

ஜீப்புகள் வருவதைக் கண்டதும் சோப்ரான் முதலில் தன் ஆட்கள் மூவரையும் உஷார்படுத்தினான்.

ராம்சங்கரையும், லால்தூ இருவரும் அப்படியே கிடந்து பொலிசாரிடம் மாட்டிக் கொள்ளட்டும் என்று விட்டுவிட்டான்.

ஆனால், சோப்ரானின் நினைப்புக்கு மாறாக நிகழ்ச்சிகள் நடந்தன.

அவர்கள் அந்த வீட்டை விட்டு வெளியேறும் முன்பாகவே, சப்-இன்ஸ்பெக்டர் யாதவ் தலைமையிலான பொலிஸ் கோஷ்டி முற்றுகை இட்டு விட்டது.

சோப்ரானும், அவன் ஆட்களும் தப்பிச் செல்ல, வீட்டுக் கதவை திறந்த போது, பொலிசாரின் இயந்திரத் துப்பாக்கிகள் சடசடத்தன.

மிகத் துரிதமாக பொலிஸ் அதிரடிப் படை செயற்பட்டுவிட்டது.

இத்தனை துரிதத்தை சோப்ரான் எதிர்பார்த்தான் இல்லை.

அப்படியே கதவருகே சுருண்டு விழுந்தான். அவன் ஆட்கள் உள்ளே ஓடினார்கள்.

அதிரடிப்படை பாய்ந்தது.

துப்பாக்கிகள் வெடிக்கும் ஓசை கேட்டு ராம்சங்கரும், லால்தூவும் திடுக்கிட்டு எழுந்தனர்.

அதற்கிடையே பொலிஸ் படை வீட்டுக்குள் புகுந்து சரமாரியாகச் சுட்டது.

ராம் சங்கர் படுக்கையில் இருந்து எழவே வாய்ப்பில்லாமல் சுட்டுக் கொல்லப்பட்டான்.

சோப்ரானின் ஆட்களுடன் சேர்ந்து பின்புறமாய் தப்பி ஓடினான் லால்து.

நால்வரையும் பின்புறம் தயாராய் காத்திருந்த பொலிஸ் படையின் துப்பாக்கி ரவைகள் வரவேற்றன. உடம்பெங்கும் முத்தமிட்டு உயிர் குடித்தன.

யாதவ் அந்த வீட்டின் மூலை முடுக்கெல்லாம் பூலானைத் தேடினார்.

அவர் முகம் ஏமாற்றத்தால் சுருங்கியது.

கொள்ளைக் கோஷ்டியைச் சேர்ந்த ஐந்து பேர் வேட்டையாடப்பட்டு இரத்த வெள்ளத்தில் கிடக்கின்றனர்.

பெரிய வேட்டைதான். அதற்காக மேலதிகாரிகள் நிச்சயம் பாராட்டத்தான் போகிறார்கள்.

அப்படியிருந்தும் யாதவ்வுக்கு திருப்தி இல்லை.

"புலிவேட்டைக்கு வந்த இடத்தில் ஐந்து முயல்களை சுட்டிருக்கிறோம்!" சலிப்பாகச் சொல்லிக்கொண்டு, தன் பூட்ஸ் காலால் தரையை உதைத்தார்.

தகவல் சொன்ன ஆள் நடுங்கிக் கொண்டிருந்தான்.

"வாடா இங்கே!"

"ஐ...ஐயா..."

"அதெப்படி, சேலை கட்டிக் கொண்டு பூலான் வந்தாளா?" யாதவ் அறைந்த அறையில் அவனுக்கு தலை சுழன்றது.

ஐந்து உடல்களையும் தூக்கி ஜீப்பில் போட்டுக் கொண்டு போனார்கள்.

கலெளி கிராமத்தில் பொலிஸ் வேட்டை நடந்த செய்தியை பூலானும், மான்சிங்கும் அறிந்தனர். அங்கு வரவிருந்த பூலானின் ஆட்களும் செய்தி அறிந்து கிராமப் பக்கமே எட்டிப்பார்க்கவில்லை.

அன்று இரவு முழுக்க காத்திருந்த பொலிஸ்படை ஏமாற்றமடைந்தது. சப்.இன்ஸ்பெக்டர் யாதவ் சோர்ந்து போனார்.

என்றாலும் விழுந்தும் மீசையில் மண்படவில்லை என்ற ரீதியில் பொலிசார் பத்திரிகைகளுக்கு செய்தி கொடுத்தார்கள்.

அச் செய்தியை நம்பி பத்திரிகைகளும் முன் பக்கத்தில் பிரசுரித்தன.

"பூலான் குழுவினருடன் பொலிஸ் அதிரடிப்படை மோதல். பூலானும் மான் சிங்கும் தப்பியோட்டம். பூலான் குழுவில் ஐந்து பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்த நடவடிக்கைக்கு பொறுப்பாக இருந்த சப்-இன்ஸ்பெக்டர் யாதவ் இன்ஸ்பெக்டராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்."

பூலானைக் கொலை செய்யும் நோக்கத்தோடு காத்திருந்த சோப்ரானும், அவன் ஆட்கள் மூவரும் பூலான் ஆட்கள் என்று முத்திரை குத்தப்பட்டதுதான் வேடிக்கை.

பூலானுக்கும் ஆச்சரியமாகத்தான் இருந்தது. மான் சிங்குக்கு சோப்ரானைத் தெரியும். அவன் ஏன் தங்கள் ஆட்களுடன் அங்கு காத்திருந்தான், ஒருவேளை மல்கான் சிங்குடன் பிரச்சனைப்பட்டுக் கொண்டு, தங்களுடன் சேர வந்திருக்கலாம், என்று நினைத்தான் மான் சிங்.

ஆனால், மோதலில் கொல்லப்பட்டனர் என்ற செய்திதான் பூலானுக்கும், மான் சிங்குக்கும் கெட்ட கோபத்தை ஏற்படுத்தியது.

"படுபாவிகள், எத்தனை அபாண்டமாகப் பொய் சொல்கிறார்கள்!" என்றாள் பூலான்.

இன்னொரு பத்திரிகையை மீரா படித்துக் காண்பித்தாள். பூலான் சிரித்தேவிட்டாள்.

"பொலிசாருக்கும் கொள்ளை ராணி பூலான்தேவி குழுவினருக்கும் இடையே நடைபெற்ற மோதலில், பூலான் தேவி படுகாயம் அடைந்துள்ளாள்.

பூலான்தேவிக்கு சிகிச்சையளிக்க அவள் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் மருத்துவர்களைக் கடத்திச் செல்லக்கூடும் என்பதால், பொலிஸ் கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

கொள்ளைராணி பூலான் தேவியின் தளபதியான மான் சிங் படுகாயம் அடைந்த பூலான்தேவியை தோளில் சுமந்துகொண்டு தப்பியோடியதாக பொலிசார் தெரிவிக்கிறார்கள்."



பூலான்

அதுதான் செய்தி.

தன் சகாக்கள் இருவர் பலியான கவலையைக்கூட மறந்து சிரித்து விட்டாள் பூலான்.

கொல்லப்பட்ட ஐந்து பேரினது உடல்களையும் பொலிசார் பொதுமக்களின் பார்வைக்கு வைத்திருந்தனர்.

கொள்ளைக் கோஷ்டிகளுக்கு உதவி செய்பவர்களும் இப்படித்தான் சுட்டுக் கொல்லப்படுவார்கள் என்றும் பொலிசார் எச்சரித்தனர்.

கலெளி கிராமத்தில் கூடுவதாக இருந்த பூலான் ஆட்கள் அதன் அருகிலுள்ள கிராமம் ஒன்றில் கூடினார்கள்.

தலைமறைவாக வாழ்ந்த காலத்தில் தாங்கள் பட்ட கஷ்டங்களை பூலானிடம் சிலர் விபரித்துக் கூறினார்கள்.

மறுபடியும் ஒன்று சேர்ந்ததை கொண்டாடும் முகமாக, சரக்கு லொறிகளை கொள்ளையிடலாம் என்றான் மான் சிங்.

"பொருட்கள் வேண்டாம். பணம் மட்டும் போதும்!" என்று உத்தரவிட்டாள் பூலான் தேவி.

சில காலமாக கொள்ளைக் கோஷ்டிகளின் நடமாட்டம் இல்லை என்பதால், சரக்கு லொறிகள் பயமின்றி சென்று வந்தன.

ஒரே இரவில் ஆறு, ஏழு லொறிகளில் கொள்ளையிட்டனர்.

"அரிசி, சீனி போன்ற பொருட்களுடன் சென்ற லொறிகளை கடத்திக் கொண்டு போகலாம்! கிராம மக்களுக்கு கொடுக்கலாம்" என்றான் மான்சிங்.

முதலில் மறுத்தபோதும், பின்னர் சம்மதித்தாள் பூலான்தேவி.

இரண்டு லொறிகளை அவ்வாறு கடத்திச் சென்றார்கள். மூன்று கிராமங்களில் அரிசி மூட்டைகளும் சீனி மூட்டைகளும் இறக்கப்பட்டன.

பூலான் முன்னின்று பங்கிட்டு விநியோகித்தாள்.

பூலானை வாயார வாழ்த்திபடி கிராம மக்கள் வாங்கிச் சென்றார்கள்.

இவ்வாறான நடவடிக்கைகளால் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் கிராமங்களில் பூலான் நடமாடும் தெய்வமாக மதிக்கப்பட்டாள்.

பூலானின் நடமாட்டம் பற்றிய தகவல்களை கிராம மக்களிடம் இருந்து பொலிசாரால் பெறமுடியவில்லை.

பூலான் குழுவினருடன் தொடர்பு வைத்திருப்பதாக கருதப்பட்ட பலரைப் பிடித்துப் போனார்கள். கிராம மக்கள் முன்பாகவே அடித்து நொறுக்கினார்கள்.

**கடந்த வாரம்**

**சில காலம்**
**தலைமறைவாக இருந்த**
**பூலான் மீண்டும்**
**தன் ஆட்களை சந்திக்க**
**அழைப்பு விடுக்கிறாள்.**
**அந்தச் செய்தி**
**பொலிசாருக்கும் கிடைக்கிறது.**
**அதே சமயம்**
**இன்னொரு கொள்ளைக்கோஷ்டித்**
**தலைவனான மல்கான் சிங்**
**பூலானை தீர்த்துக்கட்ட**
**தன் ஆளான சோப்ரான்**
**என்பவனை அனுப்பிவைக்கிறான்.**

இனி...

என்ன செய்தும் பூலான் தேவியின் செல்வாக்கு வளர்ந்ததே தவிர, அவளை நெருங்க பொலிசாரால் முடியவில்லை.

பூலான் தேவியின் பெயர் பயங்கரமாக அடிபட்டதால், சில கொள்ளைக் கோஷ்டிகள் அவள் பெயரைப் பயன்படுத்தி கொள்ளையடித்தன.

சற்றுத் தாமதமாகத்தான் அந்தத் தகவல்கள் பூலானுக்குக் கிடைத்தன.

"எப்படியாவது அந்தத் துரோகிகளை பிடித்து சுட்டுப் போடவேண்டும். திட்டம் போட்டுத் தா!" என்று மான் சிங்கிடம் பொறுப்பை ஒப்படைத்தாள்.

மான் சிங் ஒருமாதகாலமாக சிரமப்பட்டு தகவல்களைச் சேகரித்தான். அந்தக் கோஷ்டி யார் என்பதை அறிந்து கொண்டதோடு, அதற்குள் ஒருவனை விலைக்கும் வாங்கி விட்டான்.

வெறுமனே கொள்ளை மட்டும் நோக்கமல்ல என்பதும், அவர்கள் பூலானின் பெயரைப் பயன்படுத்துவதின் பின்னணியில் பல சதித்திட்டங்கள் இருப்பதையும் அறிந்த போது மான் சிங்கே அதிர்ந்துதான் போனான்.

உத்தரப் பிரதேசத்தில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரும் பூலானின் பக்கம் இருந்தனர்.

பூலானை துர்க்கையின் வடிவமாகவும் நினைத்துப் போற்றிப் புகழ்ந்தனர். பொலிசாருக்கோ தாங்க முடியாத எரிச்சல்.

பூலானைப் பிடிக்க வேண்டுமானால், அவளைத் தங்கள் தெய்வமாகக் கருதும் மக்களிடம் இருந்து பிரிக்க வேண்டும், என்று பொலிஸ் உளவுத்துறை திட்டம் போட்டது.

"பூலானை ஒழித்துக் கட்ட வேண்டுமானால், பூலானின் நற்பெயரை முதலில் ஒழித்துக்கட்ட வேண்டும்," என்று உத்தரவிட்டார்கள் மேலதிகாரிகள்.

கொள்ளைக் கோஷ்டி ஒன்றை கைக்குள் போட்டுக்கொண்டு தங்கள் திட்டத்தை நிறைவேற்ற ஆரம்பித்தனர்.

தாழ்த்தப்பட்ட மக்கள் உள்ள கிராமங்களுக்குள் புகுந்து கொள்ளையடிப்பது; ஆடுகள், மாடுகள், கோழிகள் போன்றவற்றையும் கொள்ளையிட்டு கவர்ந்து செல்வது போன்ற ஈவிரக்கமற்ற காரியங்களில் ஈடுபடுமாறு அந்தக் கோஷ்டியை தூண்டிவிட்டனர்.

"எத்தகைய கொடுமையையும் செய்யலாம். பூலான் தேவியின் பெயரை பயன்படுத்தினால் போதும்" என்று தூண்டிவிட்டனர்.

பூலானின் பெயரைக் கெடுப்பதில் பண்ணையார் ஜாதியைச் சேர்ந்த உயர் பொலிஸ் அதிகாரிகள் சிலரும் பின்னணியில் இருந்தார்கள்.

அரசியல்வாதிகளின் ஒத்துழைப்பும் கூட அதற்கு இருந்தது. பூலானை அவர்கள் அனைவருமே தங்கள் பொது எதிரியாக நினைத்தனர்.

மான் சிங் இத்தகவல்களை விபரித்த போது, ஆத்திரத்தின் உச்சிக்கே போய் விட்டாள் பூலான் தேவி.

"பொலிஸ்காரர்களே கொள்ளையடிக்க சொல்லிக் கொடுக்கிறார்களா?" பற்களை நறநறத்தாள்.

"இதெல்லாம் பொலிஸ் தந்திரம். கொள்ளை என்ன, கொலைகளைக்கூட செய்விப்பார்கள். பின்னர் விசாரணை என்று நாடகமாடி நம்மீது பழிபோடுவார்கள். இதெல்லாம் சகஜம்," என்றான் மான் சிங்.

"இன்னும் இரண்டு நாட்களில் கிராமம் ஒன்றை கொள்ளையிடப் போகிறார்கள். அதுதான் அவர்கள் நடத்தப் போகும் கடைசிக் கொள்ளை!" மான் சிங் திடமாகக் கூறினான்.

"ஏன்? திருந்தப்போகிறார்களா?"

"இல்லை, தீர்த்துக்கட்டப் போகிறோம்!"

பூலான் சந்தோசமானாள்.

"இந்தத் தகவல் எல்லாம்...?"

"அந்தக் கூட்டத்துக்குள்ளேயே ஆள் பிடித்துவிட்டேன்!"

பூலான் அக்கம் பக்கம் பார்த்தாள். யாருமில்லை. சட்டென்று நெருங்கி மான் சிங்கை கட்டிப்பிடித்துக் கொண்டாள்.

அவள் கன்னத்தின் இருபுறமும் தன் கைகளால் அழுத்தியபடி, அவள் உதடுகளை தன் முரட்டுத் தனமான உதடுகளால் பற்றிக் கொண்டான் மான்சிங்.

முன்பைவிட அவன் முத்தமிடுதலில் இப்போது ஒரு இலாவகம் இருந்தது. இதம் இருந்தது. பூலான் கண்களை மூடி, முத்தத்தில் இலயிக்க, மான் சிங் காலால் எட்டி கதவைத் தட்டி மூடினான்.

(தொடர்ந்து வரும்)

## கிளின்ரன் துள்ளுகிறார்

### நீச்சல் உடையில் படம்

அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரனும் அவர் மனைவி கிலாரியும் நீச்சலுடையில் ஜாலியாக இருந்தபோது புகைப்படம் எடுக்கப் பட்டனர்.



நீச்சல் உடையோடு கடற்கரையில் கட்டிப் பிடித்து ஆடிக்கொண்டிருந்தனர் கிளின்ரனும், கிலாரியும்.

அடிக்கடி குறிப்பிட்ட கடற்கரைக்கு சென்று ஜாலியாக ஓய்வெடுப்பது வழக்கமாம். இதனை எப்படியோ மோப்பம் பிடித்தார் ஒரு பத்திரிகையாளர்.

பலநாட்களாக கமராவும் கையுமாக அலைந்து திரிந்தார். இறுதியில் பலன் கிடைத்தது. கடற்கரைக்கு அருகில் உள்ள புதர் ஒன்றின் பின்னால் மறைந்திருந்தார். 'கிளிக்' செய்தும் விட்டார்.

மறுநாள் அமெரிக்க பத்திரிகைளில் படத்தைப் பார்த்ததும் கிளின்ரன் தம்பதிக்கு ஷாக்!

"அந்தரங்க வாழ்க்கையில் எப்படி மூக்கை நுழைக்க முடியும். பத்திரிகைகளுக்கு அதிக சுதந்திரம் கொடுக்கப்பட்டுவிட்டது. இதனை கட்டுப்படுத்தியாக வேண்டும்" என்று துள்ளியிருக்கிறார் கிளின்ரன்.

இன்னமும் சில படங்கள் இசகு பிசகான கோணங்களில் எடுக்கப்பட்டிருக்கலாம் என்று நினைத்து சங்கடத்தில் தவிக்கின்றனர் கிளின்ரனும், கிளாரியும்.

## சுன்னத் செய்யத் தடை

முஸ்லிம் ஆண்கள் சுன்னத் செய்வதுபோல, பெண்களுக்கும் எகிப்து நாட்டில் சுன்னத் செய்யப் படுகிறது.



சுன்னத் செய்வதால் பெண்களிடம் பாலியல் உணர்வுகள் குறையும் என்று கருதியே செய்து வந்தனராம். பழமைவாதிகளின் இக் கருத்தை எதிர்த்து இப்போது எகிப்தியப் பெண்கள் கிளர்ந்தெழுந்துள்ளனர்.

மனித உரிமை அமைப்புக்களும், பெண்கள் அமைப்புக்களும் போராட்டங்களை நடத்தி வருகின்றன.

சுன்னத்துக்கு தடை விதிக்குமாறு கோரி எகிப்திய உச்ச நீதிமன்றத்திலும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதனையடுத்து உச்ச நீதிமன்றம் பெண்கள் சுன்னத் செய்வதற்கு தடை விதித்துள்ளது. இஸ்லாத்தில் பெண்கள் சுன்னத் செய்ய வேண்டும் என்று கூறப்படவில்லை. அதனால் தடை செய்யப்படுகிறது. இந்த தடையை எதிர்த்து மேன் முறையீடு செய்யவும் முடியாது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்த உத்தரவை மீறுவோருக்கு கடும் தண்டனை வழங்க வேண்டும். டாக்டர்கள் இரகசியமாக செய்தால் அவர்களது உரிமம் இரத்துச் செய்யப்படும் என்றும் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

## பக்தியை வைத்து வியாபாரம்

இந்தியாவில் சபரிமலை ஐயப்பன் ஆலய மகரவிளக்குப் பூஜை காண்பதற்கு பக்தர்கள் அலைமோதினார்கள்.

மக்கள் கூட்டம் அதிகமானதால் கொள்ளை இலாபம் அடிப்போரும் கொட்டமடிக்கிறார்கள்.

உணவுப் பொருட்களின் விலை நான்கு மடங்கு உயர்ந்துவிட்டது. ஒரு கிளாஸ் தண்ணீர் ஐந்து ருபாவிற்கு விற்கப்படுகிறது. தங்குமிடத்திற்கு தேவஸ்தானம் விதித்த கட்டணம் 5 ருபா. ஆனால் 30, 35 ருபா என்று மனம் போன போக்கில் வசூலிக்கிறார்கள்.

கழிப்பறை, வாகனத்தரிப்பிடம் என்று சகல இடங்களிலும் கூடுதல் கட்டணம்தான் வசூலிக்கப்படுகிறதாம்.

மேற்பார்வையிட அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களும் கொள்ளை லாப வேட்டையில் கூட்டுச் சேர்ந்திருக்கிறார்கள்.

## சுஷ்மிதாவுக்கு மிரட்டல்

முன்னாள் உலக அழகி சுஷ்மிதா சென்னுக்கு இந்தியில் படவாய்ப்புக்கள் குவிகிறதாம்.

படு சந்தோசத்தில் இருந்த சுஷ்மிதாவை அதிரடி கிசுகிசு ஒன்று சங்கடத்தில் ஆழ்த்தியுள்ளது.

உலகில் மிக உயர்ந்த பணக்கார மன்னர் ஒருவருடன் சுஷ்மிதா தங்கியிருந்த கதையை புகைப்பட ஆதாரங்களுடன் வெளியிடப் போவதாக மிரட்டி உள்ளதாம் ஒரு நிறுவனம்.



இரகசியத்தை வெளியிடாதிருக்க ஒரு குறிப்பிட்டதொகைப் பணம் கேட்டார்களாம். ஆவணங்களைக் காட்டுங்கள், பின்னர் பணம் தருகிறேன் என்று கூறியுள்ளாராம் முன்னாள் அழகி.

புகைப்படங்கள் வெளியானால் தன் சினிமா மார்க்கெட்டும் வீழ்ச்சி கண்டுவிடுமே என்ற பயத்தில் இருக்கிறார் அழகி.

"மன்னரிடம் கறந்த பணத்தில் ஒரு பகுதியை தந்தால் என்ன குறைந்தா போய் விடுவீர்கள்?" என்று கேட்கிறதாம் அந்த நிறுவனம்.

"பணம் கொடுத்தால் மீண்டும் கேட்கமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்?" என்று கையைப் பிசைகிறார் சுஷ்மிதா.

தற்போதெல்லாம் தன் ஆண் நண்பர்களை சந்திப்பதில் பலத்த முன் ஏற்பாடுகளைச் செய்கிறாராம் சுஷ்மிதா.



உலக அழகியாக தெரிவானவர் இந்திய மங்கை டயானா.

டயானாவை அரசியலுக்குள் இழுக்க இந்தியாவின் முக்கிய கட்சி ஒன்று முயன்றதாம்.

"உலக அழகியாக இருந்து கொண்டு அரசியலில் ஈடுபட்டால், பட்டத்தை உருவி எடுத்துவிடுவார்கள்" என்று சொல்லி சமாளித்துக் கொண்டாராம்.

குறிப்பிட்ட கட்சியில் உள்ள பிரபல நடிகர் ஒருவருக்கு டயானாவின் உடம்பின் மீது ஒரு கண். அதுதான் தூண்டில் போட்டுப் பார்த்திருக்கிறார். "உன்னை எம்.பி.யாக்கிக் காட்டுகிறேன்" என்று உருகி வழிந்தாராம்.

டயானாவுக்கு ஒரு காதலர் இருக்கிறார். அயர்லாந்தைச் சேர்ந்தவர். இந்த ஆண்டுதான் திருமணம் செய்ய உத்தேசித்து இருந்தார்கள். ஆனால் திருமணத்திற்கு குறுக்கே கரடியாக வந்தது உலக அழகிப் பட்டம்.

இந்த அழகான கரடியை உதறிவிட மனம் வருமா? அதனால் 99ம் ஆண்டுவரை கல்யாணத்தை தள்ளிப் போட்டிருக்கிறார். உலக அழகியாக இருக்கும் ஒரு வருட காலத்தில் திருமணம் செய்யக்கூடாது என்பது விதி. மீறினால் பட்டம் பறக்கும்.

## நழுவல் ஜேம்ஸ் பொண்ட்

தற்போது ஜேம்ஸ் பொண்ட்டாக நடித்து வருபவர் புரோஸ்னன் ஜேம்ஸ் பொண்டாக நடித்து பிரபலமாக முன்னரே இவரை விழுந்து விழுந்து காதலித்தவர் கீலி ஷியோ சுமித். நான்கு வருடங்களாக புரோஸ்னன். காதலித்து வருகிறார்.

"உன்னையே கைப்பிடிப்பேன் கலங்காதே" என்று உறுதிமொழி கொடுத்திருந்தாராம் புரோஸ்னன்.

அரசியல்வாதிகளின் தேர்தல் கால வாக்குறுதியைபோல புரோஸ்னன். தன் வாக்குறுதியை இப்போது காற்றில் பறக்கவிட்டுவிட்டார்.



புரோஸ்னனின் முதல் மனைவி மார்பக புற்றுநோயால் ஆறு வருடங்களுக்கு முன்னர் இறந்து போனார். மூன்று பிள்ளைகள் உள்ளனர்.

புரோஸ்னனுக்கு 43 வயது. பிரபலமாகி விட்டதால் நண்பிகளும் அதிகமாகிவிட்டனர். அதனால் முன்னாள் காதலியை மறக்கத் தொடங்கி விட்டாராம்.

"நான் இனி பிரமச்சாரியாகவே இருப்பேன்" என்கிறார் புரோஸ்னன்.

இதனைக் கேட்டதும் பதறிப் போயிருக்கிறார் காதலி கீலி ஷியோ சுமித். "அடப்பாவி, பிரமச்சாரி மாதிரியா என்னுடன் நடந்து கொண்டார்?" என்று கொதிக்கிறார். ஆனால் புரோஸ்னன். அசருவதாகத் தெரியவில்லை.



படிப்பகம்

www.padippakam.com


# திரை நிறைந்த மிருகங்கள்

திரைப்படங்களில் மிருகங்களை நடிக்கவைப்பதில் நாம் அறிந்தவரை அமரர் சாண்டோ சின்னப்பா தேவர்தான் கில்லாடி. யானை, புலி, சிங்கம் என்று பல மிருகங்களை அசத்தலாக பயிற்சிகொடுத்து நடிக்க வைத்திருக்கிறார். ஆனால் அதிக மிருகங்கள் நடித்த ஒரே ஒரு படம் என்று உலக சாதனை படைத்திருப்பது ஆங்கிலப் படம் ஒன்றுதான். உலகைச் சுற்ற 80 நாட்கள் (AROUND THE WORLD IN 80 DAYS) என்னும் ஹொலிவூட் படம்தான் அந்த சாதனைக்குரியது.

1950ம் 60ம் ஆண்டுகளில் உலகெங்கும் பவனிவந்த அத் திரைப்படத்தில் எத்தனை மிருகங்கள் நடித்தன தெரியுமா? மொத்தம் எண்ணாயிரத்தி ஐநூற்றி ஐம்பத்தி இரண்டு மிருகங்கள்.



செம்மறி ஆடுகள் 3 ஆயிரத்தி 800, எருமை மாடுகள் 82 ஆயிரத்தி 448, கழுதைகள் 950, குதிரைகள் 800, குரங்குகள் 512, எருதுகள் 17, யானைகள் 15, காட்டுப் பூனைகள் 06, தீக்கோழிகள் 04. யப்பா! திரை கொள்ளாத மிருகக் காட்சியாக இருந்திருக்குமோ! (அப் படத்தில் ஒரு காட்சிதான் இங்கு பிரசுரமாகியுள்ளது) கிட்டத்தட்ட 40 வருடங்களாகியும் கூட இந்த சாதனையை யாராலும் முறியடிக்க முடியவில்லை. கெட்டியான சாதனை.



## கொத்துக் கொத்தாக குதித்தார்கள்

கூர்ந்து பாருங்கள். பல விமானங்கள் வட்டமடிக்கின்றன. சின்னப் புள்ளிகளாக தெரிவது அந்த விமானங்களில் இருந்து பொத்துப் பொத்தென்று குதிக்கும் படைவிரர்கள்.

மொத்தம் ஒன்பது ஆயிரம் பராத் துருப்புக்கள் பரசூட் மூலம் தரைக்கு நழுவுகின்றனர்.

(இந்தியப்படை யாழ் பல்கலைக்கழகப் பக்கம் குதித்தது நினைவுக்கு வருகிறதல்லவா)

இது நடந்தது நெதர்லாந்தில். இரண்டாம் உலகப்போர் முடிவடைவதற்கு ஒரு வருடத்தின் முன்னர் இந்த தாக்குதல் நடைபெற்றது. (1944 செப்டம்பர் 17)

ஜெர்மன் படைகளை தரைமார்க்கமாக நெருங்க நேசநாட்டு படைகளால் முடியவில்லை. அதனையடுத்து விமானங்களில் சென்று இறங்கி ஒரு படைப்பிரிவு தாக்குவது எனவும், அதன்பின்னர் ஏனைய படைப் பிரிவுகள் தரைமார்க்மாக முன்னேறுவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

மொத்தம் 2 ஆயிரத்தி 800 விமானங்களும், 1ஆயிரத்தி 600 கிளைடர் விமானங்களும் ஒன்பதாயிரம் பரா துருப்புக்களை ஏற்றிச் சென்று நெதர்லாந்தில் உள்ள அர்ன்ஹெம் என்ற இடத்தில் தரையிறக்கின. ஜெர்மன் படைகளின் பின்புறமாக இத் தாக்குதல் நடைபெற்றது.

இதுவரை கால போர்களில் மிக அதிக எண்ணிக்கையான பரா துருப்புக்கள் விமானத்தில் இருந்து தரையிறக்கப்பட்டு சண்டையிட்டமை உலக சாதனையாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இது நடந்து 50 வருடங்களுக்கு மேலாகிவிட்டது. அதன் பின்னர் பல போர்கள் நடைபெற்றும்கூட, இந்தச் சாதனை முறியடிக்கப்படவில்லை.

## நீள விளைச்சல்



பாம்புபோன்று நீளமாக இருக்கிறதல்லவா, காய்கறி வகையைச் சேர்ந்த பச்சை பீன்தான் (பயத்தங் காய் போன்றது) இது.

அமெரிக்காவின் வட கரோலினா மாநிலத்தில் ஃபுகாய் வரினா என்ற இடத்தில் உள்ள காய்கறிப் பண்ணையில் . இந்த நீளமான பச்சைப் பீன் விளைந்தது.

இதன் நீளம் 121.9 சென்ரி மீட்டர். உலகிலேயே இதுவரை விளைந்த பச்சை பீன்களில் மிக மிக மிக நீளமானது இதுதான். காய்கறிப் பண்ணையின் உரிமையாளர் எச்.ஹேர்லி பச்சை பீனின் நீளத்தை காண்பிக்கிறார்.



## சாதனைச் சுற்றளவு

ஆபிரிக்காவின் பல பாகங்களிலும் வளரும் ஒரு மரத்தின் பெயர் 'பஓபாப்' என்பதாகும். உலகிலேயே அதிகச் சுற்றளவு கொண்ட மரங்களாக இவை விளங்குகின்றன. இவற்றிலும் இம்மரம்தான் மிக அதிக சுற்றளவு கொண்ட மரம் என அறிவிக்கப் பட்டுள்ளது.

இதன் சுற்றளவு 43 மீட்டர் (141 அடி) அடர்ந்த காடுகளில் ஆய்வுகளை நடத்தும் பணியிலீடுபட்ட 6 பேர் கொண்ட குழுவினர் மரத்தின் பக்கத்தில் நிற்கிறார்கள்.

ஒரு சுவர் போல நீண்டதாக காணப்படுகிறதல்லவா. யாழ்ப்பாணத்தில் இப்படி மரம் நின்றிருந்தால் தேர்தல் சுவரொட்டிகள் ஒட்டி இருப்பார்கள். அல்லது சின்னமாவது வரைந்திருப்பார்கள்.

சோலையும், சாலையும் கொஞ்சி விளையாடும் காட்சியைப் பாருங்கள். வீட்டுக்கொரு மரம், வீதிக்கொரு மரம் வளர்க்கக்கூட கஷ்டப்படுகிறோம். வீதியின் இருபக்கமும் மரம் வளர்த்து வைத்திருக்கிறார்கள் பாருங்கள்.

ஜப்பான் நாட்டில் ரொக்சிசி என்னும் பகுதியில் உள்ள சாலைதான் இது. இதன் நீளம் 35.41 கிலோ மீட்டர். (22 மைல்)

உலகிலேயே அதிகமானதும் உயரமானதுமான மரங்களை இரு புறமும் கொண்ட நிழற்சாலை என்ற பெருமையை பெற்றிருக்கிறது. ஒரு மரத்தின் சராசரி உயரம் 27 மீட்டர் (88.6 அடி) மொத்தம் 13 ஆயிரத்தி 500 மரங்கள் உள்ளன.

1628 முதல் 1648 வரை 20 வருடகாலத்தில் நாட்டப்பட்ட மரங்களே இவையாகும். முன்னாள் சந்ததி இந்நாள் சந்ததிக்கு விட்டுச் சென்ற நிழல்.

தகவல் பெட்டி

## சாலையும் சோலையும்



வன்னி 'ஜயசிக்குறுய்' நடவடிக்கையில் மன்னகுளத்தில் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுத தளபாடங்களில் ஒரு பகுதி. இன்னொரு பகுதி முன்னர் வெளியாகி இருந்தது)

ஊடுருவித் தாக்கும் விசேஷ அதிரடிப்படையினர் மன்னகுளம் ஊடாக நகர்ந்தபோது, புலிகள் நடத்திய முற்றுகைத் தாக்குதலின்போதே இவை கைப்பற்றப்பட்டன. ஒன்பது மாதமாக ஜயசிக்குறுய் தொடர்கிறது. ஆயுத தளபாடங்களை புலிகள் கணிசமாக கைப்பற்றியிருப்பதும், மரபுப் போரும், கொரில்லாப் போரும் கலந்த போர் முறையில் புலிகள் அனுபவம் பெற்றுவருவதும் படையினருக்கு அச்சுறுத்தல்தான்.

## மாதம் ஒன்பது





படிப்பகம்

www.padippakam.com

## ஊதியம் மோதிரத்தில்

நடிகர் விஜுச்சக்கரவர்த்தி அணிந்திருக்கும் பெரிய தங்க மோதிரத்தில் 55 என்ற எண் பொறிக்கப்பட்டிருக்கும்.

அவருக்கு 55 ராசியான எண்ணாம். இன்னொரு வசதியும் உண்டு. தன்னை ஒப்பந்தம் செய்ய வரும் தயாரிப்பாளர்களிடம் டக் கென்று மோதிரத்தைக் காட்டி விடுகிறாராம். ஊதியம் 55 ஆயிரம் என்று அர்த்தம்.

## எளிமை காந்த்

ரஜினிகாந்துக்கு நகைகள்மீது ஆசையே கிடையாதாம். "நகைகள் மீது ஆசை வரவர அதிகமாக சம்பாதிக்க வேண்டும் என்று ஆசை ஏற்படும். அதோடு ஆடம்பரத்திற்கும் ஆபத்திற்கும் அஸ்திவாரமே நகைகள் தான். என்னுடைய கையில் ராகவேந்திர சுவாமிகளின் உருவம் பொறித்த தாம்பர செப்புக் கம்பியை மட்டுமே நிலையாய் அணிந்திருக்கிறேன்" என்கிறார் ரஜினி.

ரஜினிக்கு பலமுக உருத்திராட்சக் கொட்டை ஒன்றை அன்புப் பரிசாக கொடுத்திருக்கிறாராம் பாலசந்தர். ரஜினிமீது அத்தனை பாசம். கமல்மீது வைத்த பாசத்தையும் சேர்த்து ரஜினிமீது கொட்டுகிறாரோ?!

## விட்டது நானா?

தெலுங்கில் காதல் மன்னன் (நிஜத்திலும்) நாகார்ஜுனா. அவருடன் 'அன்னமார்ச்சார்யா' படத்தில் நடிக்க சங்கவி மறுத்ததாக செய்திகள் வெளியாகி இருந்தன.

அது உண்மையா? சங்கவி ஏன் பயப்படப்போகிறார்? சங்கவி சொன்ன தகவல் இது. "நானாவது மறுப்பதாவது. அப்போது நான் பிஸி. அதனால்தான் முடியவில்லை. தெலுங்குப் பத்திரிகைகள் திரித்து எழுதிவிட்டன".

## மாட்டிய ஜோடிகள்

தெலுங்கில் வெளுத்துக் கட்டும் ஹீரோ வெங்கடேஷ். சமீபத்தில் கிசு கிசுவில் வசமாக மாட்டிக் கொண்டார். ரம்யா கிருஷ்ணனும் அவரும் விடுதி ஒன்றில் காணப்பட்டதை தெலுங்குப் பத்திரிகை ஒன்று 'பளிச்' பண்ணிவிட்டது.

வெறும் வதந்தி என்று வெங்கடேஷ் மறுக்க, ஆதாரம் உண்டு வெளியிட்டுவிடுவோம் என்று பத்திரிகை சவால்விட்டது; வெங்கடேஷ் கப்சிப்.

தெலுங்குப் படவுலகின் பிரபல இயக்குநருடன் பிரிவு ஏற்பட்ட பின்னர் முன்னணி ஹீரோக்களுடன் உலாப் போகிறார் ரம்யா.

## பொங்கல் படங்கள்

தைப்பொங்கலை முன்னிட்டு தமிழ்நாட்டில் திரையிடப்பட்டுள்ள புதுப்படங்கள்: உளவுத்துறை (விஜயகாந்த், மீனா, சங்கவி), உதவிக்கு வரலாமா (கார்த்திக்-தேவயாணி), கிழக்கும் மேற்கும் (நெப்போலியன்-தேவயாணி) நாம் இருவர் நமக்கு இருவர் (பிரபுதேவா, மீனா, மகேஸ்வரி) மறுமலர்ச்சி (மம்முட்டி, தேவயாணி) மூவேந்தர் (சரத்குமார், தேவயாணி), பொன் மனம் (பிரபு, சுவலட்சுமி, பிரியாராமன்), காதலே நிம்மதி (சூர்யா, கவிதா) பகவத்சிங் (நெப்போலியன், சங்கவி). பொங்கல் படங்களில் நாலு படங்களில் கதாநாயகியாக நடித்துள்ளார் தேவயாணி.

'காதலா காதலா' பொங்கல் வெளியீடாக வரவிருந்தது. என்ன காரணத்தாலோ தாமதமாகி விட்டது. கமல் ரசிகர்களுக்கு ஏமாற்றம்தான்.



சத்யராஜ்-மாஸ்டர் பதாஞ்சலி
படம்: பெண் ஒன்று கண்டேன்

## மினி சினி

* நடிகர் திலகம்-விஜய் நடித்த 'ஒன்ஸ்மோர்' இந்தியில் தயாராகப் போகிறது. தமிழில் நடிகர் திலகம் நடித்த வேடத்தில் இந்தியில் நடிப்பவர் திலீப்குமார்.
* பூபதி பாண்டியன் இயக்கும் 'பெண் ஒன்று கண்டேன்' படத்தில் சத்யராஜிற்கு ஜோடியாக சுவலட்சுமி நடிக்கிறார். முதலில் இந்த வேடத்தில் நக்மா நடிப்பதாக இருந்தது.
* 'இசைஞானி' இளையராஜா இரண்டு படங்களைச் சொந்தமாகத் தயாரிக்கவுள்ளார். ஒரு படத்தை பாலுமகேந்திராவும், இன்னொரு படத்தை மு.களஞ்சியமும் இயக்கப் போகிறார்கள்.
* பிரபு- சுரேஷ் கோபி இணைந்து நடிப்பதாக இருந்த 'நண்பா நண்பா' படத்தில் தற்போது சுரேஷ் கோபிக்குப் பதிலாக ஜெயராம் நடிக்கிறார். பிரபு-ஜெயராம் இருவரும் ஏற்கனவே 'பிரியங்கா' படத்தில் இணைந்து நடித்துள்ளனர்.
* 'லவ்டுடே' பாலசேகரன் தற்போது 'துள்ளித்திரிந்த காலம்' படத்தை இயக்கிவருகிறார். இது முடிந்ததும் இரண்டு படங்களை இயக்கவுள்ளார். அவற்றில் ஒன்றில் பிரபுதேவா கதாநாயகனாக நடிக்கிறார்.
* 'நேருக்கு நேர்' படத்தில் ரகுவரன்-சாந்தி கிருஷ்ணா தம்பதியின் மகளாக நடித்தவர் பேபி ஜெனிஃபர். தமிழில் பல படங்களில் நடித்து வரும் இவர், முதன் முறையாக இந்திப்படமொன்றில் நடிக்கவுள்ளார். இதில் அமிதாப்பச்சன்- விஜயசாந்தி ஜோடியாக நடிக்கிறார்கள்.
* 'தொட்டாச்சிணுங்கி' படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமான அதியமான், இரண்டாவதாக இயக்கியிருக்கும் 'சொர்ணமுகி' படத்தில் சிறிய வேடம் ஒன்றில் நடித்துள்ளார்.
* தமிழில் ஓரிரு படங்களில் நடித்து வரும் ரஞ்சிதா, மலையாளத்தில் மோகன்லாலுக்கு ஜோடியாக புதிய படமொன்றில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். இப்படத்தை வேணு நாகவள்ளி என்பவர் இயக்குகிறார்.
* பொங்கலுக்கு வெளியாகியுள்ள விஜயகாந்தின் 125வது படமான 'உளவுத்துறை' படத்தில் நீருக்கடியில் இடம்பெறும் சண்டைக்காட்சி இலண்டனில் படமாக்கப்பட்டது.
* டி.ராஜேந்தர் உருவாக்கி வரும் 'மோனிஷா' படத்தில் கதாநாயகியாக நடிப்பவர் நக்மாகான். மும்பாயிலிருந்து இறக்குமதியாகியிருக்கும் இவரது பெயர் மும்தாஜ் என மாற்றப்படவுள்ளது.



ஷில்பா ஷெட்டி

## காதோடு சொல்லுகிறோம்

பெரிய நடிகரின் வாரிசான மூன்றெழுத்து நடிகருக்கு 'ரெட்டி' நடிகை தன் கீர்த்தியை எல்லாம் காட்டிவருகிறாராம். விஷயம் பெரிய நடிகருக்கு தெரிந்து போய்விட்டது. பக்குவமாக எடுத்துச் சொல்லி, 'விலகியிரும் பிள்ளாய்' என்று உத்தரவிட்டுள்ளாராம்.

வேட்டி கட்டிய 'ராசா' நடிகருக்கு தொடர் தோல்விகள் அதற்கு ஈடுகட்ட மீன் நடிகையை வைத்து புதிய படம் ஒன்றை பினாமி பெயரில் எடுக்கத் திட்டமிட்டாராம். இளம் நாயகன் ஒருவர் ஹீரோவாக ஒப்பந்தமானார். நடிகை குரு பக்தி காட்டுவார் என்று 'ராசா' நம்பினார். நடிகையோ நேர்மாறாக, பெரிய சம்பளம் கேட்டாராம். மயக்கம் போட்டு விழாத குறையாக திரும்பிவிட்டார் ராசா.

ஹீர நடிகைக்கு இரவு, பகல் என்று பார்க்காமல் பல புள்ளிகள் தொந்தரவு கொடுக்கிறார்களாம். குமார நடிகரும் எப்போதாவதுதான் எட்டிப்பார்க்கிறார். அதனால் தனியான பாதுகாப்பு ஆள் ஒருத்தரை நியமிக்கப் போகிறாராம் நடிகை.

மும்பாய் 'மனியான' நடிகைக்கு தமிழில் இரண்டே இரண்டு நாயகர்களைத்தான் முன்னர் பிடிக்குமாம். ஒருவர் 'அபூர்வ' நடிகர். இன்னொருவர் 'சாமி'. இப்போது நடன நாயகனையும் பிடித்திருக்கிறதாம். சென்னைக்கு வந்தால் 'சாமி' நடிகரை அழைத்து 'நட்பை' புதுப்பித்துவிட்டுத்தான் செல்வது வழக்கமாம்.

ரயில் 'ரா' நடிகைக்கு மீண்டும் சிவப்புக் கண் நாயகர்மீது ஒரு ஈடுபாடாம். இதனை அறிந்த நடிகரின் நண்பர் நடிகருக்கு யோசனை கூறித் தடுத்துவிட்டாராம்.

மூன்றெழுத்து 'மா' நடிகையின் இரண்டாவது சகோதரியும் நடிகையாகிட்டாராம். 'மா' நடிகை விரைவில் சினிமாவுக்கு முழுக்குப் போட உத்தேசித்துள்ளாராம்.

## மறுபடியும் கார்த்திக்

கார்த்திக் இடையிலே திருந்தம் கண்டிருந்தார். இப்போது மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில்.

வயிற்றுவலி, தலைவலி, உடம்புவலி என்று காரணம் கூறி அடிக்கடி படப்பிடிப்புக்கு மட்டம் போட்டுவிடுகிறார்.

ஒரு வலியும் இல்லை, ஜோடிகளுடன் ஜாலியாக சுற்றுகிறாராம். இதனை அறிந்த குருநாதர் பாரதிராஜா அட்வைஸ் பண்ணியும் பயன் இல்லையாம். 'இந்த வயதில் இது அதிகம்' என்று கூறினாராம் பாரதிராஜா.

இதற்கிடையே நக்மாவை அடிக்கடி சந்திக்க விரும்புகிறாராம். 'மேட்டுக்குடி' படப்பிடிப்பில்தான் நக்மாவுடன் கார்த்திக் நெருக்கமானார் என்பதும், அதன் பயனாக, நக்மாவின் சகோதரிக்கு தன் ஜோடியாக நடிக்க சான்ஸ் கொடுத்தார் என்பதும் பழைய செய்தி. அதன் பின்னர் 'பிஸ்தா' படத்தில் நடித்தபோது நக்மா-கார்த்திக் நெருக்கம் நக்மாவின் காதலரான நடிகர்வரை சென்று விவகாரமானது.

அதன்பின்னர் நக்மாவை சந்திப்பதையோ பேசுவதையோ நிறுத்திவைத்திருந்தார் கார்த்திக்.

சமீபத்தில் நக்மாவின் காதலர் வெளிநாடு சென்ற சமயம் நகமாவுக்கு ஃபோன் செய்தாராம். நக்மாவும் சந்திக்க இணங்கினாராம். பின்னர் என்ன நினைத்தாரோ 'நோ' சொல்லி விட்டாராம் நக்மா.

## ஆபரணப் படங்கள்

ஆபரணங்களின் பெயர்களில் வெளி வந்த தமிழ்த் திரைப்படங்களை சமீபத்தில் ஒரு தமிழக சஞ்சிகை பட்டிவிட்டிருந்தது.

'வைரமாலை', 'மெட்டி', 'கொலுசு', 'சிவப்புக்கல் மூக்குத்தி', 'தங்கவளையல்', 'தங்கப் பதக்கம்', 'திருமாங்கல்யம்', 'மாங்கல்யம்', 'சங்கிலி', 'தங்கக் கொலுசு'.

## 'பெண் ஒன்று கண்டேன்'

கே.பி.பிலிம்ஸ் பாலுவின் தயாரிப்பில் இரண்டு படங்களில் நடித்துவருகிறார் சத்யராஜ்.

அதில் ஒரு படம் கல்யாண கலாட்டா. அதன் படப்பிடிப்புக்கள் ஆர்ப்பாட்டம் இல்லாமல் நடந்து முடிந்திருக்கின்றன. குஷ்பு, மந்த்ரா இருவரும் ஜோடிகள்.

தியேட்டரில் நிர்வாகியாக இருக்கும் சத்யராஜ் மந்த்ராவை காதலிக்கிறார். இடையிலே குஷ்பு கரடியாக நுழைகிறார். அரைப் பைத்தியமான குஷ்புவை சத்யராஜ் சமாளிப்பதும், மந்த்ராவை காதலிப்பதும் தான் கதை. சத்யராஜ், மணிவண்ணன் கூட்டணி அசத்தப்போகிறது.

இன்னொரு படத்திற்கு 'பெண் ஒன்று கண்டேன்' என்று பெயர் சூட்டியுள்ளனர். சில காட்சிகள் படமாக்கப்பட்டுவிட்டன. இப்படத்தில் பதாஞ்சலி என்ற சுட்டிப் பையனுக்கு பிரதான வேடம். சத்யாஜும் சுட்டிப் பையனும் இணைந்து நடிக்கும் பாடல் காட்சி ஒன்று படமாக்கப்பட்டுள்ளது. கம்யூட்டர் கிராபிக்ஸ் முறையில் எடுக்கப்பட்ட காட்சிதான் இங்கு பிரசுரமாகியுள்ளது.

இப்படத்தில் சத்யராஜின் ஜோடியாக சுவலட்சுமி நடிப்பார் என்று தெரிகிறது. இயக்கம்: பூபதி பாண்டியன்.

## ஆஹா ஓஹோ

"ஆஹா'படத்தில் ஒஹோ என்று நடித்திருக்கிறீர்கள்" இப்படி பாராட்டியவர் ரஜினி. பாராட்டப்பட்டவர் பானுப்பிரியா.

முன்னணி நாயகியாக வலம் வந்த பானுப்பிரியா, கதாநாயகனுக்கு அண்ணியாக நடித்த படம் ஆஹா. மிக இயல்பாக நடித்திருக்கிறார். படத்தின் வெற்றிக்கு பானுப்பிரியா-ரகுவரன் ஜோடியின் நடிப்பும் முக்கிய காரணம்.

படத்தைப் பார்த்ததும் பானுப்பிரியாவுக்கு நேடியாக ஃபோன் செய்து பாராட்டினாராம் ரஜினி. நெருங்கிப் பழகிய பல நடிகர்களே மறந்துவிட்ட போது, ரஜினியின் பெருந்தன்மை பானுப்பிரியாவை நெகிழச் செய்துவிட்டது.



படிப்பகம்

www.padippakam.com

## ...ம்மன் நடிகை

...கை கே.ஆர்.விஜயாவுக்கு புன்னகை ... என்ற பட்டம் இருந்ததும், அந்தப் ...கைக்கு மயங்கிய ரசிகர்களும் ஏராளம். ...ம்மன் வேடங்களும் அவருக்கு கச்சிதமாகப் பொருந்தின. அம்மன் வேசம் போடத் தேவையான கிரீடம், வேல் மற்றும் நகைகளை சொந்தமாகவே வாங்கி வைத்திருந்தாராம் விஜயா.



மகேஷ்-ஒவியா
படம்: மனசு

திரையுலக மறுபக்கம் 39

# பழிவாங்கினார் நடிகர்
# வலைவீசிய நடிகை

தமிழ் நாட்டில் பிரபலமாக இருந்த அமைச்சரின் கட்டுப்பாட்டில் இருந்த நடிகை அவர். மூக்கழகி என்று பட்டப்பெயரும் உண்டு.

குறிப்பிட்ட அமைச்சரின் கட்டுப்பாட்டில் இருந்தபோது, 'வெற்றி காந்த்' நடிகருடன் ஒரு படத்தில் நடித்தார். பாடல் காட்சி ஒன்றில் நடிகருடன் சேற்றில் புரள்வதுபோல நடிக்க வேண்டும். நடிகையின் மேல் நடிகர் புரண்டு மறுபக்கமாய் போகவேண்டும். காட்சியை இயக்குநர் விபரித்தார்.

நடிகைக்கு பொங்கிவந்தது கோபம். சினிமாப் படம் எடுக்கிறீர்களா, அல்லது புளூபிலிம் எடுக்கிறீர்களா? என்று தாறுமாறாகப் பேசத் தொடங்கிவிட்டார்.

இயக்குநருக்கும் கோபம் வந்துவிட்டது. விஜயமான காந்த நடிகர் நடிகைக்கு சீனியர். அவருக்கே மரியாதை கொடுக்காமல் நடந்து கொண்டார் நடிகை. அப்படியிருந்தும் இயக்குநரும், நடிகரும் தங்கள் கோபத்தை அடக்கிக் கொண்டனர்.

அமைச்சரின் கோபத்தை சம்பாதிக்க வேண்டிவருமோ என்று பயந்துதான் நடிகையின் பாய்ச்சலைப் பொறுத்துக் கொண்டார்கள்.

பின்னர் எப்படியோ நடிகையை சமாதானம் பண்ணி நடிக்க வைத்தனர். நடிகருக்கும் அரசியல் பின்னணி இருப்பதால், அவர் துணிச்சலாக நடிகையை பழிவாங்கினார்.

சேற்றில் நடிகைமீது புரளும் காட்சியில் நடிகர் செய்த ஒரு காரியத்தை வெளியே சொல்லவும் முடியாமல், கோபத்தை காட்டவும் முடியாமல் நடிகை தவித்த தவிப்பை படப்பிடிப்புக் குழுவில் உள்வர்கள் கவனிக்கத் தவறவில்லை.

## கௌரவப் பிரச்சனை

பாக்யம் செய்த இயக்குநர் அவர். இயக்குவதுடன் நடித்தும் வருகிறார். அந்த சமாச்சாரங்களில் தீவிரமானவர். இவரைப்பற்றி முன்னரும் குறிப்பிட்டுள்ளோம்.

சகோதர நடிகைகளில் ஒருவருடன் இவர் நடித்தபோது, நடிகையின் வலையில் விழுந்துவிட்டார். படத்தின் இயக்குநரும் இவர்தான்.

இந்துக் கடவுள் ஒருவரின் பெயர் கொண்ட அந்த நடிகை, பல முன்னணி நடிகர்களுடன் நெருக்கமாக இருந்தவர்.

அதனால் குறிப்பிட்ட நடிகைமீது பாக்யமானவர் ஈடுபாடு எதனையும் காட்டவில்லை. இணைந்து நடிக்கும் நடிகர்களை தன் பின்னால் பைத்தியமாய் அலைய வைப்பதில் நடிகைக்கு அலாதியான பிரியம்.

பாக்யமானவர் தன்னைப் புறக்கணிப்பது நடிகைக்கு கௌரவப் பிரச்சனை போலாகிவிட்டது.

ஒருநாள் படப்பிடிப்பு ஓய்வு நேரத்தில் தனது அறையில் சற்றுநேரம் கண்ணயர்ந்து கொள்ளச் சென்றார் இயக்குந நடிகர்.

அவர் பின்னாலேயே சென்ற நடிகை துணிச்சலாக அவரை பின்னாலிருந்தே கட்டியணைத்துக் கொண்டார்.

தற்செயலாக அப்பக்கம் சென்ற நடிகரின் உதவியாளர் இக் காட்சியைக் கண்டுவிட்டு வந்தவழியே ஒரே ஓட்டமாக ஓடிவிட்டார். அவர் மூலம் படப்பிடிப்புக்குழு மத்தியில் தகவல் கசிந்துவிட்டது.

பின்னர் அந்த உதவியாளரை அவரது வேலையில் குற்றம் கண்டு பிடித்து வேலை நீக்கம் செய்துவிட்டார் இயக்குந நடிகர்.

## ஜோசிய மிரட்டல்

நடிகை மாதுரி டிக்ஷித்தை ஜோசியர் ஒருவர் மிரட்டிவிட்டார். அவரது கையெழுத்தைப் பார்த்து ஜோசியர் சொன்ன கணிப்புகள்தான் மாதுரியை கலங்க வைத்திருக்கின்றன.

"மாதுரி டிக்ஷித்துக்கு இது வீழ்ச்சிக் காலம். திருமணம் வரை தான் மாதுரி சினிமா உலகில் நீடிப்பார். அதன்பின்னர் நடிப்பாரா என்பது சந்தேகமே" என்று கூறியுள்ளாராம் அந்த ஜோசியர்.


விஜயகாந்த்-மீனா
படம்: உளவுத்துறை

## ...ர்கள் பெயர்

...திக்-தேவயாணி ஜோடி ... படம் 'உதவிக்கு வரலாமா' ... அதிலே மூன்று வேடங் ...து நீங்கள் அறிந்ததே. ... உசேன், ஜேம்ஸ் ஆகிய ...ல் நடிக்கிறார். மூன்று ...மே உண்மையாகவே ...ின் நண்பர்களது பெயர்

... படத்தில் கார்த்திக்கின் ...வ நடிப்பைப் பார்த்து ... அடிக்கடி சிரித்துவிட்ட ...றை ஒரே காட்சியை பட...டி ஏற்பட்டதாம். அது ...யே சொன்னது.

## தற்கொலைத் தாக்குதல்

'தளபதி', 'ரோஜா', 'சிறைச்சாலை', 'இருவர்' ஆகிய படங்களை ஒளிப்பதிவு செய்தவர் சந்தோஷ்சிவன்.

இவர் சமீபத்தில் இயக்கியுள்ள குறும்படம் ஒன்று பரவலாகப் பேசப்படுகிறது.

ஒரு பெரும் தலைவரைக் கொல்ல மனித வெடி குண்டாக வருகிறார் மல்லி என்னும் பெயருள்ள பெண். தன் சகோதரன் சாவுக்கு காரணமானவரை பழிவாங்கத் துடிக்கிறாள் மல்லி.

திட்டத்தை நிறைவேற்றும் கட்டத்தில் அவள் தாய்மை அடைகிறாள். அப்படியிருந்தும் பெரிய தலைவரைக் கொல்லச் செல்கிறாள்.

வயிற்றில் குண்டுகளோடு தலைவரை நெருங்கி காலில் விழுந்து கும்பிடுகிறாள். அந்த நேரம் வெடிகுண்டை வெடிக்கச் செய்யும் ரிமோட் கொண்ட்ரோல் தவறிவிடுகிறது. அதோடு படம் முடிகிறது. 'டெரரிஸ்ட்' படத்தின் பெயர்தான் நெருடல்.

## என்ஜினியர் சாமி

அரவிந்தசாமிக்கு மும்பாய் சூப்பர் நடிகைகள் மத்தியில் மவுசு. இந்தியில் படு பிஸியாக இருப்பவர் மாதுரி டிக்ஷித்.

அரவிந்தசாமியுடன் ஒரு படம் பண்ணுகிறீர்களா? என்று கேட்டு முடிக்க முன்னரே ஓ.கே. சொல்லிவிட்டார்.

மாதுரி டிக்ஷித்துடன் அரவிந்தசாமி ஜோடி சேரும் படத்தின் பெயர் என்ஜினியர். இயக்கம்: காந்தி கிருஷ்னா. இவர் இயக்குநர் ஷங்கரிடம் உதவியாளராக இருந்தவர்.

படத்தின் கதையை இரகசியமாக வைத்திருக்கிறார்கள். பாரதியார் கெட்-அப்பிலும் தோன்றுகிறார் அரவிந்தசாமி. இசை; ஏ.ஆர்.ரகுமான். கம்யூட்டர் கிராபிக்ஸ் வித்தைகள்; வெங்கி. பிரமாண்டம் காட்டப்போகிறார்கள். படத்தின் வசனம்; சுஜாதா. பாடல்கள்; வைரமுத்து.



## திருடிய பாடல்

சரத்குமார்- தேவயாணி நடிக்கும் படம் 'மூவேந்தர்'. அப்படத்தில் தமிழக சஞ்சிகைகளின் பெயரில் ஒரு பாடல் வருகிறது.

"கணையாழி, தீபம் உன் கைகளிலே.குமுதம், மாலைமதி உன் கண்ணிலே, கல்கண்டு, முத்தாரம் உன் மார்பிலே...." என்று தொடங்கும்.

அப்பாடல் 'பிரார்த்தனா' படத்துக்காக மு.மேத்தா எழுதிய பாடலாம். அதனை யாரோ திருடி மூவேந்தர் படத்தில் பயன்படுத்திவிட்டார்களாம்.

'பிரார்த்தனா' பட இயக்குநர் கௌரி மனோகர் புலம்பிக்கொண்டிருக்கிறார்.

## நடிக்கிறார் அகத்தியன்

'காதல் கோட்டை' மூலம் பிரபலமான இயக்குநர் அகத்தியன் நடிக்கும் படம் 'சந்தோஷம்'. சரவணன், சுவலட்சுமி நடிக்கும் இப்படத்தில் நடன மாஸ்டராக நடிக்கிறார் அகத்தியன். படத்தின் கதை, வசனம், பாடல்களையும் அவரே எழுதி உள்ளார். இயக்கம்; கார்த்திக்.

'சேது மாதவா, உன்னை சேர்த்து அணைக்கவா, சூதுவாது தெரியாத சின்னப்பிள்ளை அல்லவா..' என்ற பாடலும் அகத்தியன் எழுதி பதிவு செய்யப்பட்டுள்ளது.

## எல்லாமே பொண்டாட்டி

வீ. சேகர் இயக்கத்தில் தயாராகும் படம், 'எல்லாமே என் பொண்டாட்டிதான்.' படத்தில் ராதிகாவின் ஜோடியாக நடிக்கிறார் மணிவண்ணன். இன்னொரு ஜோடி ராம்கி, சங்கவி.

சக்தி இல்லாமல் சிவன் இல்லை, பெண் இல்லாமல் ஆண் இல்லை என்பதை சொல்லும் கதை. இசை; தேவா. வடிவேலு, சார்லி, கோவை சரளா ஆகியோரும் நடிக்கின்றனர்.

முகப்பில்
கமல்–தபு
படம்–சாக்சி 420

## கமலுக்கு மரியாதை

'அவ்வை சண்முகி'யை இந்தியில் 'சாக்சி 420' என்ற பெயரில் வெளியிட்டுள்ளார் கமல். படம் சக்கைபோடு போடுகிறது. இந்தியிலும் மாமிக்கு பயங்கர வரவேற்பு.

கமலே இயக்கியும் இருப்பதால் இரட்டிப்பு சந்தோசத்தில் இருக்கிறார். இயக்கிய முதல் படமே வெற்றி என்பதால், பிடிபடாத சந்தோசம்.

கமலின் ஜோடியாக தபு நடித்துள்ளார். "அற்புதமான நடிகர் அவர். அந்த மாமி வேடத்தில் நாங்கள்கூட அத்தனை தத்ரூபமாக நடித்திருக்க முடியாது" என்று சிலிர்க்கிறார் தபு.

'சாக்சி 420' சூப்பர் ஹிட்டானதால் இந்தி 'லேடிஸ் ஒன்லி'யையும் விரைவில் வெளியிட ஆயத்தம் செய்கிறார் கமல்.


படிப்பகம்

www.padippakam.com

# கட்டாக இருக்க கணக்கான உணவு

நீங்கள் அழகாக இருக்க வேண்டுமா? இங்கே குறிப்பிடும் உணவுப் பழக்க வழக்கங்களை ஏற்றுக்கொள்ளுங்கள்.



* நீங்கள் குண்டாக இருந்தால், ஒல்லியாக முயற்சிக்க வேண்டும். அதற்காகக் கொழுப்புச் சத்துள்ள உணவுகளைத் தவிர்த்து விடுங்கள்.
* சோளம், காய்கறி, கீரை வகைகள் உணவில் அதிகம் சேர்த்தால், உடல் எடை குறையும். பளிச் சென்ற தோற்றம் கிடைக்கும்.
* கொதித்தாறிய லேசான சூட்டுடன் இருக்கும் நீரில் ஒரு கப் குடித்துவிட்டு தினமும் உணவு சாப்பிடும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.
* தினமும் ஒருமுறை எலுமிச்சம் பழச்சாறு குடித்தால் சரும நோய்கள் வராது.
* தினமும் இரண்டு கரட் பச்சையாகக் கடித்துச் சாப்பிட்டால், சருமத்தின் நிறம் சிவப்பாகும்.
* வேப்பிலை, துளசி, புதினா ஆகியவைகளை சம அளவு எடுத்துக் காய வைத்து பொடி செய்து வைத்திருங்கள். அதனைப் பாலாடையில் குழைத்து முகப் பருவின் மேல் தேய்த்தால், முகப்பருவின் தழும்புகள் ஏற்படாது.
* கரட், உருளைக் கிழங்கு இரண்டையும் அரைத்து முகத்தில் தடவி, அரை மணிநேரம் கழித்துக் கழுவி விட்டால் முக அழகு அதிகப்படும்.

# சமையல் செலவைக் குறைப்பது எப்படி?



* சமையல் தொடங்குவதற்கு முன்பே சமையலுக்குரிய பொருட்களை அடுப்பின் அருகில் வைத்துக் கொள்ளுங்கள். காய்கறிகளை நறுக்கி, மசாலாவையும் அரைத்து வைத்த பின்பு அடுப்பைப் பற்ற வையுங்கள்.
* அடுப்பில் வைத்திருக்கும் பொருள் கொதித்தவுடன், தீயைக் குறைத்து வைத்து விடுங்கள். பின்பு லேசாக தீ எரிந்தாலே போதும்.
* கேஸ் அடுப்பாக இருந்தால் சிறிய பேர்னரில் சமைப்பது சிறந்தது. அடிப்பகுதி பரந்த பாத்திரமாக இருந்தால் தீ வெளியே பரவாது.
* சோறு, கறி சமைக்க தேவைக்கு மட்டுமே தண்ணீர் வையுங்கள். கூடுதல் தண்ணீர் வைத்தால் எரிபொருள் அதிகமாகச் செலவாகும்.
* அரிசி மற்றும் பயறுவகைகளைச் சிறிது நேரம் தண்ணீரில் நனைய வைத்துவிட்டு வேக வைத்தால் விரைவாக வெந்து விடும்.
* சமையல் பாத்திரங்களின் உள்பகுதிகளை அடிக்கடி தேய்த்து நன்றாகச் சுத்தம் செய்து விடுங்கள்.
* கேஸ் அடுப்பின் பேர்னர்களையும், மண்ணெண்ணெய் ஸ்டவ்வின் திரிகளையும் நன்றாகப் பராமரியுங்கள்.

# டிப்ஸ்



* கர்ப்பிணிகள் வாரத்தில் இரண்டு நாட்கள் கடலையை வேகவைத்துச் சாப்பிடுவது நல்லது.
* தேங்காய் எண்ணெயில் கற்பூரத்தைப் போட்டுச் சூடாக்கி, தசைப்பிடிப்பு பகுதிகளில் தேய்த்தால் குணமாகும்.
* புதினா இலைச் சாற்றைத் தினமும் ஒரு தேக்கரண்டி குழந்தைகளுக்குக் கொடுத்தால் வயிற்றுக்கு நல்லது.

# கண்ணீரில் கரைந்த இரவுகள் 19

புவனா

அலங்கார மேசைமேல் இருந்த கத்தியால் தன் மார்பில் 'V' வடிவத்தில் கீறினார் டயானா.

இரத்தம் வழிந்தது.

சாள்ஸ் அசைந்துகொடுக்கவில்லை. மரம் போல் நின்று பார்த்துக் கொண்டிருந்தார்.

டயானாவுக்கோ தலை கால் தெரியாத கோபம். அதே கத்தியால் தன் தொடைகளில் கீறினார்.



அங்கும் இரத்தம்.

அப்போது அந்த அறையை விட்டு வெளியேறி விடு விடுவென்று சென்றுவிட்டார் சாள்ஸ்.

சாள்ஸ் செய்த அந்த அலட்சியத்தை டயானா தன் வாழ்க்கையின் இறுதிக் கட்டம் வரை மறந்திருக்கமாட்டார்.

எதுவுமே நடக்காததுபோல சாள்ஸ் சென்றுவிட்டார். இரத்தம் வழிய நின்றிருந்த டயானாவை அரண்மனைப் பணியாட்கள் கண்டிராவிட்டால், இரத்தப் பெருக்கு அதிகமாகி டயானா அன்றே இறந்திருப்பார்.

நான்கு சுவர்களுக்குள் டயானாவும், சாள்ஸ்சும் தூரவிலகிப் போய்க் கொண்டிருந்தனர். ஆனாலும் பொது நிகழ்ச்சிகளில் மனமொத்த தம்பதிகள் போலவே காணப்பட்டனர்.

சாள்சிடம்: "எனக்கு ஒரு மாதிரியாக தலை சுற்றுகிறது. என்னை எங்காவது கொண்டு செல்லுங்கள்" என்று கூறினேன்.

அவரோ எதனையும் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. அதுவரை மயங்கி விழுந்த அனுபவம் எதுவும் எனக்கு ஏற்பட்டதில்லை.

அன்றுதான் முதன் முதலாக மயக்கம் ஏற்பட்டது. நல்ல வேளையாக என் அருகில் வந்த தாதிகள் இருவர் என்னைத் தாங்கிப் பிடித்துக் கொண்டனர். அதனால் கீழே விழாமல் தப்பினேன்.

அருகில் இருந்த அறைக்குள் என்னை கொண்டு சென்றனர். பின்னர் வான்கூவரில் உள்ள ஹொட்டல் ஒன்றுக்கு நான் ஓய்வுக்காகக் கொண்டு செல்லப்பட்டேன்.

## சாள்ஸ் பிடிவாதம்

நான் மயக்கமானதை சாள்ஸ் வேறு மாதிரியாக எடுத்துக் கொண்டார்.

வேண்டுமென்றே மயக்கம் வந்தது உணர்ந்தேன்.

உலகக் கண்காட்சி அரங்கை நானும் சாள்சும் நாலுமணி நேரமாக தொடர்ந்து சுற்றிப் பார்த்தோம். என்னால் தொடர்ந்து நடக்க இயலவில்லை.

ஆனால் எனது கணவனால் எல்லாக் கனவுகளும் சிதைந்தன. என்னையே நான் வெறுக்க ஆரம்பித்தேன்.

கைப்பிடித்த கணவனே என்னை உதாசீனம் செய்தபோது எல்லாமே எனக்கு வெறுப்பைத் தந்தன. இந்தச் சிறுவயதிலேயே வெறுப்பு உணர்ச்சிக்கும், விரக்திக்கும் நான் ஆளாக்கப்பட்டேன்.

என் கண்கள் தூங்க மறுத்தன. தொடர்ந்து மூன்று நாட்கள் தூங்கவில்லை.

நள்ளிரவில் எழுந்து நீச்சல் தடாகத்தில் நீந்துவேன். சில வேளைகளில் பலமாகச் சத்தமிட்டு அழுவேன்.

எனக்குத் தெரிந்துவிட்டது. சாள்ஸ் என்னைவிட கமீலாவிடமே தன்னைப் பறிகொடுத்துவிட்டார்.

இந்தத் துன்பத்தில் இருந்து கரை சேரவும், எனக்கு ஆறுதல் தரவும் எனது சிநேகிதர்களும் என்னுடன் இல்லையே என்று ஏங்கத் தொடங்கினேன்." என்று அந்த நாட்களை நினைவு கூர்ந்திருந்தார்.

## சாரவின் காதல்

1985 ஜூனில் ஒரு சம்பவம் நடைபெற்றது. அரச குடும்பத்தினரின் பொழுதுபோக்குக்காக நிகழ்ச்சிகள் நடப்பதுண்டு.

அந்த நிகழ்ச்சிகளில் ஒன்று 'றோயல் அஸ்கொட் றேஸ்'.

அந்த நிகழ்ச்சியில் பங்குகொள்ள அரச குடும்பத்தினர் ஒவ்வொருவரும் தமக்கு பிடித்தமானவர்களை அழைக்கலாம்.

டயானா தன் சிநேகிதியான ஃபேர்கியை அழைத்தார். ஃபேர்கியின் முழுப்பெயர் சாரா ஃபர்கசன்.

அரச குடும்ப அழைப்புக் கிடைத்ததும் சாராவுக்கு ஒரே குதூகலம். ஆடம்பரம், கும்மாளம் என்பவற்றில் சாராவுக்கு தனிப் பிரியம் உண்டு.

வின்சர் மாளிகையில்தான் வைபவம் நடைபெற்றது. சாராவை கட்டியணைத்து வரவேற்றார் டயானா.

அரச குடும்ப நிகழ்ச்சியில் கலந்து கொள்ள தன்னை அழைத்தமைக்கு டயானாவுக்கு நன்றி சொன்னாள் சாரா.

சாராவின் கண்கள் இளவரசர் அண்ட்ரூ மீது பாய்ந்தன. அண்ட்ரூவின் அருகில் இடம்பிடித்து அமர்ந்து கொண்டாள்.

அண்ட்ரூவும் சாராவைப் பார்த்தார். புன்னகைகளை பரிமாறினர். பின்னர் படிப்படியாக பேசிக்கொண்டனர்.

அன்றைய வைபம் முடிய முன்பாக இளவரசர் அண்ட்ருவுடன் நீண்ட கால சிநேகிதிபோல நெருக்கமாகிவிட்டாள் சாரா.

விடைபெறும்போது யாருக்கும் தெரியாமல் இளவரசர் அண்ட்ருவின் தொடையில் கிள்ளினாள் சாரா.

இளவரசர் சாள்ஸைவிட பத்துவயது இளையவர் அண்ட்ரூ.

றோயல் கடற் படையிலும் ஈடுபாடு வைத்திருந்தார். ஃபாக்லண்ட்மீது பிரிட்டன் போர் தொடுத்தபோது, கடற்படையைச் சேர்ந்த 'எச்.எம்.எஸ்.இன்வின்சிபிள்' போர்க் கப்பலில் இருந்து ஹெலிகொப்டரில் பறந்து, ஆர்ஜென்டினா ஏவுகணை தளங்கள்மீது தாக்குதல் தொடுத்தவர்.

அமெரிக்க திரைப்பட நடிகை ஒருத்தியை அண்ட்ரூ காதலித்தார். திருமணம் செய்ய அரச குடும்பம் தடைபோட்டது. எதிர்த்து நிற்கத் துணியவில்லை. காதலை மறந்துவிட்டார்.

சாராவைக் கண்டபின்னர் அண்ட்ரூ மறுபடி காதல் மன்னராகி விட்டார்.

1985 நத்தார் பண்டிகையில் சாரா, அண்ட்ரூ காதல் நெருக்கம் தீவிரமானது.

அண்ட்ரூவை பைத்தியமாக்கி விட்டாள் சாரா. தனிமையான சந்திப்புக்கள் கொடுத்த இனிமையால் சாராமீது முழுவதும் சாய்ந்து விட்டார் அண்ட்ரூ.

சாரா கைதேர்ந்த சாகசக்காரி. அண்ட்ரூவை பைத்தியமாக்கி வேடிக்கை பார்த்தாள். (அடுத்த வாரமும் வரும்)

# அரண்மனைக்கு புதிய மருமகள்



கட்டாயமாக வரவழைக்கப்பட்ட புன்னகையுடன் டயானா புகைப்படங்களுக்கு 'போஸ்' கொடுத்தார்.

டயானாவின் உணவுப் பழக்கமும் அரச குடும்பத்தினருக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை.

அடிக்கடி உணவு உட்கொள்வது டயானாவின் பழக்கம். சிறுவயதில் இருந்தே அந்தப் பழக்கம் இருந்தது.

"அடிக்கடி உணவு உண்பதை குறைத்துக்கொள்" என்று மகாராணியே நேரடியாகக் கடிந்து கொண்டார்.

ஆனால், டயானாவால் பசியைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அந்தப் பழக்கத்தை நிறுத்த முடியாமல் தவித்தார்.

இது பற்றி டயானா நினைவு கூருகிறார்:

"கனடாவில் உலகக் கண்காட்சிக்கு பிரதம விருந்தினர்களாகச் சென்றிருந்தோம்.

மகாராணி முதற்கொண்டு அரச குடும்பத்தினர் பலர் எனது அகோரப் பசி பற்றி விமர்சித்தமையால் கனடாவில் உணவுக் கட்டுப்பாட்டை கடைப்பிடித்தேன்.

சில நாட்கள் பட்டினியாகவும் இருந்தேன். அதனால் என் உடல் பலவீனமாவதை போன்று நடித்தேன் என்றும், தன்னை அவமானப்படுத்திவிட்டேன் என்றும் நினைத்துவிட்டார்.

அன்று இரவு நிகழ்ச்சிகளில் நான் கலந்து கொள்ள முடியாது இருக்கும் என்றே நிகழ்ச்சி ஏற்பட்டாளர்கள் கருதினார்கள்.

இந்த துரதிஷ்டம்மிக்க இளவரசிமீது பிறருக்கு இருந்த அக்கறைகூட சாள்ஸ்சுக்கு இருக்கவில்லை.

நான் கலந்துகொள்ளமாட்டேன் என நினைத்தவர்களிடம்: "அவள் கட்டாயம் கலந்து கொள்வாள்" என்று சாள்ஸ் கூறினார்.

"என்னால் முடியாது. நிற்கவே இயலவில்லை. பலவீனமாக இருக்கிறேன்" என்று தனிமையில் அவரிடம் கூறினேன்.

சிடுசிடுத்த முகத்துடன்: "நீ கலந்து கொள்ளாவிட்டால் பயங்கர விளைவுகள் ஏற்படும். உனக்கு ஏதோ பிடித்திருக்கிறது என்று எல்லோரும் கூறுவார்கள்" என்று சொன்னார்.

எனக்கு முழங்கால்கள் இரண்டும் ரணவேதனை எடுத்தன. டாக்டர் ஒருவர் வந்து பரிசோதித்தார். ஒரு மாத்திரையை மட்டும் தந்துவிட்டு "இவரது உடல் நிலை சீராக வில்லை" என்று கூறிவிட்டுப் போனார்.

எப்படியோ என் வலியைப் பொறுத்துக் கொண்டு, அன்றிரவு விருந்துகளில் கலந்து கொண்டேன்.

திருமணத்துக்கு முன்னர் எனது இடை அளவைக் கணக்கு எடுத்தபோது 29 அங்குலம் இருந்தது. உணவுக் கட்டுப்பாட்டின் பின்னர் 23 1/2 அங்குலம் மட்டுமே இருந்தது.

பெப்ரவரி முதல் ஜூலை வரை எனது பயங்கரமான உணவுப் பழக்கத்தை விட்டு விட்டேன். பெரும்பாலும் உண்ணாமலேயே விட்டுவிட்டேன்.

## நள்ளிரவு நீச்சல்

டயானா மெலிந்து காணப்பட்டதை மகாராணியார் பாராட்டினார். சாள்ஸ் மட்டும் கண்டு கொள்ளவில்லை.

ஒருநாள் டயானா குளியல் அறையில் இருந்து வெளிப்பட்ட போது, சாள்ஸ் யாருக்கோ ஃபோனில் முத்தம் கொடுத்துக் கொண்டிருந்தார்.

மறுபுறத்தில் கமீலாவாகத்தான் இருக்க வேண்டும் என்று நினைத்தபோது டயானாவுக்கு உடம்பெல்லாம் பற்றி எரிந்தது.

டயானா சொல்கிறார்:

என் வருங்காலம் பற்றி பல இன்பக் கனவுகளைக் கண்டவள் நான்.



அன்ட்ரு—சாரா

முரசு-அருள் ஜுவலர்ஸ்
தங்கமாலை பரிசுப் போட்டி
அதிஷ்டசாலிகள் இவர்கள்

ஆறுதல் பரிசுபெறும் மேலும் பத்து அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம்

16. திருமதி. தி. பாக்கியலட்சுமி, 30. சேவிஸ் ரோட், புத்தளம்.
17. ஏ. சிவபாக்கியம் 123, புகையிரத நிலைய வீதி, வைரவ புளியங்குளம், வவுனியா.
18. திருமதி ஆர். கிருபைநாயகம் சி 4, 3/4, சொய்சாபுர தொடர்மாடி, மொரட்டுவ.
19. எம். ஷபீகா, 495, ஏ, மௌலானா லேன், சாய்ந்தமருது-14.
20. எஸ். நந்தினி, 183/3, மெத்தோவித்த, சிலாபம்.
21. செல்வி. எம்.சித்தி பசீரா முதலாம் வட்டாரம். நிலாவெளி, திருமலை.
22. எஸ். ஆர். கிறிஸ்டில்டா 10, கிருஷ்ணன் கோவில் வீதி, மட்டக்களப்பு.
23. ரி. மிதுலா வி.ம.கல்லூரி வீதி, காரைதீவு-4.
24. என். உதர்சினி 5 றொசரி வீதி, நீர்கொழும்பு.
25. திருமதி ஆர்.டி. குகானந்தன், 22-26 HONSEY ROAD. HOME BUSH WEST N.S.W-2140, AUSTRALIA.

ஆறுதல் பரிசு பெறும் ஏனையோரது பெயர் விபரங்களும் அடுத்த வாரம் வெளியாகும்.

பட்டுச் சேலை
பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

வாரம் ஒரு பட்டுச் சேலை DB
பெயர்:............................
முகவரி:..................................
..........................................
தொழில்:..................................
கையொப்பம்:..............................
உண்மை — நேர்மை — வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 31-01-1998
அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?
றம்புக்கன வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்
செல்வி ரிஹானா சுபைர்,
இல.62/2, 1/5ஹுரேனமலுவ,
றம்புக்கன.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.



படிப்பகம்

www.padippakam.com

# வணக்கம் தலைவரே!

பாரதத் தேர்தல்களை கிண்டல் செய்து எழுதப்பட்ட கவிதை இது. இங்கும் இது பொருந்துகிறதே என்று யாராவது கருதினால், அதற்கு நாம் என்ன செய்ய முடியும்?

வணக்கம், தலைவரே! என்னைத் தெரிகிறதா?
சகுனி- அசல் சகுனி. என்ன அப்படி விழிக்கிறீர்கள்?

என்றைக்கோ செத்துப்போனவன் இன்றைக்கு
எப்படி எழுந்துவந்தான் என்று
ஆச்சரியப்படுகிறீர்களா?

தேர்தல் வருகிறதல்லவா? செத்துப் போனவர்கள்
எல்லாம் எழுந்து வரவேண்டியதுதானே!

ஒன்றுமில்லை; உங்களைப் பாராட்டிவிட்டுப்போகலாம்
என்று வந்தேன்.

உங்கள் அரசியலில் என் பெயர் அடிக்கடி
அடிபடுகிறதாம்.
உண்மையைச் சொல்கிறேன்; உங்களுடைய
சாதாரண 'வட்ட'த்திற்குக் கூட நான் உறைபோடக்
காணமாட்டேன்.



கவிக்கோ அப்துல் ரகுமான்
(தமிழக கவிஞர்)

நினைத்ததை முடிக்க எனக்குத் தெரிந்த கலையெல்லாம்
சூதாட்டம் ஒன்றுதான்; ஆனால் நீங்களோ
பல்கலைக்கழகமாகவே இருக்கிறீர்கள்!

சூதில் மட்டுமல்ல, வாதிலும் நீங்கள் வல்லவர்களாக
இருக்கிறீர்கள்!

உங்களிடம் நான் பாடம் கற்றிருந்தால் என் கட்சி
தோல்வியைத் தழுவியிருக்காது.

அரசியலில் சூதாட்டத்தை அறிமுகப்படுத்தியவன்
நான்தான். ஆனால் நீங்களோ அரசியலையே
சூதாட்டம் ஆக்கிவிட்டீர்களே!

நான் பகடைகளைத்தான் உருட்டினேன்.
நீங்களோ
மக்களையே உருட்டுகிறீர்களே!

தருமனைத்தான் நான் வென்றேன். நீங்கள்
தருமத்தையே வென்று விடுகிறீர்களே!

எங்கள் காலத்தில் சினிமா இல்லை.
இருந்திருந்தால்
பாஞ்சாலியை வெல்ல நான் பகடைகளை
உருட்டிக்
கஷ்டப்பட்டிருக்க மாட்டேன்.

எதிரியின் மனைவியை நாங்கள் துகில்
உரிந்தோம்.
தாயின் ஆடைகளையே நீங்கள் உரிகிறீர்கள்!
ஆனால் என்னை வில்லன் என்கிறார்கள்!
உங்களைக்
கதாநாயகன் என்கிறார்கள்!
இதுதான் எனக்குப் புரியவில்லை.

பாரதம் என்றால் பதவிச் சண்டைதானே! இந்த
நாட்டுக்குப் பொருத்தமாகத்தான் பெயர்
சூட்டியிருக்கிறார்கள்.

அந்த பாரதத்தில் நான் செய்த வேலையை
இந்த பாரதத்தில் நீங்கள் செய்கிறீர்கள்!

ஆனால் நான் உங்களைப் போல் புத்திசாலி
இல்லை; அதனால்தான் தோற்கிற
கட்சியிலேயே
கடைசிவரை இருந்து விட்டேன்.

நீங்கள் கொடுத்துவைத்தவர்கள்.

உங்கள் காலத்து அர்ச்சுனர்கள் காண்டீபத்தில்
வில்லுப்பாட்டுக் கச்சேரி
நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

'அநீதியை எதிர்த்து ஆயுதம் ஏந்து' என்று
அர்ச்சுனர்களைப் போருக்குத் தூண்ட
வேண்டிய
கண்ண பெருமான்கள்- அந்தி வேளையில்
கீதையையே புல்லாங்குழலாக்கி ஊதிக்
கொண்டிருக்கிறார்கள். அதனால் உங்களுக்குப்
பயமே இல்லை!


உங்கள் காலத்தில் இல்லாமல் போனேனே
என்று பெருமூச்சு விடுகிறேன்.

தலைவரே! இது உங்கள் காலம்!

## பட்டம் வேண்டுமா?

பட்டங்கள் பலவுண்டு-
பாராட்ட நாமுள்ளோம்;
இட்டமுடன் வாருங்கள்
இப்பொழுதே சூட்டிடுவோம்!
•••
பல்கலைக் கழகங்கள்
பகிடிவதைக் கூடங்கள்;
பட்டங்கள் வழங்கிடும்
பண்பு அவற்றுக்
கில்லையெனத்
திட்டமிட்டு நாங்களித்
திருப்பணியில்
இறங்கிவிட்டோம்!
•••
ஆழ்ந்த படிப்பறிவோ
ஆராய்ச்சிக் கட்டுரையோ
எதுவுமே தேவையில்லை;
எம்முடனே சேர்ந்திடுங்கள்!
•••
'கல்லா நிதி'களை நாம்
'கலாநிதிகள்' ஆக்கிடுவோம்;
புல்லர்தமை எல்லாம்
புரவலர்கள் ஆக்கிடுவோம்!
•••
பொன்னாடை
போர்த்திடுவோம்;
'போட்டோ'வும்
பிடித்திடுவோம்;
பத்திரிகை பலமுண்டு
படப்பிடிப்பாளர் பலருண்டு
மாலை மரியாதையெலாம்
மகிழ்ச்சியுடன் நாம்
செய்வோம்!
•••
அரசின் துணையுண்டு
ஆலவட்டம் தூக்கிடுவோம்;
நல்ல சமய மிது
நழுவ விடவேண்டாம்!
•••
என்ன பட்டம் வேண்டும்?
எம்மிடத்தே வாருங்கள்;
பட்டங்கள் பலவுண்டு
பாராட்ட நாமுள்ளோம்!

"புங்கையூரன்"



ஜப்பானில் ஹிரோஷிமா, நாகசாகியில் அணுக்குண்டு வெடித்து மலைபோல் புகை மண்டலம் எழும்பிய காட்சி.



அணுக்குண்டு வெடிப்பினால் கொல்லப்பட்ட மக்கள்

## அந்தநாள் அநியாயம்

இரண்டாம் உலகப் போரில் அமெரிக்க வல்லரசின் ஈவிரக்கமற்ற நாசகாரத்தனத்திற்கு இன்றுவரை மாபெரும் சாட்சியங்கள் ஹிரோஷிமா, நாகசாகி.

இரண்டாம் உலகப் போர் முடிவுக்கு வந்த தருணத்தில்தான், ஜப்பான் மீது அனாவசியமாக அணுக் குண்டை போட்டது அமெரிக்கா.

உலகப்போரின் வெற்றிக்கு அமெரிக்காதான் காரணம் என்று உரிமை கோர நடத்தப்பட்ட நாசகார நாடகம் அது! சோவியத் யூனியன்தான் பிரதான காரணம் என்பதை பொறுக்க முடியாமல் அமெரிக்கா ஆடிய கோர நர்த்தனம் அது!

அணுக்குண்டு வீச்சுக்களால் ஏற்பட்ட மாபெரும் பின்னடைவின் பின்னரும் ஜப்பான் எழுந்தது. இன்று வல்லரசுகளுக்குச் சவால் விடுமளவுக்கு வளர்ந்துள்ளது.

குண்டுவீச்சுக்களால் பயந்து- நிலைகுலைந்து வல்லரசுகள் முன் கையேந்தி, சலுகைகள் கேட்டு நின்றிருந்தால் ஜப்பான் இன்று உயர்ந்திருக்குமா? உறுதியுள்ள மக்களே வரலாறு படைக்கிறார்கள்! அதற்கு ஜப்பான் உதாரணம்.

## புயல் வந்த போது...

ஈழ
கூட்டுக்குள்ளே
வாழ்ந்திருந்த
காலமினி வருமா?
கூடித் தமிழ் பேசிட
காலமொன்று வருமா?
***
நிழலுக்குள்
வாழ்ந்திருந்தோம்...!
நிம்மதியாய்
உறங்கியிருந்தோம்...!
உறவுக்கு உறவு சொல்லி
ஊருக்குள்ளே
மகிழ்ந்திருந்தோம்!
***
உழவுக்காக ஏர்பிடித்த
தமிழினத்தை...
இழவுக்காக எவனொருவன்
உழுதுவிட்டான்!
***
புயல் வந்த போது...
துயரங்கள் தெரிந்தது
துயர் வந்த போதுதான்
சொந்தங்களே புரிந்தது!
***
ஊர் விட்டு ஊர்போனதாலே
ஆளை விட்டு ஆள் பிரிந்து
விட்டோம்!
***
பூவோடு பொட்டெல்லாம்
புயலோடு போனது!
காயோடு கனியெல்லாம்
அயலோடு அழிந்தது!
***
வாழுமிளசு பல
மண்ணோடு மாண்டதால்
ஈழமடி கூட
விழி தேம்பி அழுதது!
***
யார் போட்ட சாபமோ
யாம் அறியோம்-எம்
வேர் பட்டுப் போனதை
பார் அறியும்!
***

உமிரவன்- கொக்குவில் மேற்கு.

## தலையாத கனவுகள்

அர்த்தம் விளங்காமல்
ஆயிரமாய் கனவுகள்,
நித்தமும் புரியாமல்
நீண்ட நினைவலைகள்.
oo
புள்ளிக்குருவியொன்று
புல்கோர்த்துக் கூடுகட்டி
பஞ்சில் அணைசேர்த்து
பக்குவமாய் முட்டையிட்டு
குஞ்சுவருமென்று காத்திருக்க
நஞ்சுவந்து....
oo
தென்னை பனை பாயுமென்ற
சின்னக் குதிரையொன்று
திண்ணைக் கல் தடக்கி
திக்குமுக்காடித் திரும்பியது
குட்டிக்குதிரையாய் அல்ல
குரங்காகி..
oo
பால்போல நிறத்தையொத்த
பருந்துகளுக்கு
கோழிக்குஞ்சுகள் கூடி
விருந்து சமைக்கின்றன.
oo
சோகம் சொட்டும்
சுடுகாடுகள்
சோலை என்று சொல்லப்படுகின்றன.
oo
மாலை கேட்டவர்க்கு
மலர்வளையங்கள்
சாத்தப்படுகின்றன.
இன்னும் அர்த்தம் விளங்காமல்
அந்தம் தெரியாமல்
நித்தமும் தொடருகின்ற
நீண்ட நினைவலைகள்.
oo

சிவன்சுதன்-உரும்பராய்.

## பேனா நண்பர்கள்



பெயர்: எஸ்.செல்வேந்திரன்,
வயது: 24
முகவரி: மகா ரம்பைக்குளம், வவுனியா.
பொழுது போக்கு: வழமையானவை.



பெயர்: எம். சல்மான்,
வயது: 18
முகவரி: 155/17, புத்தளம் வீதி, குருநாகல்.
பொழுது போக்கு: வானொலி.



பெயர்: எஸ். பானு,
வயது: 29
முகவரி: 3ம் அதிடிய, 217, படோவிட்ட, கல்கிசை.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.



பெயர்: எஸ். சீதாலட்சுமி,
வயது: 17
முகவரி: 37/ஏ, பிரதான வீதி, கஹவத்தை.
பொழுது போக்கு: வழமையானவை

## இந்த வாரம் உங்கள் பலன்

(25.01.1998 தொடக்கம் 31.01.1998 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

மகரம் - சூரியன், புதன், வெள்ளி.
கும்பம் - வியாழன், கேது, செவ்வாய்.
மீனம் - சனி.
சிங்கம் - இராகு.

★ சந்திரன்- தனு, மகரம், கும்பம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- மனக் கலக்கம், அந்நியர் உதவி. | பி.ப. 1 மணி |
| திங்கள்- வீண் மனஸ்தாபம், இனசன விரோதம். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- முயற்சி பலிதம், துயர் நீங்கும். | பகல் 11 மணி |
| புதன்- பிரயாண மிகுதி. அந்நியர் உதவி. | பி.ப. 1 மணி |
| வியாழன்- பெரியோர் சகாயம், மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வெள்ளி- தொழில் கஷ்டம், மனக் கிலேசம். | பி.ப. 2 மணி |
| சனி- தெய்வானுகூலம், தேகசுக நன்மை. | மு.ப. 11 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பிரயாண மிகுதி, துயர் அதிகம். | பகல் 12 மணி |
| திங்கள்- காரியானுகூலம், மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பி.ப. 2 மணி |
| புதன்- பெரியோர் உதவி, பலவித பேறு. | மு.ப. 10 மணி |
| வியாழன்- அந்நியர் பகை, கௌரவக் குறைவு. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் 11 மணி |
| சனி- தொழில் மந்தம், பெரியோர் பகை. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- இனசன மகிழ்ச்சி, ஆடம்பர வாழ்க்கை. | பகல் 11 மணி |
| திங்கள்- வீண்குறை கேட்டல், அந்நியர் பகை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- தொழில் கஷ்டம், பணவரவு குன்றும். | மு.ப. 10 மணி |
| புதன்- தொழில் உயர்ச்சி, பெரியோர் உதவி. | பி.ப. 2 மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, பணச் செலவு. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- தொழில் மந்தம், உறவினர் உதவி. | பகல் 12 மணி |
| சனி- பயனற்ற செயல், பணக் கஷ்டம். | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- உயர்ந்த நட்பு, கௌரவ மிகுதி. | பகல் 12 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, இனசன நன்மை. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. 2 மணி |
| புதன்- கடன் தொல்லை, மனக் கலக்கம். | பகல் 12 மணி |
| வியாழன்- இனசன நன்மை, காரியானுகூலம். | மு.ப. 10 மணி |
| வெள்ளி- பலவித பேறு, பயனுள்ள செயல். | பி.ப. 2 மணி |
| சனி- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, உயர்ந்த நட்பு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- மனக் கலக்கம், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| புதன்- அந்நியர் உதவி, பலவித பேறு. | பி.ப. 1 மணி |
| வியாழன்- கடன் தொல்லை, பிரயாண மிகுதி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- முயற்சி பலிதம், பண வரவு. | பகல் 12 மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, கௌரவ மிகுதி. | பகல் 12 மணி |
| திங்கள்- அந்நியர் நட்பு, பணச் செலவு. | பகல் 11 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, இனசன நன்மை. | பி.ப. 2 மணி |
| புதன்- பயனுள்ள செயல், காரியானுகூலம். | மு.ப. 10 மணி |
| வியாழன்- வெளியிட வாசம், மனக் கலக்கம். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் 12 மணி |
| சனி- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், காரிய சித்தி. | பி.ப. 1 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, கடன் தொல்லை. | பி.ப. 2 மணி |
| புதன் - பலவித பேறு, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- தொழில் விருத்தி, முயற்சியில் வெற்றி. | பகல் 12 மணி |
| சனி- பயனுள்ள செயல், மனக்குறை நீங்கும். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பகல் 11 மணி |
| திங்கள்- தொழில் கஷ்டம், கடன் தொல்லை. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- அந்நியர் நட்பு, காரியனுகூலம். | பகல் 12 மணி |
| புதன்- உறவினர் உதவி, முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- தொழில் மந்தம், பணச் செலவு. | பகல் 11 மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, கௌரவ மிகுதி. | பகல் 12 மணி |
| சனி- பெரியோர் உதவி, சஞ்சல மிகுதி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- காரியானுகூலம், மன மகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| திங்கள்- துயர் நீங்கும் உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. 3 மணி |
| புதன்- பெரியோர் உதவி, கௌரவம். | மு.ப. 10 மணி |
| வியாழன்- இனசன நன்மை, பலவித பேறு. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- பொருள் நஷ்டம், மனக் கலக்கம். | பகல் 12 மணி |
| சனி- தேகசுகம் பாதிப்பு, செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- மனக் கிலேசம், வீண் விரயம். | பகல் 12 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, பண வரவு. | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, சுபகாரிய மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| புதன்- இனசன நன்மை, காரியானுகூலம். | பகல் 11 மணி |
| வியாழன்- மனக் குறை நீங்கும், உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| வெள்ளி- பலவித பேறு, அந்நியர் உதவி. | பி.ப. 1 மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நட்பு. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, மனக்குறை நீங்கும். | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, அந்நியர் உதவி. | பகல் 12 மணி |
| புதன்- கடன் சுமை, காரியக் கேடு. | பி.ப. 2 மணி |
| வியாழன்- தொழில் உயர்ச்சி, மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி; பண வரவு. | பகல் 11 மணி |
| சனி- முயற்சி பலிதம், காரியானுகூலம். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, சுபகாரிய நன்மை. | மு.ப. 2 மணி |
| திங்கள்- வீண்குறை கேட்டல், மனக் கலக்கம். | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பகல் 11 மணி |
| புதன்- பெரியோர் பகை, பணச் செலவு. | பி.ப. 1 மணி |
| வியாழன்- தொழில் கஷ்டம், இனசன நன்மை. | மு.ப. 2 மணி |
| வெள்ளி- பயனற்ற செயல், காரியக் கேடு. | பி.ப. 1 மணி |
| சனி- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பகல் 12 மணி |


அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4



படிப்பகம்

www.padippakam.com





மண்ணுல கத்து நல் லோசைகள் காற்றெனும்
வானவன் கொண்டுவந்தான்:
பண்ணி லிசைத்தவ் வொலிக ளனைத்தையும்
பாடி மகிழ்ந்திடுவோம்.

—சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# பலிக்காத தந்திரம்

அந்தக் காட்டிற்கு, அருகில் உள்ள கிராமத்து இடையர்கள் தமது மந்தைக் கூட்டத்தை மேய்ச்சலுக்குக் கொண்டு வருவார்கள். அவர்கள் தமது மந்தைக் கூட்டத்தைக் காக்க பல வேட்டை நாய்களை வைத்திருந்தனர்.

மேய்ச்சலுக்கு வரும் ஆடுகளை வேட்டை நாய்கள் மிகவும் கவனத்துடன் காவல் காத்தன. அதனால் அந்தக் காட்டில் உள்ள ஓநாய்களால் ஆட்டு மந்தையை நெருங்க முடியவில்லை.

எப்படியாவது தந்திரம் செய்து வேட்டை நாய்களைத் தம்பக்கம் இழுத்து ஆடுகளைத் தின்பதற்கு யோசனை செய்தன.

ஒருநாள் சில ஓநாய்கள், வேட்டை நாய்களைச் சந்தித்து அவைகளைத் தனியிடத்திற்கு அழைத்துச் சென்றன. அங்கு,

"அன்பு நண்பர்களே! நாம் இரு சாராரும் ஒரே இனம், உருவத்திலும் ஒரே மாதிரித்தான் இருக்கிறோம். உங்களை, நாய் என்று அழைக்கிறார்கள். எங்களை, ஓநாய் என்று அழைக்கிறார்கள்.

நாய் என்ற சொல்லுக்கு முன்னால் 'ஓ' என்ற ஒரேயொரு எழுத்தைச் சேர்த்து எங்களை அழைப்பதால் நாங்கள் உங்கள் எதிரிகளா? இனியாவது நாம் ஒற்றுமையாக இருப்போம்." என்று ஓநாய்கள் கேட்டுக் கொண்டன.

"நாங்கள் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்?" என்று வேட்டை நாய்கள் கேட்டன.

"உங்கள் இனத்தவரான நாங்கள், மந்தை ஆடுளைத் திருடிச் சென்று தின்றால், நீங்கள் எங்களைத் தடுத்துத் தாக்கக்கூடாது. எங்களோடு எதிர்ப்பில்லாமல் இருக்க வேண்டும். இந்த ஒரே ஒரு உதவியைச் செய்தால் போதும்!" என்று ஓநாய்கள் கூறின.

இதைக் கேட்டு வேட்டை நாய்கள் ஏளனமாகச் சிரித்தன.

"ஓநாய்களே! எங்களோடு உங்களை ஒப்பிட்டுப் பேசாதீர்கள். பண்பு, பழக்கவழக்கம், குண இயல்பு போன்றவற்றில் எமக்கு நீங்கள் ஈடாகுவீர்களா?

எங்கள் எஜமானர்கள் எங்கள் மீது எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் தெரியுமா? அவர்களுக்கு நாங்கள் ஒருபோதும் நம்பிக்கைத் துரோகம் செய்ய மாட்டோம்.

இனிமேல் நீங்கள் எங்கள் பக்கம் வரக் கூடாது. முதலில் இந்த இடத்தை விட்டு ஓடி விடுங்கள். இல்லையேல், நாங்கள் உங்கள்மீது பாய்ந்து குதறிக் கொன்று விடுவோம்!" என்று வேட்டை நாய்கள் கோபமாகக் கூறின.


தங்களின் தந்திரம் பலிக்கவில்லை என்பதைப் புரிந்து கொண்ட ஓநாய்கள், அந்த இடத்தைவிட்டு ஒரே ஓட்டமாக ஓடிப்போய் விட்டன.



## அதிசயம் — ஆனால் உண்மை!




**தங்கத் தொப்பி:** ← பூமியில் புதைந்திருந்த தங்கத் தொப்பி 1692ல் டிப்ரைரி என்ற இடத்தில் தோண்டி எடுக்கப்பட்டது. இது அயர்லாந்து அரசர்கள் அணிந்த மகுடம் ஆகும்.



**↑ கிளைம்பிங் பாம்:** இச் செடியின் நரல் போன்ற தண்டுப்பகுதி, மிக நீளமானது. இதைச் சிறிய இடத்தில் வைத்தால் தண்டு வளைந்து வளைந்து வளரும்.

**↓ டார்ஸோ பாறை:** கனடாவில் அமைந்துள்ள இப்பாறையானது தலையில்லாத முண்டம் போன்று அமைந்திருக்கின்றது.



**→ பறவையைக் கவ்விய மீன்:** இங்கிலாந்தின் வீ நதியின் மீது தாழ்வாகப் பறந்து கொண்டிருந்த தூக்கணாங்குருவியை ஒரு மீன் கவ்விப்பிடித்துக் கொண்டது.



## ஸிம்பாப்வே

**தலைநகர்**— ஹராரே
**பரப்பு**— 3,90,272 சதுரகிலோமீட்டர்
**மக்கள் தொகை**— 1.13 கோடி
**மொழி**— ஆங்கிலம், ஷோனா, டெபேலா
**எழுத்தறிவு**— 76%
**சமயம்**— பழங்குடி, கிறிஸ்தவம்
**நாணயம்**— டொலர்
**தனிநபர் வருமானம்**— 560 டொலர்

**அமைவிடம்:**

தென்மத்திய ஆபிரிக்காவில் அமைந்துள்ளது. முன்னர் இது தென் ரொடீஷியா என்று அழைக்கப்பட்டது.

**வரலாறு:**

வெள்ளையரின் பிடியில் இருந்த ஸிம்பாப்வேயில் வெள்ளையருக்கு எதிராக கெரில்லாப் போர் தொடங்கியது. ஸாம்பியா மற்றும் மொசாம்பிக் ஆகிய நாடுகளின் உதவியுடன் நடைபெற்ற போரில் பல்லாயிரக் கணக்கானோர் மாண்டனர். 1980ல் ஸிம்பாப்வே சுதந்திர நாடானது. ஒரே கட்சி ஆட்சி.



**பொருளாதாரம்:**

இந்நாடு மிக அதிகளவான கனிம வளம் உடையது. செம்பு, நிக்கல், தங்கம், குரோமியம், நிலக்கரி ஆகியன கிடைக்கின்றன. சோளம், நிலக்கடலை, பருத்தி, புகையிலை போன்றவை முக்கிய விளை பொருட்கள் ஆகும்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 31.01.1998.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 229
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 227

பரிசுக்குரியவர்:
வை. ஏ. றஷீதா,
தக்கியா வீதி, மாவனல்லை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| எம். சதீசன்,<br>கடவல த. மகா. வித்., கினிகத்தென. | ஃபாத்திமா நிஷ்மா,<br>ஒக்ஸ்ஃபோட் சர்வதேச பாடசாலை, பலாங்கொடை. |
| கே. அந்தோனி,<br>ஹுனுபிட்டி முஸ்லிம் வித்., வத்தளை. | பானுஷன் ராஜமோகன்,<br>கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். |
| ஆதிமூலம் சிவகுமார்,<br>சென். ஜோன் பொஸ்கோ கல்லூரி, ஹற்றன். | செல்வி ஃபாத்திமா ஃபய்ஹா ஃபாரீஸ்,<br>மொலந்தபிட்டிய வீதி, மாத்தளை. |
| அஸ்மி அலி மர்சூக்,<br>கஞ/மாளிகாஹேன மு.ம.வித், பேருவலை. | ஏ. கோகுல்நாத்,<br>தமிழ் மத்திய மகா வித்., பண்டாரவளை. |
| பி. டில்சன்,<br>கோரகல்லிமடு தமிழ் கலவன் பாடசாலை, கிரான். | எம்.சீ.எம். அஜுனாஸ்,<br>கமு/ஸம்ஸ் மத்திய கல்லூரி, மருதமுனை. |

## கலண்டரின் கதை

கலண்டர் 1582ம் ஆண்டு பரிசுத்த பாப்பரசர் 8வது கிரிகோரியன் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தக் கலண்டர்



கிரிகோரியன் கலண்டர் என அழைக்கப்பட்டது.

இந்தக் கலண்டர் டென்மார்க் மற்றும் நோர்வேயில் 1700ம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது. இங்கிலாந்தில் 1752ம் ஆண்டிலும், துருக்கியில் 1927ம் ஆண்டிலும் அமுலுக்கு வந்தது.

கலண்டர் என்பது இலத்தீன் மொழிச் சொல்லாகும்.

## முதல் பெண்

**1953ம்** ஆண்டு ஹிலாரியும் டென் சிங்கும் எவரெஸ்ட் சிகரத்தில் முதன் முதலாக ஏறி சாதனை படைத்தனர் என்பது உங்களுத் தெரியும்.

எவரெஸ்ட் சிகரத்தின் மீது ஏறுவதில் பலவித தொல்லைகளும் துன்பங்களும் ஏற்படும் என்பதனால் எவரெஸ்ட் சிகத்தின்மேல் ஏற எந்தப் பெண்ணிற்கும் அனுமதி வழங்கப்



படவில்லை.

ஆனால் 1975ம் ஆண்டு ஜப்பானைச் சேர்ந்த ஜூன் கோ டபய் என்ற பெண் பல துன்பங்களைக் கடந்து எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய முதல் பெண் என்ற சிறப்பைப் பெற்றார்.

## மூழ்கும் அபாயம்



ஆசியாக் கண்டத்தின் மிகச் சிறிய சுதந்திரநாடான மாலைத்தீவுகளின் கடலின் மட்டம் வருடா வருடம் உயர்ந்து கொண்டே வருகிறது. இப்படியே போனால் வெகு விரைவில் மாலைத் தீவுகள் கடலில் மூழ்கிவிடும் அபாயத்தில் உள்ளன.

இந்து சமுத்திரத்தில் பரவிக்கிடக்கும் சுமார் 1200 பவளத் தீவுக் கூட்டமே மாலைத்தீவுகள் ஆகும். இவற்றில் 202 தீவுகளில் மனிதர்கள் வசிப்பதில்லை.

## மெட்ரிக் அளவு முறை

நீட்டலளவை மீட்டர் எனவும், முகத்தலளவை லீட்டர் எனவும், நிறுத்தலளவை கிராம் எனவும் மெட்ரிக் முறையில் உலகெங்கும் கணக்கிடப்படுகின்றது.



மெட்ரிக் முறையின் பிறப்பிடம் ஃபிரான்ஸ் ஆகும். சுமார் 170 ஆண்டுகளுக்கு முன்தான் மெட்ரிக் முறை கண்டுபிடிக்கப் பட்டது.

டிலாம்ப்ரே, மெக்மெய்ன் என்ற இரண்டு ஃபிரெஞ்சுக்காரர்கள் துருவத்திற்கும் பூமத்திய ரேகைக்கும் இடையே உள்ள தூரத்தைக் கண்டுபிடித்தனர். அவர்கள் அந்தத் தூரத்தை அளந்து அதில் பத்து மில்லியனில் (ஒரு கோடி) ஒரு பாகத்திற்கு 'மீட்டர்' என்று பெயரிட்டனர். அது நடந்தது 1795ல். அவ்விருவரும் சில மாற்றங்கள் செய்து கணக்கிட்ட மீட்டர் அளவுதான் தற்போது அமுலில் இருந்து வருகிறது.

நீட்டலளவை மீட்டரில் கணக்கிட்டதைப் போல், அவ்விருவருமே நிறுத்தலளவையையும் 'கிராம்' கணக்கில் கண்டுபிடித்தனர்.

அவர்கள் காய்ச்சி வடித்த நீரை ஒரு கன சென்டி மீட்டர் அளவு எடுத்து, அதை நான்கு பாகை சென்டிகிரேட் வெப்பத்தில் மீண்டும் காய்ச்சி 'கிராம்' அளவை நிர்ணயித்தனர்.

முகத்தலளவையான 'லீட்டர்'கூட அவ்விருவரால்தான் கண்டுபிடிக்கப் பட்டது. 1000 கிராம் எடையுள்ள நீரை நான்கு பாகை சென்டிகிரேட் வெப்பத்தில் காய்ச்சி அதன் அளவை 'லீட்டர்' எனக் கணக்கிட்டனர்.

## இன்னொரு பெயர்

* ஸ்பானிஷ் ஈ என்பது ஒருவகை வண்டு.
* வெள்ளை எறும்பு எனப்படுவது கறையான்கள்.
* ஈப்புலி என்பது ஒரு வகை சிலந்தி.
* லவ் அப்பிள் எனப்படுவது தக்காளிப்பழம்.
* கொம்புத் தேரை எனப்படுவது ஒருவகை ஓணான்.
* வெள்ளி மீன் என அழைக்கப்படுவது ஒருவகை பூச்சி.
* கண்ணாடிப் பாம்பு என்பது வெள்ளை ஓணான்.
* மணற்கடல் என்பது சகாரா பாலைவனம்.
* நரம்புச் சிலந்தி எனப்படுவது ஒருவகை வண்டு.
* பறக்கும் நரி என்பது பழந்தின்னும் வௌவால்.

## மீன் வள நாடு

உலகிலேயே அதிக மீன்களைப் பிடித்து, பதப்படுத்தி அவற்றை டின்களில் அடைத்து விற்கும் தொழிலில் முன்னணியில் இருக்கும் நாடு என்ற பெயரை மொரோக்கோ நாடு பெற்றுள்ளது.

முஸ்லிம் நாடான இதில் மக்களின் முக்கிய தொழில் மீன் பிடித்தலாகும். இவர்களுடைய தேவைக்கேற்ப கடற்கரைப் பகுதிகள் ஆழமாகவும், அதிக மீன்கள் கிடைப்பது போலவும் இயற்கையே அமைத்துள்ளது. முன்பு மீன் பிடித்தொழிலில் முன்னணியில் இருந்த நாடு கம்போடியா ஆகும்.



படிப்பகம்

www.padippakam.com

## புதிய தொடர் 7

எழுத்துச் சித்தர் பாலகுமாரன் தனது வழக்கமான பாணியில் இருந்து விலகி 'சஸ்பென்ஸ்' கலந்து எழுதிய விறு விறு நாவல்.

# இனி என் முறை

எழுத்துச் சித்தர் பாலகுமாரன்

"வந்தாச்சு. இன்னும் இரண்டு மாசத்துக்கு இங்கதான்!" குரலில் குதூகலம் அவளை மீறி ஒலித்தது.

"கூட்டிட்டு வாங்க அவரையும்."

"வரணும். நாளைக்கு அல்லது நாளன்னிக்கு வரலாம்."

"நான் இருக்கிறபோது கூட்டிட்டு வாங்க மேடம். நாளைக்கும் என்னால வரமுடியாதுன்னு நினைக்கிறேன்."

"அப்படி என்ன சாப்பிட்டீங்க?"

"சாத்துக்குடி ஜூஸ் சாப்பிட்டது தப்போ...."

"எங்க?"

"இங்கதான் ஓட்டல்ல. அழுகின பழம் புழிஞ்சிட்டான் போலிருக்கு."

"கேட்டீங்களா?"

"இங்க ஜூஸ் எட்டு ரூபா. எனக்கு கிடைச்சது ஓஸில. எப்படி கேட்கிறது?"

"இது என்ன நோட் புக்?"

"கவிதை."

"யார் எழுதினது- நீங்களா?"

"சும்மா பொழுது போகலன்னா..."

"காமிங்க.."

"ஐயோ வேணாங்க. நான் யார்க்கிட்டயும் காட்டறதில்லை."

"சரி அப்ப வரட்டுமா; உடம்ப பாத்துக்கங்க."

எழுந்து வாசல் பக்கம் போனாள். அவனும் படுக்கையை விட்டு தள்ளாடி எழுந்திருந்தான்.

தடேலென்று கதவு திறந்து, அவளை பின்னுக்குத் தள்ளிற்று. 'ஒவ்' என்ற கூச்சலுடன் கீழே விழுந்தாள்.

உள்ளே உயரமும் பருமனுமாய் ஒரு தாடிக்காரன் நுழைந்தான். கதவு தாளிட்டான். அவன் கையில் சின்ன ரிவால்வர் இருந்தது. வாசுதேவனுக்குக் குறி வைத்தான்.

"உட்கார்...! இளைஞனே உட்கார்!" கனமான குரலில் ஆங்கிலத்தில் கட்டளையிட்டான்.

"யார்....யார் நீங்க?"

"உட்கார்டா முட்டாள்!" இடது கையிலிருந்து ஒரு குழல் உருவி துப்பாக்கியில் பொருத்திக் கொண்டான். "மூளை சிதறி விடும். பேசாத உட்கார்!" அருகே வந்து வாசுதேவனை நெட்டி படுக்கையில் தள்ளினான். பின்னே நகர்ந்து கதவு பூட்டினான். மெல்ல சிரித்தான்.

"இந்த சந்தர்ப்பத்திற்காக நான் பதினாலு நாட்கள் காத்திருந்தேன். உட்காருங்க மேடம்."

"உங்களுக்கு என்ன வேண்டும்?"

"சொல்லப்படும்!"

"உங்களுடைய பர்ஸ் அங்கே வையுங்க. மோதிரம் கழட்டுங்க. கழுத்து செயின் கழட்டுங்க."

"கொள்ளையா இது?"

அவள் மோதிரம் கழட்டி தரையில் போட்டாள்.

"தாலிக்கொடி.... அதையும் கழட்டுங்க?"

"ப்ளீஸ் பர்ஸ் எடுத்துக்க... தாலிக்கொடி விட்டுடு." தமிழில் புலம்பினாள்.

"நோ. கழட்டாதுபோனால் சுடப்படுவீர்கள்!" அவன் ஆங்கிலமே பேசினான். அவள் அருகே நெருங்கினான்.

"நீங்கள் அழகானவர். காயப்படுத்திக் கொள்ள வேண்டாம். கழட்டுங்கள்!" மெல்ல தாலிக்கொடி தூக்கினான். கழுத்திலிருந்து தலை வழியே விடுவித்தான். பாக்கெட்டில் போட்டுக்கொண்டான்.

பளிச்சென்று வாசுதேவன் நோட்புக் எடுத்து துப்பாக்கி மீது வீச, அது குறி தப்பி வந்தவன் காலில் விழுந்தது.

"யங் மேன்... இது பொம்மை துப்பாக்கி என்று நினைத்தாயா... இதோ பார்...!" "ப்ய்ச்சீங்" என்று புல்லட் வாசுவுக்கு அருகே உள்ள தலையணையில் தைத்தது.

"ரிமூவ் எவ்ரிதிங்! வாட்ச், பாங்கில்ஸ் எவ்ரி திங்!" சகலமும் கழட்டினாள். படுக்கையில் போட்டாள். அவன் வாரி பாக்கெட்டில் திணித்துக் கொண்டான்.

"இப்போது துணிகள்."

"என்ன?"

"உங்களுடைய துணிகளை அவிழ்த்துப் போடுங்கள்."

அமுதாவுக்கு மயக்கம் வந்தது. 'திலீப் திலீப்' என்று உள்ளே கேவல் எழுந்தது.

கூப்பிட்டு. "சாக விருப்பமா...ம்..சீக்கிரம்."

வெளியே கதவு மூன்று முறை தட்டப்பட்டு இடைவெளி விட்டு இரண்டு தட்டு கேட்டது.

அவன் இவர்களை நோக்கி துப்பாக்கி நீட்டியபடியே குமிழைத் திருகினான். சட்டென்று ஒரு ஆள் உள்ளே புகுந்து கதவு சாத்திக் கொண்டான். அவனுக்கும் தாடி இருந்தது. தோளில் சின்ன லெதர் பேக் இருந்தது.

"ம்ம்...சீக்கிரம்."

வந்த ஆளிடம் துப்பாக்கியை கொடுத்துவிட்டு முன்னேறி அவள் இடுப்பு புடவையை இழுத்தான். அமுதா திமிற, ஒரு அறை விட்டான்.

"மறுபடி சொல்கிறேன். உன்னை காயப்படுத்துவது நோக்கமல்ல. ம்ம்.. சீக்கிரம். இல்லையெனில் இவை கிழிக்கப்பட்டு விடும்!"

அமுதா அழுதாள். மண்டியிட்டு அவனிடம் கையேந்தினாள். பயத்தில் நாக்கு தட்டி வார்த்தைகள் குழறின.

"ப்ளீஸ் ப்ளீஸ்..." என்று மட்டுமே பேச முடிந்தது.

"எல்லாவற்றையும் கழட்டு." பெட்டிக்கோட் உருவப்பட்டது.

இரண்டாவது ஆள் வாசுவுக்கு அருகே போய் பளிச்சென்று லுங்கி இழுக்க, வாசு நிர்வாணமானான். அமுதா முகம் பொத்திக் கொண்டாள்.

"நீ அவிழ்க்காது போனால் நான் சுடுவேன்! பத்து வினாடி டைம்!"

எட்டாவது வினாடியில் அமுதா ரவிக்கை முதல் ஹுக் அவிழ்த்தாள்.

நிர்வாணமானாள்.

அவளைப் படுக்கையில் வாசுவுக்கு அருகே தள்ளினார்கள். மல்லாந்து கிடக்கச் சொன்னார்கள்.

இரண்டாவது ஆள் தோள்ப்பையிலிருந்து ஃப்ளாஷ் காமிரா எடுத்தான். 'பளிச் பளிச்' சென்று பல கோணங்களில் படமெடுத்தான்.

முதல் ஆள் பையிலிருந்து ப்ளாஸ்டர் எடுத்தான். பட்டையான இரண்டங்குல ப்ளாஸ்டர். அமுதாவின் வாயில் ஒட்டினான். வாசுதேவன் வாயில் ஒட்டினான்.

அமுதாவின் வலக் காலையும் வாசுவின் இடக்காலையும் நைலான் கயிற்றால் கட்டினான். இருவர் கண்களையும் ப்ளாஸ்டர் பிரித்து மூடினான். மறுபடி ஃப்ளாஷ் மின்னுவது தெரிந்து- காமிரா சத்தமும் கேட்டது.

"வருகிறோம் எங்கள் வேலை முடிந்தது." கதவு தாழிடும் சத்தம் கேட்டது.

அமுதா அவசரமாய் தன் கண்ணிலிருந்து பிளாஸ்டரை நீக்கினாள். ஒட்டிக் கொண்டிருந்த வாய் ப்ளாஸ்டர் நீக்கினாள். வாசுவும் இரண்டும் உதறிவிட்டு எழுந்தான்.

"ஐம் ஸாரி... நான்...யாரு இவங்க?"

அமுதா உடல் பொத்திக் கொண்டாள். கண்கள் இருட்டிக் கொண்டு வந்தது.

வாசு கால்கட்டை சிரமப்பட்டு விலக்கினான். வாசல் கதவுப் பக்கம் போனான்.

"இடியட் எங்கே போற...இரு!"

அமுதா தாவி பெட்டிகோட் உடுத்திக் கொண்டாள். திரும்பி சுவரோரம் போய்நின்று ஜாக்கெட் அணிந்து கொண்டாள். வாசு லுங்கி சுருட்டி தன்னை மறைத்தபடி பாத்ரூம் கதவு திறந்து உள்ளே போனான். வாந்தி எடுத்தான். "அம்மா அம்மா" என்று முனகினான். அமுதா புடவை உடுத்திக் கொண்டாள்.

"ஐயம் டயிங், ஐயம் டயிங்" வாசு வயிற்றைப் பிடித்தபடி துடித்தான்.

"என்ன ஆச்சு?"

தண்ணீர் கேட்டான். அமுதா தண்ணீர் எடுத்து வந்தாள். குடிக்கக் கொடுத்தாள்.

வாசல் பக்கம் போனாள். கதவுக் குமிழ் வைத்துத் திறந்தாள்.

"மேடம் வெயிட்," மூடினாள்.

"இவங்க யாரு?"

"என்னைக் கேட்டா. இது பொறுக்கி ஓட்டல்னு எனக்கெப்படி தெரியும்?"

"இல்ல மேடம், இவங்க எனக்காகவரலை. உங்களை எய்ம் பண்ண வந்திருக்காங்க."

"என்னையா...என்னை ஏன்?"

"தெரியலை. உங்க வீட்டுக்காரருக்கு எதிரியா இருக்கலாம். அவங்க என்னை சட்டை பண்ணவேயில்லை. உங்களைத்தான் நியூடாக்கினாங்க. நான் நடுவுல மாட்டிக்கிட்டேன். ஒரு வேளை..."

"எனக்கு ஆரஞ்சு ஜூஸ் அனுப்பியது இவங்களா இருப்பாங்களோ... ஏதாவது கலந்து கொடுத்திருப்பாங்க..."

"யார் கொடுத்தா?"

"இந்த ஓட்டல் பேரர்."

"பேர் என்ன?"

"தெரியலை. ஒரு ஜூஸ் எக்ஸ்ட்ரா கிடைச்சது. சாப்பிடறியான்னான். சாப்பிட்டேன். ஐ திங்க், எல்லாமே ப்ளாண்ட்."

"ஏன்?"

"தெரியலை மேடம். வீட்டுக்காரர் கிட்ட சொல்வீங்களா இதை?"

"ஐயோ!" அமுதா தலையில் அடித்துக் கொண்டாள்.

"எனக்கு கோச்சிங் இருக்கு மேடம். ஏஷியன் சாம்பியன் கோச்சிங். இதுனால என்ன ஆகப் போவுதோ..."

"முட்டாள் என் வாழ்க்கையே பாழாயிடுச்சு. உன் கோச்சிங்தான் பெரிசா?"

"அவங்க எனக்கு வரலை மேடம். நிச்சயம் நான் முக்கியமில்லை அவங்களுக்கு. நான் உங்களோட பேசினது தப்பு. உங்களோட பழகினது தப்பு- நான் பார்த்திருக்கேன், இவங்களை இந்த ஓட்டல்ல பார்த்திருக்கேன் மேடம். பொலிஸுக்கு நான் ஃபோன் பண்ணவா? இல்ல நீங்களே உங்க வீட்டுக்காரருக்கு..."

அமுதா எழுந்து வெளியே ஓடினாள். ரிஸப்ஷனை தாண்டினாள். பையனிடம் போனாள். கூவினாள். வெளியே வந்தவனை தோளில் துண்டு போட்டு துடைத்தாள்.

"என்னம்மா?"

"பேசாமல் வா." உடுத்தினாள். அவனை இழுத்துக்கொண்டு படியிறங்கினாள். மொபெட் ஏறினாள். பிள்ளையோடு வீடு வந்து சேர்ந்தாள்.

கதவு திறக்க, ஃபோன் அடித்துக் கொண்டிருந்தது.

"ஹலோ...."

"செல்வா. எங்க போயிட்ட...?"

"......"

"ஹலோ அமுதா....அமுதா..."

அமுதா வியர்த்தாள்.

"ஸ்விம்மிங் போனோம்."

"அடடே. நானும் ஸ்விம்மிங்கு வரலாம்னு நினைச்சேன். பரவாயில்லை. இப்ப கிளம்பி வரேன். வேற எங்கயாவது வெளியே போலாம். என்ன.. மாஸ்டர் இருக்கானா?"

அமுதா திடுக்கிட்டாள் "யாரு?"

"பையன்தான். என்ன பண்ணாரு பெரிய வரு?"

"தலை துவட்டறான்."

"துவட்டாமயா கூட்டிட்டு வந்த... நல்லா துவட்டச் சொல்லு. இதோ வரேன்."

ஃபோன் துண்டிக்கப்பட்டது.

அமுதா சோபாவில் உட்கார்ந்தாள். சரிந்தாள். அழுதாள்.

பையன் அருகே வந்து நின்றான்.

"அப்பா திட்டினாங்களாம்மா ஸ்விம்மிங் போனதுக்கு? கேட்டா போவலை. சும்மா பொய் சொன்னோம்னு மறைச்சிடலாமா?" அமுதா யோசித்தாள். பையனிடம் இதைச் சொல்வதா வேண்டாமா? என்று யோசித்தாள்.

உள்ளே நுழைந்து முகம் பார்த்ததுமே புரிந்து கொண்டான். ஷூக்களை அவிழ்க்கப் போனவன் நிமிர்ந்து உற்றுப் பார்த்து பளிச் சென்று முன்னேற, அமுதா நிதானம் என்று கை காட்டினாள். பிள்ளையையும் சுட்டிக் காட்டினாள். சிறிய காக்கி உறையிலிருந்து 'வாட்டர் கேம்' என்கிற விளையாட்டுக் கருவியை எடுத்தான்.

"திலீப், இந்தா" என்று அவளைப் பார்த்தபடி பிள்ளையிடம் நீட்டினான்.

"என்னப்பா இது?"

"வாட்டர்ல இருக்கிற வளையத்தை வெளில இருக்கிற இந்த பட்டன் ப்ரஸ் பண்ணி அந்த குச்சில போடு." பிள்ளை வாங்கி புரட்டிப் பார்த்தது. மெல்ல அழுத்தி ஜலத்தில் கொப்புளம் வரவழைத்து வளையத்தை மேலே தூக்கி ப்ளாஸ்டிக் குச்சி அருகே நகர்த்தியது.

"வாசல்ல உட்கார்ந்துக்க திலீபா. காத்து வரும்." உடைந்த குரலில் அமுதா சொன்னாள். பிள்ளை யாரையும் கவனிக்காது வாட்டர் கேமுடன் வெளியே போனான்.

"அமுதா என்ன ஆச்சு?"

அமுதா இரண்டு கைகளையும் விரித்தாள் உதடு அழுத்தி கடித்துக் கொண்டாள். தரை வெறித்தாள்.

"அமுதா" அவள் தோள் பற்றி உலுக்கினான். அமுதா சற்று இருங்கள் என்பதுபோல் தலையாட்டினாள்.

"ஏதாவது மிரட்டல் ஃபோனா?"

"இல்லை" யென்றாள்.

"வீட்டுக்கு நேர வந்து பயமுறுத்தினானா?"

மறுபடி இல்லையென்று தலையசைத்தாள்.

"என்ன சொல்லேன்?"

'எப்படி சொல்வது எப்படி. இதை வார்த்தையாய் விவரிப்பது எப்படி விளக்கமாய் பேசுவது?'

"அமுதா, எதுவாயிருந்தாலும் பயப்படாம சொல்லு?"

'இனி பயம் உன்னைப் பற்றிதான். என் வாழ்க்கையைப் பற்றித்தான். ஓவென்று அழலாம். சகலமும் போய் விட்டதென்று புலம்பலாம். ஆனால் எதுவும் போகவில்லை. போகாமலும் இல்லை. சின்ன நகக் கீறல்கூட இல்லை. ஆனால் பெரியரணம், வாழ்க்கை முழுதும் மறக்காத ரணம் வந்துவிட்டது.'

(தொடர்ந்து வரும்)



# நானும் அவளும்

மகாத்மா காந்தியின் 'சத்திய சோதனை'யிலிருந்து ஒரு பகுதி.

எனக்கு விவாகமான அந்தக் காலத்தில், காலணா அல்லது ஒரு தம்படி விலையில் (எவ்வளவு விலை என்று இப்பொழுது எனக்குச் சரியாக நினைவில்லை) சிறு பிரசுரங்கள் வெளியாகி வந்தன.

தாம்பத்தியக் காதல், சிக்கனம், குழந்தை மணங்கள் முதலிய விஷயங்களையெல்லாம் பற்றி அவைகளில் விவாதிக்கப்பட்டிருக்கும். அவை எனக்குக் கிடைத்த போதெல்லாம் ஒரு வரிவிடாமல் அவற்றைப் படிப்பேன். எனக்குப் பிடிக்காதவற்றை மறந்துவிடுவதும், பிடித்தமானவற்றை அனுபவத்தில் நிறைவேற்றி வருவதும் என்னிடம் இருந்த பழக்கமாகும்.

மனைவியிடம் வாழ்நாள் முழுவதும் விசுவாசத்துடன் இருந்து வர வேண்டியது ஒரு கணவனின் கடமை என்று இப்பிரசுரங்களில் கூறப்பட்டிருந்தது, என் உள்ளத்தில் நிரந்தரமாகப் பதிந்து நிலைத்துவிட்டது. அத்துடன், சத்திய வேட்கையும் என்னுள் இருந்ததால் மனைவியிடம் உண்மைக்கு மாறாக நடந்து கொள்ளுவது என்பதற்கே இடமில்லை. மேலும், அந்தச் சிறு வயதில் மனைவிக்குத் துரோகம் செய்யச் சந்தர்ப்பமும் கிடையாது.

ஆனால், மனைவியிடம் உண்மையோடு நடந்து கொள்ள வேண்டும் என்ற பாடத்தினால் எதிரிடையான ஒரு விளைவு ஏற்பட்டது. 'நான் என் மனைவியிடம் உண்மையோடு நடந்து கொள்ளுவதென்றால், அவளும் என்னிடம் உண்மையோடு நடந்து கொள்ள வேண்டும்' என்று எனக்குள் சொல்லிக் கொண்டேன்.

இந்த எண்ணம் என்னைச் சந்தேகம் கொண்ட கணவனாக ஆக்கிவிட்டது. அவள் உண்மையோடு நடப்பவளாக இருக்கும்படி செய்வதற்கு, அவளுடைய கடமையை எளிதில் என் உரிமையாக ஆக்கிக்கொண்டேன். அந்த உரிமை விஷயத்தில் நான் விழிப்புடன் இருந்து வலியுறுத்துவது என்றும் தீர்மானித்தேன்.

அவளுடைய பக்தி விசுவாசத்தில் நான் சந்தேகம் கொள்ளுவதற்குக் காரணமே இல்லை. ஆனால், காரணங்களுக்காகச் சந்தேகம் காத்துக் கொண்டிருப்பதில்லை. ஆகவே, அவள் செய்வதையெல்லாம் எப்பொழுதுமே கவனித்து வரவேண்டியது அவசியம் அல்லவா?

என் அனுமதியின்றி அவள் எங்குமே போகக்கூடாது என்று கட்டுப்பாடு விதித்தேன். இது எங்களுக்குள் கடுமையான சச்சரவுக்கு விதை ஊன்றிவிட்டது. நான் விதித்திருந்த கட்டுப்பாடு உண்மையில் அவளுக்கு ஒரு வகையான சிறைத்தண்டனையே. இத்தகைய காரியத்திற்கு உடன் பட்டுவிடக்கூடிய பெண்ணல்ல, கஸ்தூரிபாய். தான் விரும்பிய இடங்களுக்கு விரும்பிய போதெல்லாம் அவள் பிடிவாதமாகப் போய்க்கொண்டுதான் இருந்தாள்.

நான் கட்டுப்பாடுகளை அதிகமாக விதிக்க விதிக்க, அவள் தன் இஷ்டம்போல் நடப்பதும் அதிகமாகிக் கொண்டே வந்தது. அதனால் எனக்கு ஆத்திரமும் அதிகமாகிக் கொண்டே போயிற்று. குழந்தைத் தம்பதிகளான எங்களுக்குள், ஒருவரோடொருவர் பேசாமல் இருந்து விடுவது என்பது சர்வசாதாரணமாக ஆகிவிட்டது.



மகாத்மா காந்தி

என்னுடைய கட்டுத் திட்டங்களைக் கஸ்தூரிபாய் மீறியதில் யாதொரு தவறுமில்லை என்றே நான் இன்று எண்ணுகிறேன். கோயிலுக்குப் போகக் கூடாது என்றும், தன் தோழிகளைப் போய்ப் பார்க்கக்கூடாது என்றும் தடை விதித்தால், கபடமற்ற ஒரு பெண் அவற்றை எப்படிச் சகிப்பாள்?

அவளுக்குக் கட்டுத் திட்டங்களையெல்லாம் விதிக்க எனக்கு உரிமை இருக்கிறதென்றால், அதே போன்ற உரிமை அவளுக்கும் உண்டு அல்லவா? இவையெல்லாம் இன்று எனக்குத் தெளிவாகப் புரிகின்றன. ஆனால் அப்பொழுதோ கணவனுக்குரிய அதிகாரங்களைச் செலுத்தியாக வேண்டும் என்றே நினைத்து வந்தேன்!

என்றாலும், எங்களுடைய வாழ்க்கை, மாறாத கசப்பு நிறைந்த வாழ்க்கையாகவே இருந்தது என்று வாசகர்கள் நினைத்துவிட வேண்டாம். நான் அவளிடம் கடுமையாக நடந்து கொண்டதற்கெல்லாம் அன்பே காரணம்.

மனைவி என்றால் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு அவள் உதாரணமாக விளங்கும்படி செய்யவே நான் விரும்பினேன். அவள் தூய வாழ்க்கை நடத்தி, நான் கற்றவைகளை அவளும் கற்பதன் மூலம் எங்கள் இருவருடைய வாழ்க்கையும் எண்ணங்களும் ஒன்றாக இருக்கும்படி செய்ய வேண்டும் என்பதே என் அபிலாஷை.

கஸ்தூரிபாய்க்கு அப்படிப்பட்ட அபிலாஷை ஏதாவது இருந்ததா என்பது எனக்குத் தெரியாது. அவள் எழுதப் படிக்கத் தெரியாதவள். சுபாவமாகவே அவள் கபடமற்ற தன்மையும், சுயேச்சை நோக்கும், விடாமுயற்சியும் உடையவள். குறைந்தபட்சம் என் விஷயத்தில் மாத்திரம் பேச வெட்கப்படுபவள். தன்னுடைய அறியாமையைக் குறித்து அவளுக்குக் கவலையே இல்லை.

நான் படித்து வந்தது, தானும் அவ்வாறு படிக்க வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபடும் உற்சாகத்தை அவளுக்கு அளித்ததாக எனக்கு ஞாபகமில்லை. ஆகையால் நான் கொண்டிருந்த அபிலாஷையெல்லாம் என்னோடுதான் நின்றது என்று எண்ணுகிறேன்.

அவள் ஒருத்தி மீதே நான் என் முழு ஆசையும் வைத்திருந்ததுபோல அவளும் என்மீது ஆசை வைக்க வேண்டும், என்று நான் விரும்பினேன். அப்படி அவள் ஆசை வைக்காது போனாலும் வாழ்க்கை மீளாத் துன்பமாக இருந்திருக்க முடியாது. ஏனெனில், ஒரு பக்கத்திலாவது தீவிரமான அன்பு இருந்தது.

அவளிடம் எனக்கு அடங்காப் பிரேமை என்பதை நான் சொல்லவே வேண்டும். பள்ளிக்கூடத்தில்கூட எனக்கு அவள் நினைப்புத்தான். இரவானதும் அவளைச் சந்திக்கலாம் என்ற எண்ணம் எப்பொழுதும் மனதில் தோன்றிக் கொண்டே இருக்கும்.

பிரிந்திருப்பது என்பதோ சகிக்க முடியாததாகும். இரவில் 'நெடுநேரம் வரையில் ஏதேதோவெல்லாம் பேசி, அவளைத் தூங்கவிட மாட்டேன். இத்தகைய அடங்காத காமவெறிக்கு மாற்றாகக் கடமையில் தீவிரமான பற்று மட்டும் எனக்கில்லாதிருந்தால், நான் நோய் வாய்ப்பட்டு அகால மரணத்தை அடைந்திருப்பேன்: இல்லையானால், பிறருக்குப் பாரமாக இருந்து வாழ வேண்டியவனாகியிருப்பேன். ஆனால், ஒவ்வொரு நாளும் காலையில் எனக்கென்றிருந்த வேலைகளை நான் செய்து தீரவேண்டியிருந்தது.

யாரிடமும் பொய் சொல்லுவது என்பதோ என்னால் ஆகவே ஆகாது. கடைசியாகச் சொன்ன இந்தக் குணமே படுகுழியில் விழாமல் பல தடவைகளிலும் என்னைக் காத்தது.

கஸ்தூரிபாய் எழுத்து வாசனை இல்லாதவள் என்பதை முன்பே கூறியிருக்கிறேன். அவளுக்குக் கல்வி அறிவு புகட்ட வேண்டும் என்று நான் மிகவும் ஆவலோடு இருந்தேன். ஆனால், காமமே மேலோங்கி நிற்கும் காதலினால் அதற்கு நேரமே இல்லாது போயிற்று.



படிப்பகம்

www.padippakam.com




14

## பட்டுக்கோட்டை பிரபாகர்

பா தி நிலாவில் மேக ஒட்டடை படிந்திருந்தது.

மொட்டை மாடியில் அலங்கார ஊஞ்சலில் அமைதியாக அமர்ந்திருந்த துர்க்கா, நைட்டியில் இருந்தாள்.

அருகில் அமர்ந்திருந்த ஈஸ்வர் டீப்பாய் மேல் கிளாஸை வைத்து ஜின் ஊற்றினார். ஐஸ் க்யூப்ஸ் இடுக்கியில் எடுத்துப் போட்டார்.

எடுத்து அவளிடம் நீட்டினார்.

வாங்கி ஒரே மூச்சில் தொண்டைக்குழி எகிற குடித்து முடித்துவிட்டு வைத்தாள்.

ஈஸ்வர் தனக்கு வெளிநாட்டு விஸ்கியை ஊற்றிக் கொண்டார். நிதானமாக இரண்டு சிப் பருகி விட்டு சிகரெட் பற்ற வைத்துக்கொண்டார்.

"நான் பெத்த பொண்ணு என்னை இன்சல்ட் பண்றா."

"போகுது விடு"

"டாக்டர் மூலமா சொல்லி என்னை வீட்டுக்கு அனுப்பி வெச்சிட்டா! நர்ஸ் பார்த்துப்பாளாம்."

"அவளுக்கு உன்னைப் பிடிக்கலைன்னு இன்னிக்குத்தான் உனக்குத் தெரியுமா துர்க்கா?"

"ஏன் பிடிக்கலை? இவளுக்கு சோத்துல விஷம் வெச்சிட்டனா? இன்னைக்கு ஊரு, உலகம் பூரா மதுமிதா, மதுமிதான்னு பேசுதே அதுக்குக் காரணம் யாரு?"

"நீதான். நீ நடிகையா இருந்ததாலதான் உனக்கு அவளை சுலபமா அறிமுகப்படுத்த முடிஞ்சுது. எவ்வளவு புரொட்யூசர்கிட்ட நீ அவளுக்கு சான்ஸ் கிடைக்கணுங்கிறதுக்காக கெஞ்சியிருக்கே! நானே பக்கத்தில இருந்து பார்த்திருக்கேனே!"

"அந்த நன்றி அவ மனசுல கொஞ்சம் கூட இல்லாமப் போச்சேங்க!"

"இருக்கு! அதை புகழ்கொடுத்த மமதை மறைச்சிட்டிருக்கு."

"காலொடிச்சுக்கிட்டு படுத்திட்டாளேன்னு எனக்கு எவ்வளவு பதறுது! அந்தப் பாசத்தை அவ வேஷம்னு சொல்றா."

"பெத்த மனசு பித்து! பிள்ளை மனசு கல்லு! இன்னொரு கிளாஸ் ஊத்தட்டுமா துர்க்கா?"

"ஊத்துங்க!"

ஈஸ்வர் மற்றும் ஒரு கிளாஸ் ஊற்றிக் கொடுத்தார்.

"அவ ஏங்க என்கிட்டே இப்படி வெடுக்வெடுக்னு பேசறா?"

"உன்கிட்டே மட்டும்தான் பேசறாளா? நான் தகவல் சொல்லி இனியா போய்ப் பார்த்திருக்கா, அவகிட்டேயும் ஏதோ கடுப்படிச்சிருக்கா. ஆஸ்பத்திரியிலே இருக்கறப்பக்கூட அக்காவுக்கு மண்டை கனம் இறங்காதான்னு இனியா என்கிட்டே ஃபோன்ல கேக்கறா!"

"என்ன ஆச்சு அவளுக்கு?"

"அதே மாதிரி நம்ம புரொடக்ஷன் வேலைகள் சம்பந்தமா, நாலு செக்குல கையெழுத்துப் போட்டுத் தரச் சொல்லிக் கேட்டேன். 'நான் இனிமே பிளாங்க் செக்ல கையெழுத்துப் போட முடியாது'ன்னு மூஞ்சில அடிச்ச மாதிரி சொல்லிட்டா!"

"உங்ககிட்டேயும் எதிர்த்துப் பேச ஆரம்பிச்சிட்டாளா?"

"அவளோட இந்தத் திடீர்ப் பாய்ச்சலுக்கு ஒரு பின்னணி காரணம் இருக்கு துர்க்கா"

"என்ன?"

"இத்தனை நாளா நீ சொல்றதுக்கெல்லாம் தலையாட்டிக்கிட்டு பெட்டிப் பாம்பா இருந்திட்டிருந்தவ, இப்ப கேள்வி கேக்கறான்னா என்ன அர்த்தம்? இது சொந்த புத்தியும் இல்லை. சுயபுத்தியும் இல்லை. சொல்லித் தர்ற புத்தி."

"என்ன சொல்றீங்க?"

"கல்யாணம் பண்ணிக்கப் போறதா சொல்லிக்கிட்டு, எவனோடவோ சுத்திக்கிட்டுத் திரியறாளே, அவன் கொடுக்கிற தைரியம்தான் எல்லாம்."

"சந்திரசேகரையா சொல்றீங்க?"

"சந்திரசேகரா? அது யாரு?"

"அதுதான் அவ கட்டிக்கப்போறவனோட பேரு"

"அட! இது எப்படி உனக்குத் தெரியும்?"

"அவன் கிட்டேயிருந்து ஃபோன் வந்திச்சி. பர்சனலா பேசணும்னு என்னை வெளியே அனுப்பிச்சிட்டா.... கதவிடுக்குல காது வெச்சி இந்த சைடு இவ பேசினதெல்லாம் கேட்டேன். அதிலேர்ந்து அவன்தான் அந்தப் பையன்னு தெரிஞ்சுக்க முடிஞ்சுதுங்க."

"சந்திரசேகர்? அப்படின்னு இண்டஸ்ரில யாருமே இல்லையே. எனக்குத் தெரிஞ்சு, யாரு அதுன்னு விசாரிக்க வேண்டியது தானே!"

"அதை விசாரிச்சதுக்குத்தான் சண்டை போட்டு, டாக்டரை கூப்பிட்டு, கலாட்டா பண்ணி என்னை வீட்டுக்கு அனுப்பி வெச்சிட்டா!"

ஈஸ்வர் யோசனையில் ஆழ்ந்தார். மற்றொரு சிகரெட்டை எடுத்து அதன் நெருப்பை அதற்குக் கடத்திவிட்டு அதைச் சமாதி செய்தார்.

எழுந்து மெதுவாக மொட்டை மாடியில கைப்பிடி சுவர் அருகே வந்தார். தூரத்து கார் வெளிச்சப் பொட்டுக்களின் அசைவுகளைப் பார்த்தார். நட்சத்திரங்களின் மினுக்கல்களைப் பார்த்தார்.

களக், களக் என்று திரவம் கிளாஸில் ஊற்றப்படும் சத்தத்திற்குத் திரும்பி, "துர்க்கா, போதும்! ஏற்கனவே உன் லிமிட்டுக்கு மேல போயிட்டே!" என்றார்.

"பரவாயில்லை! எனக்கு ரொம்ப வேதனையா இருக்குங்க."

குடிக்கத் தொடங்கினாள் துர்க்கா.

அவளருகில் வந்தார் ஈஸ்வர்.

"இருபது நாளைக்கு அந்த ஆஸ்பத்திரியை விட்டு அந்தப் பக்கம், இந்தப்பக்கம் அசைய முடியாது அவளால... இல்லையா?"

"ஆமாம்."

"இந்த இருபது நாளைக்குள்ளே நாம புத்திசாலித்தனமா செயல்பட்டாகணும் துர்க்கா. இல்லைன்னா வாழ்க்கை பூரா ரொம்ப வருத்தப்பட்டுக்கிட்டிருப்போம்.".

"என்ன செய்யணும் சொல்லுங்க."


"அந்த சந்திரசேகர் யாருன்னு கண்டுபிடிச்சு அவன் மனசுல இருந்து மதுமிதாவை தூக்கி எறிய வைக்கணும். இவளோட திட்டத்தை தவிடுபொடியாக்கணும். இதை நான் பார்த்துக்கறேன். நீ செய்ய வேண்டிய வேலை ஒண்ணு இருக்கு."

"என்ன?" குழறலாகக் கேட்டபடி ஊஞ்சலில் சைடாகச் சரிந்தாள் துர்க்கா.

"இப்ப நான் எது சொன்னாலும் உனக்குப் பதியாது. அப்புறம் சொல்றேன். வா போலாம். நீ தூங்கு."

துர்க்காவை எழுப்பி, அவளைத் தோளோடு சாய்த்து அணைத்தபடி நடத்திச் சென்று படுக்கையறையில் படுக்க வைத்தார் ஈஸ்வர்.

மறுபடி மொட்டை மாடிக்கு வந்தார். தன் கிளாஸை நிரப்பிக் கொண்டார். சிகரெட்டை ஆழமாக உள்ளிழுத்துக் கொண்டார் ஈஸ்வர்.



***

ஜீப்பைக் கண்டதும் செக்கியூரிட்டி ஆசாமி அவசரமாக இரும்பு கேட்டைத் திறந்து விட்டு, ஜீப் அவனைக் கடக்கும்போது, உள்ளே இருந்த சந்திரசேகர் கவனிக்கவில்லை என்றாலும் விரயமாக ஒரு சல்யூட் வைத்தான்.

அந்த யார்டில் அறுக்கப்பட வேண்டிய மரங்கள் தேக்கு, வெண்தேக்கு, பலேசா, கோங்கு, படாக் என்று ரகம் பிரிக்கப்பட்டு, மலை மாதிரி அடுக்கப்பட்டிருந்தன. ஆஸ்பெஸ்டாஸ் வேய்ந்த ஷெட்டுக்களில் சைஸ் வாரியாக அறுக்கப்பட்ட மரங்கள்.

கட்டிங் பகுதியில் ஐந்து மெகா சைஸ் இயந்திரங்கள், தாமாக இயங்கி மரங்களை அறுத்துத் தள்ளிக்கொண்டிருக்க, நீல நிற யூனிஃபோர்ம் அணிந்த ஊழியர்கள் மாற்றி மாற்றி சந்திரசேகருக்கு வணக்கம் சொன்னார்கள்.

அலுவலகக் கட்டடத்தில் குளிர் அறைக்கு வந்ததும் உதவி மனேஜரை உள்ளே அழைத்தான்.

"ஆர்.கே.கன்ஸ்ட்ரக்ஷனுக்கான லாட் முந்தாநாளே டெஸ்பாட்ச் பண்ணச் சொல்லி உங்ககிட்டே பர்சனலா நானே இன்ஸ்ட்ரக்ஷன் கொடுத்திருக்கேன். இன்னைக்கு வரைக்கும் அனுப்பலை என்ன சார் பண்றீங்க..., உம்.."

சந்திரசேகர் கேசில் இருந்து சிகரெட் உருவியபோது, அது சங்கீதமாகச் சிணுங்கியது.

"ஸாரி சார். அவங்க ஆர்டர்ல ரெண்டு அயிட்டம் ரெடியாகலை. அதான் நாளைக்கு அனுப்பிச்சிடுவோம் சார்."

"ரெடியானதை மட்டும் முதல்ல அனுப்பியிருக்கலாமே?"

"ரெண்டு தடவையா அனுப்பிச்சா நமக்கு ரெண்டு டிரான்ஸ்போர்ட் செலவு ஆகும்சார்: அதனாலதான்."

"எனக்கு நஷ்டத்தை அவாய்ட் பண்றீங்களாக்கும்! ரெண்டு அயிட்டம் ரெடியாகலை, என்ன சார் பண்ணட்டும்னு என்னை நீங்க கேட்டீங்களா? அதுவும் ரெடியானதும் அனுப்பிக்கலாம்னு நீங்களா முடிவெடுத்துட்டு, பேசாம உட்கார்ந்திருந்தது அதிகப்பிரசங்கித்தனம். அதையும் நானா கேட்டப்புறம்தான் சொல்றது பொறுப்பில்லாத்தனம்."

"உடனே ரெடியாய்டும்னுதான் சார் நினைச்சேன்."

"செஞ்ச தப்பை ஒத்துக்காம சமாளிச்சுப் பேசறது அழிச்சாட்டியமான பிடிவாதம்! யு கேன் கோ நவ்!"

ஆத்திரமாகக் கத்திவிட்டு மேஜை மேலிருந்த தண்ணீரை எடுத்து மடமட வென்று குடித்தான் சந்திரசேகர்.

செல்ஃபோன் சிணுங்கியது.

"ஹலோ... சந்திரசேகர்."

"சந்துரு, நான்தான் மதுமிதா..."

"எப்படிம்மா இருக்கே?"

"வலி குறைஞ்சிட்டிருக்கு. வர்றீங்களா?"

"எப்போ?"

"இப்பவே!"

"ஒண்ணும் பிரச்சனை இல்லையே! உன் அம்மா?"

"அவங்களை வீட்டுக்கு அனுப்பிட்டேன்."

"பத்திரிகைக்காரன் எவனாச்சும் பார்த்துடுவான்னு புலம்புவியே, பரவாயில்லையா?"

"பரவாயில்லை. வாங்க. இனிமே எதுக்கும், யாருக்கும் பயப்படப் போறதில்லை."

"ஓ.கே. உடனே வர்றேன். நான் ஏதாச்சும் உனக்கு வாங்கிட்டு வரணுமா மது?"

"ஆமாம் சந்துரு."

"என்ன வேணும் சொல்லு?"

"ஒரு தாலி வாங்கிட்டு வாங்க...." என்றாள் எதிர் முனையில் மதுமிதா.

(தொடரும்)

---

"சினிமாவுல என்ன என்னெல்லாம் நடந்ததுன்னு சொல்ல ஆரம்பிச்சா, நாளைக்குக் காலைல என்னைக் கல்லால அடிச்சுக் கொன்னுருவாங்க. அவ்வளவு காயங்கள் இருக்கு மனசுல."

தேசிய விருது பெற்றுள்ள இயக்குநர் அகத்தியன் ஒரு பேட்டியில்....

–'ஆனந்த விகடன்' 18.05.97 இதழில்–

---

## யார் இவர்?



ரஜினியுடன் காணப்படும் சிறுவர்களில் உலக சாதனை வீரர் ஒருவரும் இருக்கிறார். யார் என்று தெரிகிறதா? விடையைச் சரிபார்க்க பக்கம் 18.

---

## கடித இலக்கியம்

## அவளுக்கு மட்டும்!

## கவியரசு கண்ணதாசன்

அன்புக்குரியவளே,

உன் கடிதங்கள் எனக்குக் கிடைத்தன.

அவை எழுப்பியுள்ள கேள்விகளுக்கு உனக்கு மட்டும் நான் பதில் சொன்னால் போதாது. எனவே, அதைப் பகிரங்கமாக்குகிறேன்.

எனது எழுத்துக்கள் மிகவும் சோகமயமாக இருப்பதாகவும், ஏனென்று உனக்குப் புரியவில்லை என்றும் வருந்தியிருக்கிறாய்.

உண்மையில் நான் அளவற்ற சோகத்திலும் மிதக்கவில்லை; முழு நிம்மதியிலும் இல்லை.

இரண்டுக்குமிடையே ஒரு மயங்கிய நிலை.

மகிழ்ச்சிக் கவிதைகளைவிட, துயரக் கவிதைகளே பலரது வாழ்க்கையோடு ஒத்திருக்கின்றன.

கவிதைகள் நிலை பெறுவதற்குக் கண்ணீர் துணை புரிகிறது.

இயற்கையாக அழ முடியாவிட்டாலும், செயற்கையாகவாவது அழுவது சிந்தனைக்கு வளம் தருகிறது என்பது என் அனுபவம்.

நாட்டியத்துக்குப் பாட்டெழுதுவதைவிட, நலிந்து போனவனுக்கு எழுதுவதிலே ஒரு சுகம் இருக்கிறது.

ஈஸ்வரனின் முன்னால் சிரித்துக்கொண்டு உட்கார்வதைவிட அழுது கொண்டு உட்கார்வதில் ஓர் அமைதி இருக்கிறது.

இவையெல்லாம் என் பலவீனத்தையா காட்டுகின்றன?

இவை பலவீனம் என்றால், ஒவ்வொரு மனிதனும் பலவீனனே!

எனக்கு மரண பயம் இல்லை.

கடக்க முடியாத, தடுக்க முடியாத ஒன்றை எண்ணி நான் ஏன் பயப்பட வேண்டும்?

காலத்தின் விதிக்கோடு எங்கே முடிகிறதோ, அங்கே முடியட்டும்.

பிறப்பனவெல்லாம் இறக்கும் என்றால், இறப்பனவெல்லாம் பிறக்கும் என்பது இந்து தர்மம்.

'இறைவா, என்னை மறுபடியும் பிறக்க வைக்காதே' என்று துதித்தார் பட்டினத்தார்.

நானோ மறுபடியும் பிறக்க ஆசைப்படுகிறேன்.

அதனால் மரணத்தை அழைக்கிறேன்; அதைக் கண்டு பயப்படவில்லை.

நான் சில எல்லைகளைக் கடந்த பிற்பாடு நீ என்னைச் சந்தித்திருக்கிறாய். இந்தச் சந்திப்பு எனது காலத்தின் சாலையில் ஒரு மைல் கல்லே!

'அன்பு காட்டும் உள்ளத்தில் அநுதாபமும் பிறக்கிறது' என்பதற்கு நீ ஓர் எடுத்துக் காட்டு.



ஆகவே, என் எழுத்துகளில் சிறிய துயரம் தொனித்தால்கூட உனக்குப் பெரிதாகத் தோன்றுகிறது.

இங்கேயோ வெண்ணெய் உருகி வெகு நாட்களாகிவிட்டன; இனி அது வெண்ணெய் ஆக முடியாது.

ஒரு காலம் மகிழ்ச்சிக்கு உரியதாகவும், ஒரு காலம் துன்பகரமாகவும் மாறுவது இயற்கை.

ஆனால், எனது தருமம் துன்பங்களினால் மரத்துப் போய்விட்டது.

கல்லிலே தேனை ஊற்றினால் அது குடிக்கவா போகிறது!

இன்பங்கள் வருகின்றன; ஆனால், இதயம் அவற்றை ரசிக்கவில்லை.

துன்பங்கள் எழுதத் தூண்டுகின்றன; ஆகவே, அவற்றை நான் மறக்கவில்லை.

எனக்காக வாழக்கூடிய ஓர் உயிராக நீ உன்னைக் கருதுகிறாய்; நல்லது.

கனவில் தோன்றும் காட்சிகளைப் புகைப்படம் பிடிக்க முடியாது.

காரிய சாத்தியமில்லா, சிந்தனைகள் காலத்தை வீணாக்குகின்றன.

'தேங்கிக் கிடக்கும் குட்டையில் நீர் குடிக்கும்போது அதைக் கலக்கி விடாமல் ஜாக்கிரதையாகக் குடிக்க வேண்டும்' என்கிறார் பகவான் ராமகிருஷ்ணர்.

என்னைப் பொறுத்தவரையில் உன் நிலையும் அதுவே.

காய்ந்த நதியில் மீண்டும் வெள்ளம் வரும்போது என் கரையில் உன்னை எதிர்பார்ப்பேன்.

இப்போதோ என் கரையில் உள்ள நாணல்களைக் காப்பாற்றுவதே என் பணி.

கள்ளிக் காட்டில் பழகிவிட்ட என்னால், முல்லைக் கொடிகளை உணர முடிவதில்லை.

விரக்தியும், வேதாந்தமும் நான் விரும்பி ஏற்றுக் கொண்டவையல்ல; அவை என்னைத் தேடி வந்தவை.

'தத்துவ ஞானமே அங்கிருந்துதான் உதயமாகிறது' என்கிறது ஞானக்கோவை. அது துயரங்களின் மூலம் இறைவன் எனக்கு அளித்த பரிசு.

என் அன்புக்குரியவளே,

முப்பது வருஷங்களுக்கு முன் என்னை நீ சந்தித்திருந்தால், நீயே அதற்குக் காரணமாக இருந்திருக்கலாம்.

இப்போது அதற்கென்று வேறு சிலர் இருக்கிறார்கள்.

எனினும், உன் வேண்டுகோளின் படி உலகத்தையும், உழைப்பையும் உற்சாகப்படுத்தவும், புதுமை உணர்ச்சிகளை அங்கீகரிக்கவும் நான் முயல்வேன்.

எல்லாம் உனக்காக.

காரணம், உன் எழுத்தின்படி, நீ வாழ்வது எனக்காக.

அன்புள்ள
'கண்ணா'



படிப்பகம்

www.padippakam.com

# "நீங்க ஜெயிப்பீங்க...!"

## தும்மல வெங்கடராமய்யா

**இந்திய மண்ணில் ஆந்திராவில் நடைபெற்ற வீரம் செறிந்த போராட்ட காலகட்டத்தை பிரதிபலிக்கும் கதைகளில் ஒன்று இது.**

கிழக்கு வெளுக்கவில்லை. இருளின் ஆதிக்கம் இன்னும் மிச்சமிருந்தது. மல்லாரெட்டி குடியிருப்புப் பகுதியில் பொலிஸ்காரர்களும் சிப்பாய்களும் வந்திறங்கினார்கள். அவர்கள் ஊருக்குள் அடி வைத்ததுதான் தாமதம், ஊர் மக்கள் ஒன்று திரண்டு எதிர்ப்புத் தெரிவிக்க ஆரம்பித்தார்கள். உடம்பில் கொஞ்சம் வலுவுள்ளவர்கள் ஆண் பெண் வித்தியாசமின்றி முன்னால் ஓடினார்கள். ஆக்ரோஷமாய் தாக்கிக் கொண்டார்கள். ஒருவரையொருவர் வெறி பிடித்தவர்கள் போல் அடித்துக் கொண்டார்கள். கடைசி மூச்சைக் கையில் பிடித்துக் கொண்டிருந்த வயோதிபர்கள் மட்டும் வீட்டுக்குள் முடங்கியிருந்தார்கள்.

டாம்.... டாம்.... என்று துப்பாக்கி வெடிக்கும் சத்தம்...

அடிகள்... உதைகள்... மானபங்கங்கள்...!

அழுகை.. கூக்குரல்... ஓலங்கள்... அலறல்கள்..!!!

பொலிஸ் வீட்டிற்குள் வந்தேவிட்டது.

"ஐயோ.. மவளே... என் தங்கமே.... நான் என்ன செய்வேன்...." வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு அழுதாள் ரங்கம்மா.

"ஏய் கிழவி.... எந்தக் கழுதையாவது இந்தப் பக்கம் வந்தானா...?" அதிகாரமாய்க் கேட்டான் ஒரு பொலிஸ்காரன்.

"அநியாயம் செஞ்சிட்டுப் போய்ட்டியேடி... நான் எங்க போவேன் என் தங்கமே... ஐயோ... எனக்கு வரக்கூடாதா இந்தச் சாவு..." பொங்கிப் பொங்கிக் கத்தினாள் ரங்கம்மா.

"ஏய் கிழவி... ஒன்னத்தான்... எவனாவது வந்தானா இங்க?" கைத்தடியை தரை மீது ஓங்கியடித்தான் இன்னொருவன்.

"எனக்குத் தெரியாதய்யா. தெய்வமே... என்னை எடுத்திட்டுப் போகக் கூடாதா? என் தெய்வமே... அவ அப்பன் வந்து, என் மக எங்கன்னு கேட்டா என்ன சொல்ல தெய்வமே...?" ரங்கம்மா ஒப்பாரி வைத்தாள்.

இண்டு இடுக்கு விடாமல் வீடெங்கும் தேடினார்கள். "தரித்திரம் பிடித்த கிழவி வீட்டில் கொள்ளையடிக்கக்கூட எதுவுமில்லே..." முணுமுணுத்தார்கள்.

"கொக்கரக்கோ...?"- கூடையின் கீழ் கோழி கூவிற்று.

"விட்டுடுங்க சனியன..." கமாண்டர் ஆணையிட... மீண்டும் கேலியாய்ச் சிரித்தபடி சென்றுவிட்டார்கள் பொலிஸ்காரர்கள்.

ரங்கம்மா அழுது கொண்டேயிருந்தாள்.

●●●

பொழுது புலர்ந்தது. பளிச்சென வெளிச்சம் பரவியது. ராஜா ரெட்டிக்கு தெளிவு வந்தது. நினைவுத் திரையில் ஒவ்வொரு விஷயமும் இலேசாய் எட்டிப் பார்த்தது. மக்களுக்கும் பொலிஸ் மற்றும் சிப்பாய்களுக்குமிடையில் யுத்தம் நடந்தது... வீராவேசமாய் தன்னைச் சேர்ந்தவர்கள் எதிரிகளுடன் மோதியது... எல்லாம் நினைவுக்கு வந்தது. ஆனால் என்ன லாபம்? ஆயுதம் தாங்கியவர்கள் அவர்கள். நிராயுதபாணிகள் இவர்கள். ஆயுதங்கள் மட்டும் இருந்திருந்தால்...

துப்பாக்கி குண்டு துளைத்துச் சென்ற முழங்கையைப் பார்த்துக் கொண்டான் ராஜா ரெட்டி. 'இந்தக் காயம் மட்டும் ஏற்படாதிருந்தால் இந்தக் கைபலத்திற்கு இன்னும் எத்தனை பட்சிகள் வீழ்ந்திருக்குமோ?' கண்கள் மூடியபடி யோசனையிலாழ்ந்தான்.

"அய்யா... இதக்குடி..."

கண்திறந்த ராஜாரெட்டி நன்றியுடன் அவளைப் பார்த்தபடி இடது கையால் பாலை வாங்கிக் குடிக்கலானான். ஏதேதோ பச்சிலையெல்லாம் கொண்டுவந்து காயத்தில் வைத்துக் கட்டிவிட்டு அவன் பக்கத்தில் உட்கார்ந்தாள்.

இருந்தாற்போலிருந்து ராஜாரெட்டிக்கு உடம்பெல்லாம் சிலிர்த்தது. நெஞ்சில் இனம் புரியாத கலவரம் மூண்டது.

"அம்மா....!"

இதயத்தைத் துளைத்துக் கொண்டு போன அந்த அழைப்பில் மெய்மறந்தாள் ரங்கம்மா. அப்போது அந்த இளைஞன் அவள் பார்வையில் ஒரு சின்னக் குழந்தையாய்த் தெரிந்தான். கசிந்த விழிகளைத் துடைத்துக் கொண்டபடி ஆதுரத்துடன் கேட்டாள். "என்னப்பா...?"

"நம்மவங்க எத்தனை பேர் செத்துப் போனாங்க? எத்தனை பேருக்குக் காயம் பட்டிருக்கு?"

ரங்கம்மா அதற்குப் பதில் கூறாமல் யோசனை செய்து கொண்டிருந்தாள்.

"அவங்க பக்கம் எத்தனை பேர் செத்திருப்பாங்க?"

"தெரியாதுப்பா. சவங்களை அவங்களே லாரில ஏத்திட்டுப் போனாங்களாம். எத்தனை பேருன்னு சரியா தெரியாது. நம்மவங்க விஷயமும் அப்படித்தான்..."

ரங்கம்மா திடீரென பேச்சை நிறுத்தி விட்டாள். ஏதோ சொல்ல வேண்டும் போல் ஒரு துடிப்பும் பதட்டமும் வேதனையும் தெரிந்தது அவள் முகத்தில்.

வைத்த விழி வாங்காது அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் ராஜாரெட்டி. தாய் மடியில் படுத்திருக்கும் குழந்தைப்பருவம் ஞாபகம் வந்தது. அவளுக்கு எப்படி நன்றி தெரிவிப்பதெனத் தெரியவில்லை. வார்த்தைகள் எழவில்லை. பொங்கும் நன்றியுணர்வையும் பாசத்தையும் விழிகளில் தேக்கி அவளைப் பார்த்தான்.

"என்னைப் பிழைக்க வைத்த உன் கடனை எப்படித் தீர்க்கப் போறம்மா?"



"பெரிய வார்த்தையெல்லாம் பேசாதப்பா. அப்படி நான் என்ன செஞ்சிட்டேன்?"

"அவங்களுக்குத் தெரிஞ்சா உன்னை சித்ரவதை செய்வாங்க... பாவிங்க..."

"என்ன செஞ்சாலும் பயமில்லை. நாலு பேரோட நான் கடைசி மூச்சுல நிக்கற என்னைப் பத்தி என்னப்பா... நீங்கள்லாம் நல்லா இருக்கணும். எங்களைப் போன்ற ஏழை பாழைகளுக்காக எவ்வளவு கஷ்டப் படறீங்க நீங்கள்லாம்... ஒரு ஜில்லா ஒரு ஊர்னு இல்லாம ராத்திரி பகல் பார்க்காம போராடறிங்க. எந்த நேரத்துல அந்தப் பாவிங்க கையில் சிக்கிடப் போறிங்களோங்கற பயம்தான் பெரிசா இருக்கு..."

ரங்கம்மாவின் குரல் நடுங்கிற்று. கண்களைத் துடைத்துக் கொண்டு வாசல் பக்கம் பார்த்தாள். மடியில் இருந்த ராஜா ரெட்டி நெற்றியை ஆதுரமாய் வருடிவிட அவன் தன்னையுமறியாது உறக்கத்திலாழ்ந்தான்.

●●●

எத்தனை பேர் மடிந்தார்களோ, இது போல் எத்தனை தாய்மார்கள் பலியானார்களோ... அந்த ராட்சசன் கையில் சிக்கி எத்தனை பேர் எப்படிப்பட்ட அவமானங்களுக்கெல்லாம் பலியானார்களோ...? யுத்தம் முடிந்துவிட்டது. ஏராளமான மரணக் கணக்குடன் எதிரிகள் தற்காலிக வெற்றி அடைந்துள்ளார்கள். தன்னைப் போலவே தன் சகாக்கள் காயங்களுடன் தப்பித்திருக்கிறார்கள். மக்கள் பயத்துடன் சிதறி ஓடியிருக்கிறார்கள். தோல்வியை தழுவியிருந்தாலும் அவர்களுக்குள் எத்தனை தன்மானம்... எவ்வளவு வீராவேசம்...! இந்தப் பெண்- தம்மை வீழ்த்த முனைந்த பிசாசுகளுடன் எவ்வளவு தைரியமாய்ப் போராடினாள். ஒருத்தனுக்கு கன்னம் வீங்கியது. இன்னொருவனுக்கு பார்வையே போய்விட்டது. அந்தக் கயவர்கள் பிடியிலிருந்து தப்பி ஓடி... ஓடி... ஓட முடியாது பலவீனமடைந்து... கடைசியில் நடக்கக் கூட சக்தியற்று... பாவம்... கீழே விழுந்ததால் பலமாய் அடிபட்டிருக்கும். அவள் நிலமை எப்படி இருக்கிறதோ? எதுவுமே தெரியவில்லை. கண்ணைக் கட்டி காட்டில் விட்டாற்போலிருக்கிறது. எவ்வளவு சாகசத்துடன் போராடினாள் அந்தப் பெண்! உம்... என் துப்பாக்கியில் தோட்டாக்கள் தீர்ந்துவிட்டன. கை எதற்கும் உதவாததாகி விட்டது. இல்லையென்றால் அந்தப் பாவிகளை....

ஆத்திரத்துடன் பற்களைக் கடித்துக் கொண்டான் ராஜாரெட்டி. மெல்ல கண் திறந்து பார்த்தான். ரங்கம்மா இன்னும் தன் பக்கத்திலேயே உட்கார்ந்திருப்பது மங்கலாய்த் தெரிய மறுபடி கண் மூடி.... சில கணங்கள் கழித்து மீண்டும் திறந்தான்.

"என்னாச்சுப்பா... ஏன் ஒரு மாதிரி இருக்க...?"... ஆமாம்.... ரங்கம்மா இன்னும் அங்குதான் இருக்கிறாள்.

"அம்மா... உனக்கு குழந்தைகள் இருக்காங்களா?"

"இருக்கு..."

"ஆணா, பெண்ணா? எத்தனை பேர்?"

நெஞ்சு படபடவென அடித்துக் கொள்ள ஆவலுடன் பதிலுக்காக அவள் முகம் பார்த்தான் ராஜாரெட்டி.

"ஒரே பொண்ணு..." பொங்கியெழுந்த துக்கத்தை சிரமத்துடன் அடக்கிக் கொண்டாள் ரங்கம்மா. விழிகள் பனிக்க வாசற்பக்கம் பார்த்தபடி பதுமையாய் உட்கார்ந்திருந்தாள்.

"சரி... உன் வேலையைக் கவனிச்சுக்க அம்மா. இதோ எங்காளுங்க வந்துடுவாங்க..."

"என்ன வேலை கொட்டி வச்சிருக்கய்யா. சரி... இருக்குன்னே வச்சுக்குவம். நீங்க நல்லா இருந்தாத்தான் எங்க பொழப்பு நடக்கும். பாட்டன் முப்பாட்டன் காலத்திலேருந்து படற அவஸ்தை இதோடு தீர்ந்துடுமா அய்யா? நீங்க ஜெயிப்பீங்க. என்னிக்காவது ஒருநாள் நீங்கள் ஜெயிப்பது நிச்சயம்! அத எதிர்பார்க்கறத விட்டா எனக்கு வேற வேலை என்ன இருக்கப்பா...?"

நெஞ்சின் அடியினின்று வந்த அந்த சொற்கள் அவனுக்கு ஏராளமான உத்வேகத்தையும் உற்சாகத்தையும் தந்தது.

▫▫▫

ரங்கம்மா இன்னும் வாசற் பக்கமே பார்த்துக் கொண்டிருந்தாள். ஊர் ஜனங்கள் ஒவ்வொருவராய் வந்து கொண்டிருந்தனர். சோகத்தாலும் அவமானத்தாலும் தலை குனிந்தபடி வந்தார்கள். மடிந்து போன குழந்தைகளையும் காயம்பட்டு வீழ்ந்த பிள்ளைகளையும் நினைத்துக் குமுறும் முகங்கள்... நடந்து முடிந்த அதர்மப் போரை நினைத்து ஆவேசத்துடன் பற்கள் நெறித்தபடி சிலர்...

ரங்கம்மா வீட்டு முன் நின்றார்கள் ஜனங்கள், சவத்தைக் கீழே இறக்கினார்கள். அக்கம்பக்கத்து வீட்டாரெல்லாம் சூழ்ந்து கொண்டார்கள். அழுதார்கள். ஒரே எட்டில் தன் மகளின் உடலருகே சென்றாள் ரங்கம்மா. விழுந்தும் எழுந்தும் தள்ளாடியபடி அங்கு சென்றான் ராஜாரெட்டி.

"அந்தப் பொண்ணுதானா இது..?" பேச்சு குழறியது ராஜாரெட்டிக்கு.

"நீங்க இங்கு வரத்துக்கு முன்னதான் நோயாளிப் பெண்ணை படுக்கையிலிருந்து எழுப்பி வெளியே அனுப்பி வச்சா ரங்கம்மா. அதுக்குள்ள பொலிஸ் வந்துட்டது. நெனவு தப்பி விழுந்துட்ட ஒங்களை நல்லா போர்த்திட்டு அவங்க முன்னால அழுதாங்க..."

நடந்ததையெல்லாம் யாரோ சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

"அந்தப் பொண்ணு ரொம்பவும் பலஹீனமா இருந்தது. எங்கேருந்து வந்ததோ அவ்வளவு பலம். ஒரே அடில அந்த நாசகாரப் பாவியின் கன்னம் வீங்கி கண்ல குழி விழுந்துட்டது. மூணாவது தடவையாக அடிக்க கை ஓங்கினப்ப துப்பாக்கி குண்டு பட்டு விழுந்துட்டாங்க..., பாவம்..! ரங்கம்மாவுக்கு எப்படித் தெரியும் தன்னோட மக நெஜமாகவே செத்துட்டான்னு..?"

அவள் வீரப்பிரதாபங்களை ஒருவர் பின் ஒருவராய் போட்டி போட்டுக் கொண்டு சொல்லலானார்கள்.

"நிஜம்மா நீ வீரமாதா தாயி... உன் கடன்..." ராஜாரெட்டியால் தொடர்ந்து பேசமுடியவில்லை. இவ்வளவு நேரமாய் தான் உருவகித்திருந்த... தன் கண்ணில் விடாது நிழலாடிய பெண் ரங்கம்மாவின் மகள்தான் என்று அறிந்ததும் வேதனையும் பெருமிதமும் ஒரு சேர ஏற்பட்டது.

ரங்கம்மா இப்போது அழவில்லை.. அரற்றவில்லை.

(ஜனவரி 1948
'அப்யூதயா'விலிருந்து)

---

# முகங்கள்

## வதிரி-சி. ரவீந்திரன்

அந்த அலுவலகத்தில் பாதுகாப்பு படையினர், ஒவ்வொருவரையும் பரிசோதனை செய்து உள்ளே விட்டுக் கொண்டிருந்தனர். அவர்கள் கியூவரிசைகளில் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு நகர்ந்து கொண்டிருந்தனர். மாநகரசபை பகுதி வரிசையில் நானும் ஊர்ந்து கொண்டிருந்தேன். சிங்களம் தெரியாத சிலரும், எந்தமொழியும் தெரியாதவரும் விண்ணப்பப்படிவங்களை வைத்து பிணைந்து கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. ஒவ்வொருவராக எதிரே அமர்ந்திருந்த பெண் அலுவலர்களிடம் தங்கள் விண்ணப்பப் படிவங்களை கையளித்து, அவர்கள் கொடுக்கும் துண்டைப் பெற்றுச் சென்று கொண்டிருந்தனர்.

"என்ன இது, இப்படியா எழுதுவது? சரியாக எழுதித்தாருங்கோ! உங்கடை பாஷையே உங்களுக்குத் தெரியாது. நாங்கள் மற்றவர்களை ஏன் குறைகூற வேண்டும்?"



என ஒரு சிங்கள அலுவலகப் பெண் தனது பாஷையில் ஏசுகிறாள். எனது தருணம்; நானும் அவளுக்கு எதிரில் விண்ணப்பத்தைப் பார்க்கிறாள். "இந்திராணி இது நம்மட ஆள் பாரும்," என்று சிங்களத்தில் அடுத்த அலுவலரிடம் கொடுக்கிறாள். நான் இந்திராணிக்கெதிரில்; விண்ணப்பத்தைப் பார்க்கிறாள்! "நீங்கள் யாழ்ப்பாணத்தில் எந்த ஊர்?" அவள். நான் "பருத்தித்துறை" என்கிறேன். "நானும் பருத்தித்துறைதான்" அவள், இனிமையானபேச்சு, அலுவல்களை அழகாக சிங்களத்தில் எழுதுகிறாள். விண்ணப்பத்தை பெற்றுக்கொள்வதற்கான துண்டு ஒன்றைத் தருகிறாள். அதனைப் பெற்று வெளியே வருகிறேன்.

அந்தத்துண்டு என்ரை ஜீவநாடி! நான் இல்லாமல் போனாலும், நான் தான் இவர், என்று இந்தத் தேசத்திற்கு என்னை அறிமுகம் செய்யும் பெறுமதிமிக்க காகிதம்! இந்திராணி அழகான பெயர். அமைதியான பேச்சு. அதில் சேவை மனப்பான்மை. இப்படி எல்லா அலுவலகங்களிலும் எம்மவர் இருந்தால் எப்படி இருக்கும் என்று என்னுள் ஒரு பிரமை.

எங்கடை ஆட்கள் அலுவலகங்களில் இருந்தால் ஊர், பெயர், சாதி, சமயம் பார்த்து காரியங்களை இழுத்தடிப்பவர்கள். இப்படிப்பல நடந்தும் இருக்கும். கிடைக்கக் கூடியவை கிடைக்காமல் போனவர்கள் பலர்.

உதாரணத்திற்கு எங்கடை தம்பையா மாஸ்ரரை எடுப்பம். அவர் ஒரு பட்டதாரி. அவர் ஒரு பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியராகவே சேவையாற்றினார். இங்கிலிசிலை விண்ணன். ஆள் விறைச்சவன், தன்னைப் பற்றி எந்த அதிகாரிக்கும் இங்கிலிசிலை முழக்கிவிடுவார். இதனாலை அந்த அதிகாரிகளுக்கு அவரிலை பொறாமையுங்கூட.

அவருக்கு பட்டதாரி சம்பளம் கொடுக்காமல் தடை பண்ணிக் கொண்டிருந்தினம். பென்சனும் போதுகூட அவற்றை சம்பளத்தை சரிப்பண்ணிக் கொடுக்கேல்லை. இதிலை ஒரு பெண் அதிகாரிதான் கூடிய கவனம் எடுத்தது. எங்கடை தமிழ் அதிகாரிகளின் பண்பான சேவைகளில் இவைகளும் அடக்கம். அந்தமனிசன் செத்தும் தெய்வமாய் போச்சுது!

தற்செயலாக ஒருநாள் சனிக்கிழமை மாலை நேரம் கிராண்ட்பாஸ் சந்தியில் கண்டுவிட்டேன்.

"நீங்கள் இந்திராணிதானே?" என்றேன். சற்று தயக்கத்துடன் 'ஓம்' என்று பதிலளித்தா, எத்தனையோ பேரை அடையாளம் காண வேண்டியவர்களுக்கு என்னை உடனே அறிந்திருக்க வாய்ப்பிருக்கவில்லை. நான் விபரங்களைக் கூறியபின் தன்னைச் சுதாகரித்துக் கொண்டா.

நான் கேட்டது "நீங்கள் தமிழா?"

"இல்லை சிங்களம்" அவவின் பதில்.

"எப்படித் தமிழ் தெரியும்?" என் கேள்வி.

"எங்க அப்பா கலால் அதிகாரியாக **(Excise Inspecter)** பருத்தித்துறையில் இருந்தவர். நாங்களும் அங்கு இருந்தோம். நான் **GBS.** பருத்தித்துறையில்தான் 6ம் வகுப்பு வரை படித்தேன். எனக்கு தமிழ் நன்றாகத் தெரியும். எழுத்து-வாசிப்பு இரண்டும்." என்றா.

நான் மௌனியாகிவிட்டேன். அந்த உருவத்தை நோக்கி எனது கரங்கள் வணங்கின. தனது பெயர் இந்திராணி பெரேரா என்று கூறி சென்றுவிட்டா. 'இந்த இந்திராணி அந்தக் கல்வி அலுவலகத்தில் வேலை செய்திருந்தால் தம்பையா மாஸ்ரரின் சம்பளப்பட்டியலை சரிசெய்திருப்பா,' என்று எண்ணினேன்.

தமிழ் அதிகாரிகளால் முடியாததை இந்தப் பெரும்பான்மையினர்தான் பலருக்கு செய்து கொடுக்கிறார்கள், என்பது தமிழ் உயர் அதிகாரிகளுக்கு தெரியாமலும் இல்லை.

இந்திராணியைச் சந்தித்து மூன்று மாதங்களின் பின் இன்னொரு அலுவலகத்தில் எனது பெயர் இருப்பதற்கான சாட்சிப் பத்திரம் பெறச் சென்றேன். சன நடமாட்டமே இல்லை. வாசல் அறையில் தட்டச்சு செய்த வண்ணம் பெண் அலுவலர் இருந்தார். அவர் அருகில் சென்றேன். அவர் சிங்களத்தை மொழி பெயர்த்து தமிழில் தட்டச்சு செய்தவண்ணமிருந்தார். 'இவரும் இந்திராணி போன்றவர்தான்!' மனது மகிழ்ந்தது.

நான் வந்த விடயத்தை சிங்களத்தில் சொன்னேன். அவர் "மூன்று மணிக்கு முதல் வரவேண்டும். அப்போதான் காசு கட்டலாம்!" என்று சிங்களத்தில் பகர்ந்தாள்.

எனக்கு மனது மாறியது. "நாளைக்கு காலை வரலாமோ?" என்று தமிழில் கேட்டேன். "மூன்று மணிக்கு முதல் வரலாம்." என மீண்டும் சிங்களத்தில் பதில் வந்தது.

அடுத்த நாள் பகல் ஒரு மணி தட்டச்சுத் தாரகையிடம் வந்த விபரத்தை கூறினேன். "காசு பெறுபவர் சாப்பிடச் சென்றுவிட்டார். இருங்கள்!" என்று சிங்களத்தில் பவ்வியமாகச் சொன்னாள்.

சிறிது நேரம் கழித்து அந்தச் சிங்கள அலுவலர் வந்து எனது காரியங்களை நிறைவேற்றி,வெள்ளிக்கிழமை சாட்சிப் பத்திர பிரதியைப் பெறும்படி கூற நான் வெளியே வந்தேன். அந்தத் தட்டச்சுக்காரி தட்டிக் கொண்டிருந்தாள்.

வெள்ளிக்கிழமை மூன்று மணிக்கு நான் அந்த அலுவலகம் சென்றபோது அங்கு நிசப்தம் நிலவியது. ஒரு சேவகன் வந்து விடயத்தைக் கேட்டான். நான் கூறியதும் தட்டச்சுத் தாரகையின் அறைக்கே அழைத்துச் சென்று பிரதியை கையில் தந்தான். தட்டச்சுக்கு மேல் தாரகை தமிழ்க் கதை புத்தகம் ஒன்றை வைத்து அதில் லயித்துக் கொண்டிருந்தாள்.

நான் என்னைக் கேட்டேன், 'அந்த இந்திராணி பெரேராவுக்கும் இவளுக்கும் எவ்வளவு வித்தியாசங்கள்?' ●

---

# எத்தனை நாளாக...

ஓஃப்பீஸ் அலாம் ஐந்து முறை அடித்தது.

ஃபைல்களை மூடிவிட்டு ஜன்னலோரமாக வந்தேன். என் பார்வை வெளியே சாலைக்குத் தாவியது.

அவன் வேகமாக வந்து, சற்று ஒதுக்குப் புறமாக நின்ற மரத்து நிழலில் ஸ்கூட்டரை இளைப்பாற விட்டு அவள் வரவை எதிர் பார்த்து நின்றான்.

நான் ஒரு நெடிய பெருமூச்சை வெளியே விட்டு நெஞ்சை ஆற்றிக் கொண்டேன்.

"என்ன, சுந்தரம்! வழக்கமான ஜன்னல் தரிசனமா?" நண்பன் முத்து தோளைத் தொட்டான்.

"ஆமா! அதோ.... அதோ.... வர்றா பாரு அந்த.. அப்சரஸ்...!"

எதிர்க்கட்டடத்திலிருந்து 'ஹேண்ட் பாக்'கை கைகளில் சுழற்றியபடி வந்த அவள், வந்த வேகத்திலேயே ஸ்கூட்டரின் பின்னால் ஏறி அமர்ந்து அவன் தோளைத் தழுவினாள். ஸ்கூட்டர் உற்சாகமாய் உறுமிக் கொண்டு புறப்பட்டுப் போனது.

"அதிர்ஷ்டக்காரன்! ஆமா, இது எவ்வளவு நாளா இப்படி?"

"ரொம்ப நாளாக... இதே நெருக்கத்தில் பல இடங்களில் பார்த்திருக்கிறேன். யாரும் வருவதும் போவதுகூடத் தெரியாமல்



சிற்பி

அத்தனை கொஞ்சல்! போன வாரம் பீச்சில்... லேசான இருட்டில் ஒருத்தர் ஒருத்தர் தழுவிக் கொண்டு நடந்தாங்க... இப்படி பல இடத்தில பார்த்திருக்கேன்...."


"ஆரம்பத்தில நான் பார்த்தப்போ... இப்படி இல்லை. அப்போதெல்லாம் அந்த நேரத்தில அவன் வருவான். அவளைப் பார்த்துச் சிரிப்பான். அவளும் பதிலுக்குச் சிரித்தபடியே தலை கவிழ்ந்தபடியே போய் விடுவாள்."

"ஆமா, இது எவ்வளவு நாளாக இவ்வளவு... நெருக்கம்...?"

"அவங்க கல்யாணத்துக்குப் பிறகுதான்!"



படிப்பகம்



# இலக்கிய நயம்

# யார் இனம்?

## தருவது ரசிகன்

சுந்தர சோழன் படைகள்
பின்வாங்கின!
தந்திரத்தால் பாண்டியன்
சுந்தரனை வென்றான்!

பதுங்கிக் கிடந்த
குறுநில மன்னர்கள்
புன்னகையை பிதுக்கிக்கொண்டு
கொக்கரித்தார்கள்!

"சுந்தரன்
தோற்றுப் போனான்!
நாங்களே
இனிமேல் மன்னர்கள்!"

பாற்கடலினை
பாயவிட்டு
தேன் குடங்களை
உருள விட்டு
பொற்குவியலை
நீங்கள் மேய வைப்போம்!

பாண்டியன்
நல்ல எஜமான்
பாடுங்கள்
அவன் புகழை!
நாங்களும்
அவன் அடிமை!
நம்புங்கள்
எம்மை நீங்கள்!

குனிந்து
நீர் வணங்கிவிட்டால்
குறைவின்றி
வாழ்ந்திடலாம்!

பாண்டியன்
தாள் பணிந்து,
கும்பிட்டு கூத்துமிட்டு
வளைந்தும் கொடுத்துவிட்டால்
வளமாக வாழ்ந்திடலாம்!

பாண்டியன் படைகள்
மோட்சத்தை
திறந்து வைக்கும்!

பாண்டியன் கரங்கள்
சொர்க்கத்தை
திறந்து காட்டும்!

வானுயர் மாளிகைகள்
காணுவோம்
கைதொழுதால்!

கவின்மிகு பூங்காக்கள்
காணுவோம்
கால் பிடித்தால்!

சுதந்திரம்
என்ன கொம்போ?
சொர்க்கமே
கிடைக்கும் என்றால்
அடிமையாய்
வாழ்தல் தப்போ?

வாளினை
நம்ப வேண்டாம்!
பாண்டியன்
தாளினை நம்பிடுவோம்!

வாள் வேண்டாம்
வால் பிடிப்போம்!
தோள் உயர்த்தாதீர்
தாள் பணிவீர்!

குறுநில மன்னர்கள்
வீதிக்கு வீதி
உலா நடத்தி
உபதேசம் செய்தனர்!

அடிமைத்தனத்தை
ஆதரிக்க இத்தனை பேரா?
குனியக் கற்றுத்தர
இத்தனை ஆர்வமா?

மக்கள்
முகம் சுளித்தனர்!

முகச் சுளிப்பையெல்லாம்
அக மகிழ்ச்சி என்று
குறுநில மன்னர்கள்
குதூகலம் அடைந்தனர்!

பாண்டியன் தங்களுக்கு
வீசியெறிந்த
பொற்குவியலில் இருந்து
சிலவற்றை அள்ளி
மக்களிடமும் வீசினர்!

மக்களிடம்
கப்பமாய் பெற்றும்
மக்களிடம் கொடுத்தனர்!

மக்களிடம்
கொள்ளைகள் செய்தும்
மக்களிடம் கொடுத்தனர்!

கரங்களில்
இரத்தக் கறை!
சிரத்தினில்
அடிமைத்தனம்!
முகத்தினில்
பொய்யின் குறி!

இனம் கண்ட
மக்கள்
விழித்துக்கொண்டனர்!

"குறைந்த விலையில்
எங்களை வாங்கி
நிறைந்த விலையில்
எதிரியிடம் விற்க
முற்பணமோ
தருகிறீர்?"

குத்துவாளாய்
கேள்விகள் வீசப்பட,
குறுநில மன்னர்கள்
குறு குறுத்தனர்!

"தங்கத்தில்
கூண்டு செய்து
தருகிறோம் என்றால்,
நம்பிச் சரண்புக
நாம் என்ன மூடரோ?"

மக்களின்
நெற்றிக் கண்
திறந்து கொண்டது!

"எங்கள்
நெற்றிக் கண்
நக்கீரர்களை எரிக்காது!
நக்கிக் கிடப்போரையே
எரிக்கும்!"

மக்களின்
ஆவேசம் எழுந்தது!

"தங்கத்தில் விலங்கு
தந்து- அது நல்ல
தரமென்று உரைத்தால்
அதனை நம்ப
ஜடமோ நாங்கள்?"

சிறு பொறியாய்
கிளர்ந்து
காட்டுத் தீயாக
வளர்ந்தது
மக்களின் கோபம்!

வெப்பம் தாங்காமல்
மிரளத் தொடங்கினர்
குறுநில மன்னர்கள்!

"நாங்களும்
உங்கள் சுற்றம்!
நாங்களும்
உங்கள் சொந்தம்!
நாங்களும்
உங்கள் பக்கம்!"

நாகூசாமல்
பொய்யுரைத்தனர்!

பொய்யினால்
வெகுண்ட மக்கள்
பொங்கினர்
புரட்டி எடுத்தனர்!

புழுதியில் புரண்டு
புழுவென நெளிந்து
மன்றாடினர்
குறுநில மன்னர்கள்.

"மக்களே!
மன்னிப்பீர் எம்மை!
மாய்த்திடாதீர் எம்மை!
பேய்த்தனம்
செய்துவிட்டோம்!
மக்களே பொறுத்தருள்க!
உம் இனம் நாம்
நாம் ஒரே இனம்!
வாழ்க நம் இனம்!"

கூவினர்
குறுநில மன்னர்!

வெஞ்சினம்
கொண்ட மக்கள்
சினத்துடனும் நகைத்தனர்

"யார் இனம்
நீவிர் யார் இனம்?
யார் இனத்துடனும்
சேராத தனி இனம்
நீவிர் தனி இனம்?"
என்று உரைத்தனர் மக்கள்.

"தனி இனமா?
அது என்ன இனம்?"
கூனிக் கேட்டனர்.

"ஆம்
மக்கள் இனத்தில்
கடை இனம்!
அதன் பெயர்
சிற்றினம்!

மதியிலும்
தூய்மை இல்லை.
மனதிலும்
தூய்மை இல்லை!
அதன் பெயர்
சிற்றினம்!

தனக்கென வாழும்
தன்னலம் போற்றும்
பொதுநலம் மாய்க்கும்
அதன் பெயர்
சிற்றினம்!

வஞ்சனைவீசும்
பொய்மிலே புரளும்
புரட்டும் செய்யும்
முதுகிலே குத்தும்
புறம் கூறும்
அறம் மறக்கும்
அதன் பெயர்
சிற்றினம்!

உலகிலே
இரண்டு இனம்!
ஒன்று
நல் இனம்!
இன்னொன்று
சிற்றினம்!

நல் இனத்துணை
வராது வந்த மாமணி!
சிற்றினத்துணை
கூடவே இருக்கும் மா பகை?"

மக்கள்
உரத்து உரைத்தனர்.
குறுநில மன்னர்கள்
மாயமாய் மறைந்தனர்.

சிற்றினம் பற்றிய
திருக்குறள் இதோ:

"நல்லினத்தி னூங்குந் துணையில்லை
தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉம் இல்."

குறள்:- 460, அதிகாரம்:- 46

---

ஸ்போர்ட்ஸ்

# கப்டன்களின் சாதனைகள்

இந்திய கிரிக்கெட் அணி ஒருநாள் போட்டிகளில் விளையாடத் தொடங்கிய பின்னர் இதுவரை 330க்கும் மேற்பட்ட போட்டிகளில் விளையாடியுள்ளது. இப்போது இந்திய அணிக்கு கப்டனாக இருக்கும் முகமட் அஸாருதீன் இந்தியாவின் 13வது கப்டன் ஆகும்.

ஒரு நாள் போட்டிகளில் இந்திய அணிக்கு அதிக தடவைகள் தலைமை தாங்கியவராக அஸாருதீன் இருக்கிறார். இவர் அண்மையில் முடிவடைந்திருக்கும் பங்களாதேஷ் சுதந்திரக் கிண்ணப் போட்டிகள் வரை 124 போட்டிகளுக்குத் தலைமை தாங்கியிருக்கிறார்.

ஒரு நாள் போட்டிகளில் அஸாருதீன் தலைமையில்தான் இந்திய அணி அதிக வெற்றிகளைப் பெற்றுள்ளது.

ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளுக்கு இந்திய அணியில் அஸாருதீன் தவிர, 12 பேர் தலைமை தாங்கியுள்ளனர். இதோ அவர்களின் விபரம்:

கபில்தேவ், டெண்டுல்கர், கவாஸ்கர், வெங்சர்கார், ஸ்ரீகாந்த், ரவிசாஸ்திரி, வெங்கட்ராகவன், பிஷன் சிங் பேடி, அஜித் வடேகர், ஜி.ஆர்.விஸ்வநாத், சையட் கிர்மானி, மொஹிந்தர் அமர்நாத். இந்திய அணியில் ஒருநாள் போட்டிகளுககுத் தலைமை வகித்தவர்களும் அவர்கள் பெற்ற வெற்றி-தோல்விகள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு:

| கப்டன் | போட்டிகள் | வெற்றி | தோல்வி | சமன் | முடிவில்லாதது |
|---|---|---|---|---|---|
| 1. முகமட் அஸாருதீன் | 124 | 64 | 55 | 2 | 3 |
| 2. கபில்தேவ் | 74 | 39 | 33 | - | 2 |
| 3. சச்சின் டெண்டுல்கர் | 54 | 17 | 31 | 1 | 5 |
| 4. சுனில் கவாஸ்கர் | 37 | 14 | 21 | - | 2 |
| 5. திலீப் வெங்சர்கார் | 18 | 8 | 10 | - | - |
| 6. கே. ஸ்ரீகாந்த் | 13 | 4 | 8 | - | 1 |
| 7. ரவி சாஸ்திரி | 11 | 4 | 7 | - | - |
| 8. வெங்கட் ராகவன் | 7 | 1 | 6 | - | - |
| 9. பிஷன் சிங் பேடி | 4 | 1 | 3 | - | - |
| 10. அஜித் வடேகர் | 2 | - | 2 | - | - |
| 11. ஜி. ஆர். விஸ்வநாத் | 1 | - | 1 | - | - |
| 12. சையட் கிர்மானி | 1 | - | 1 | - | - |
| 13. மொஹிந்தர் அமர்நாத் | 1 | - | 1 | - | - |

## ரன் அவுட் ராசி

சர்வதேச ஒரு நாள் போட்டிகளில் அதிக தடவைகள் ரன்-அவுட் முறையில் ஆட்டமிழந்தவர்கள் பற்றிய விபரம் வருமாறு:

| வீரர் | அணி | போட்டிகள் | ஆட்டமிழப்பு | ரன்-அவுட் |
|---|---|---|---|---|
| 1. அலன் போடர் | அவுஸ்திரேலியா | 273 | 213 | 28 |
| 2. அசங்க குருசிங்க | இலங்கை | 147 | 138 | 27 |
| 3. முகமட் அஸாருதீன் | இந்தியா | 265 | 199 | 27 |
| 4. வாஸிம் அக்ரம் | பாகிஸ்தான் | 238 | 152 | 25 |
| 5. அர்ஜுன ரணதுங்க | இலங்கை | 225 | 170 | 25 |
| 6. ஜாவெட் மியான்டாட் | பாகிஸ்தான் | 233 | 177 | 24 |
| 7. இன்ஸமாம்-உல்-ஹக் | பாகிஸ்தான் | 151 | 123 | 24 |

## இவர் தான் அவர்



நீச்சலில் உலக சாதனை படைத்த குற்றாலீஸ்வரன். (இடமிருந்து வலமாக நாலாவதாக இருக்கிறார்.)

## டைசன் நடுவர்

பிரபல குத்துச் சண்டைவீரர் மைக் டைசன் ஒரு போட்டியின்போது தம்மை எதிர்த்து மோதிய இவாண்டர் ஹோலிஃபீல்டின் காதைக் கடித்துத் துப்பினார். இதனால் விதிமுறைகளை மீறினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு, மைக் டைசனுக்கு குத்துச் சண்டைப் போட்டிகளில் பங்கேற்க தடைவிதிக்கப்பட்டது.

இந்நிலையில், டைசன் குத்துச் சண்டைப் போட்டியொன்றுக்கு நடுவராக பணியாற்ற உள்ளார். 'ரெசில்மேனியா 14' என்ற குத்துச்சண்டைப் போட்டி, வரும் மார்ச் மாதம் 29ம் திகதி அமெரிக்காவிலுள்ள பொஸ்டன் நகரில் நடைபெறவுள்ளது. இப்போட்டிக் குத்தான் டைசன் நடுவராகப் பணியாற்றவுள்ளார்.

---

# சிந்தியா பதில்கள்

**★ 'யுத்தமா? சமாதானமா?' என்று எல்லைப்புற கிராமங்களில் கருத்துக் கணிப்பு நடக்க உள்ளதாமே?**

செ. ஜெகதீஸ்வரன், மட்டக்களப்பு.

அரசியல் தீர்வைத் தள்ளிப்போட்டுக் கொண்டே இருக்க வேண்டுமானால், இவ்வாறான பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் அவசியம்தானே!

**★ யாழ் நூலகத் திறப்பு விழா பற்றி என்ன நினைக்கிறீர்?**

பி. பத்மா, கொழும்பு-06.

யாழ் நூலகத்தை புனரமைக்கப்போவதாகக் கூறிக்கொண்டே இருந்த காலத்தில், நிரந்தரமான கட்டடமே கட்டி முடித்திருக்கலாம். இன்னொன்று: சென்ற ஆட்சியில் எரிந்ததை இந்த ஆட்சியில் திருத்துகிறார்கள். இந்த ஆட்சியில் இடிந்ததை திருத்த இன்னொரு ஆட்சி வரவேண்டும். ஆக, ஆட்சிமாற்றம் அடிக்கடி ஏற்பட்டால்தான் தற்காலிக கட்டடங்களாயினும் கிடைக்கும் போலிருக்கிறது.

**★ கூட்டணியின் வேட்பு மனுவை நீதிமன்றம் ஏற்கச் சொல்லிவிட்டதே. குழந்தை வேட்பாளர் என்ன ஆனார்?**

மா. நவரத்தினம், வவுனியா.

அவர் தகுதியானவர் என்று நீதிமன்றம் கூறவில்லையே! ஒருவர் தகுதியில்லை என்பதற்காக வேட்பு மனுவில் உள்ள அத்தனை பேரும் 'அவுட்' என்று அர்த்தமாகாது என்பதுதான் தீர்ப்பின் அடிப்படை!

**★ யாழ்ப்பாணத்தில் உள்ள மக்களின் உடனடிப் பிரச்சனைகளை உள்ளூராட்சி சபை நிர்வாகங்கள் மூலமாக தீர்த்துவைக்க முடியாதா?**

வி. இளவழகன், திருமலை.

மருந்தின்றி இயங்கும் யாழ் மருத்துவமனை, தொழிலின்றி வாடும் மக்கள், தைரியமாக தொழில் செய்ய முடியாத மீனவர்கள்....! இவ்வாறு பல துயர்களை மக்கள் சுமக்கின்றனர். இவை போன்ற பிரச்சனைகள்தான் உண்மையான உடனடிப் பிரச்சனைகள். இவற்றைத் தீர்க்க உள்ளூராட்சிச் சபைகளால் முடியாது.

**★ பெப்ரவரி 4ம் திகதிக்கு முன்பாக யாழ் தரைப்பாதை திறக்கப்பட்டுவிடுமா?**

என். மன்சூர், கொழும்பு-11.

பட்டுவிடாது!

**★ யாழ்ப்பாண உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றி பெறப்போகும் வேட்பாளர்களுக்கு தாங்கள் கூறும் செய்தி என்ன?**

பி. நிர்மலன், யாழ்ப்பாணம்.

அனுதாபச் செய்திதான்!

**★ சோனியாவின் பிரசாரத்தால் காங்கிரஸ் கட்சியின் கை ஓங்குமா?**

அ. விவேகானந்தன், மட்டக்களப்பு.

ஓங்காது; கட்சிக்குள் சோனியாவின் கை வேண்டுமானால் ஓங்கும்! மரணப்படுக்கையில் வீழ்ந்த காங்கிரசுக்கு சோனியா ஒட்சிசன் கொடுத்திருக்கிறார்; அவ்வளவுதான்! எழுந்து, ஓடியாடித்திரிய இம்முறை வாய்ப்பில்லை!

**★ நம் நாட்டில் ஆளும் கட்சி எதிர்க்கட்சி இடையேயான பிணக்குத் தீராதா?**

எம். நிசாந்தன், கொழும்பு-10.

எமதர்மன் சித்ரகுப்தனிடம்: "இனிமேல் சாகிறவர்களின் நாக்கை மட்டும் தனியாக அறுத்துக்கொண்டு வந்துவிடு!" என்று சொன்னான்.

அதுபோல சுமார் ஆயிரம் நாக்குகளை அவன் அறுத்துக்கொண்டு வந்தான்.

அறுத்த பின்னாலும் சில நாக்குகள் துடித்துக்கொண்டு கிடந்தன. பல நாக்குகள் மரத்துப்போய் இருகூறாகப் பிளந்து கிடந்தன.

"மரத்துப்போய் இரட்டையாகக் கிடக்கும் நாக்குகள் யாருடையவை?" என்று கேட்டான் எமதர்மன்.

"இரட்டையாகக் கிடக்கும் நாக்குகள் எல்லாம் ஆளும் கட்சிக்காரர்களின் நாக்குகள்! துடித்துக்கொண்டிருக்கும் நாக்குகள் எல்லாம் எதிர்க்கட்சிக்காரர்களின் நாக்குகள் பிரபு!" என்றான் சித்ரகுப்தன்.

"ஒரு உணர்ச்சியுமில்லாத மற்ற நாக்குகள் யாருடையவை?" என்று கேட்டான் எமன்.

"அந்தக் கட்சிகளுக்கு வாக்குப் போட்டவர்களுடைய நாக்குகள்!" என்றான் சித்ரகுப்தன்.

**★ ஐ.தே. கட்சியின் மாற்று யோசனை எப்படி இருக்கும்?**

தி. சிவசங்கர், கம்பளை.

குட்டையை மேலும் குழப்புவதாக!

**★ சிந்தியா! நூறு வயதுவரை வாழ என்ன செய்ய வேண்டும்?**

மா. தம்பிராசா, கண்டி.

இதே கேள்வியை ஜோன் ஸ்மித் என்பவரிடம் கேட்டார்கள். அவர் கலிபோர்னியாக்காரர். நூறுவயது ஆசாமி. அவர் சொன்ன பதில்:

"நான் மது அருந்துவது இல்லை. பெண்களிடம் ஈடுபாடு காட்டுவதில்லை. அதனால் இருக்கலாம்!" என்றார்.

அந்தச் சமயம் பார்த்து பக்கத்து அறையில் ஒரே சத்தம். பொருட்கள் உருளும் சத்தம்.

"அங்கே என்ன பிரச்சனை?" என்று நூறுவயது ஆசாமியிடம் கேட்டனர்.

அவர் மிக அமைதியாகச் சொன்னார்: "ஒன்றுமில்லை, என் அப்பாவின் அறை அது. அவரது காதலியை துரத்திக் கொண்டிருப்பார். அந்தச் சத்தமாக இருக்கும்."



**★ நடிகை விஜயசாந்தி யார் பக்கம் நிற்கிறார்?**

செல்வி கா. அம்பிகா, கொழும்பு-06.

பாரதிய ஜனதாவின் பக்கம்!

**★ டியர் சிந்தியா! இந்திய அணி பங்களாதேஷில் தூள் கிளப்பிவிட்டதே, பார்த்தீரா?**

தா. ஜெயந்தன், கொழும்பு-13.

பார்க்கவில்லை, கேள்விப்பட்டேன். சொரணை வந்துவிட்டது போலிருக்கிறது. எதற்கும், அவசரப்பட்டு பாராட்டித் தொலைக்காதீர்கள்! போதும் என்று சுருண்டு போவார்கள்!

**★ சிந்தியா! எதிர்பாராத செய்தி என்றால் எப்படி இருக்க வேண்டும்?**

ஆர். காண்டீபன், பதுளை.

இங்கிலாந்தின் பத்திரிகை ஒன்றில் பல ஆண்டுகாலம் விடுமுறை எடுக்காமல் நிருபர் ஒருவர் வேலை பார்த்தார்.

அவருக்கு ஒரு வருடம் விடுமுறை கொடுக்கப்பட்டது. மத்திய தரைக்கடல் தீவு ஒன்றில் அமைதியாக அவரை ஓய்வு எடுத்துக்கொள்ளச் சொன்னார்கள்.

அந்த சமயம் அந்தத் தீவில் திடீரென்று பெரிய பூகம்பம் ஒன்று நிகழ்ந்தது. பொருட்கள் நாசமாயின. பலர் மாண்டனர்.

இலண்டனில் அந்தப் பத்திரிகை ஆசிரியருக்கு ஒரே பரபரப்பு.

வேறு யாருக்கும் கிடைக்காத செய்தியை தமது நிருபர் நேரடியாகத் திரட்டி அனுப்பப் போகிறார், என்று ஆவலோடு காத்திருந்தார்.

கடைசியாக அந்த நிருபரிடம் இருந்து இப்படி ஒரு தந்தி வந்தது:

"கவலைப்படவேண்டாம். பத்திரமாக இருக்கிறேன்!"

**★ இன்றைய நடிகைகளில் அழகானவர் யார்?**

ஏ. லோகேஸ்வரி, கந்தப்பளை.

மேக்-அப் மேனிடம்தான் கேட்டுச் சொல்ல வேண்டும்!



படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 118

இராமபிரான், சீதாப்பிராட்டியார், இளைய பெருமாளாகிய இலக்குவன் முதலானோருடனும், இலங்கை வேந்தன் விபீடணர், கிட்கிந்தைக்கு அதிபதி- வானரரின் தலைவன் சுக்கிரீவன், வாலிமகன் அங்கதன், கைமாறு கருதாது இராமபிரானின் பிரதம சீடனாகி- இராமதாசனாகிவிட்ட அனுமன், கரடி குலத்தரசன் ஜாம்பவன் மற்றும் வாரன சேனைத் தளபதிகள் ஆகியோருடனும் புட்பக விமானத்தில் வந்து நந்திக்கிராமத்தில் தரையிறங்கினார்.

விமானம் தரை இறங்கும் அத்தருணத்

## பிரிந்தவர் கூடினர்!

தில் பரதன், தனக்கு இராமபிரான் வருகையை அறிவித்தமைக்காகவும் அண்ணலின் கணையாழியை அடையாளமாகத் தந்தமைக்காகவும் நன்றி பாராட்டும் பொருட்டு ஆஞ்சநேயரின் இருகைகளையும் தன் கைகளால் இறுகப் பற்றியிருந்தார். பதினான்கு ஆண்டுகள் தன்னைப்பற்றியிருந்த பெரும் கவலையானது, கதிரவனைக்கண்ட பனி போல் உருகியதைப் போன்று, தென்திசையிலிருந்து வந்திறங்கிய விமானத்தைப் பார்த்ததும், பரதன் மகிழ்ச்சியெனும் பெரும் கடலில் குதித்தான். அனுமனைப் பற்றியிருந்த கைகளை நெகிழ விட்டு தன் இரு கைகளையும் சிரசின் மீது குவித்தான்.

அந்தக் கணத்தில் பரதனின் நிலை எவ்வாறிருந்தது என்பதனை புலவரேறு கம்ப நாட்டாழ்வார் இவ்வாறு சித்தரித்துக் காட்டுக்கிறார்:

**கெட்ட வான் பொருள் வந்து கிடைப்ப முன்பு தாம்**
**பட்ட வான் படர் ஒழிந்தவனின் பையுள்**
**நோய்**
**சுட்டவன் மானவன் தொழுத லுன்னியே**
**விட்டனன் மாருதி கரத்தை மேன்மையான்.**

(யுத்த காண்டம்)

பொருள்:

எப்போதோ இழந்த ஒரு அருமையான பொருளானது மீண்டும் கிடைக்கப் பெற்றால் பெரும் இன்பம் ஏற்படும். இழந்த பொருளுக்காகப் பட்ட துரயம் அத்தனையும் நீங்கிவிடும். பெரும் பண்பாளனான பரதன், இதுகால வரை தனது அன்புக்குரிய அண்ணனைப் பிரிந்தமையினால் பட்ட துன்பங்களனைத்தும் இராமபிரான் வருகையினால் நீங்கப்பெற்றான். இராமபிரானை வணங்குதற்பொருட்டு- அதுவரைப் பிடித்திருந்த ஆஞ்சநேயரின் கைகளை நழுவவிட்டான்.

### அனர்த்தங்கள் தளர்ந்தன

பதினான்கு ஆண்டுகளுக்கு முன்னர், தனது தாயார் கைகேயியின் சூழ்ச்சியினால் இராமபிரான் கானகம் ஏகியதைக் கண்டு உயிர் நீத்த தனது தந்தையாரான தசரதச் சக்கரவர்த்தியே மீண்டும் உயிர் பெற்று வந்தால் எத்தகைய மகிழ்ச்சியடையக் கூடுமோ அத்தனை பெருமகிழ்ச்சியடைந்தான் பரதன்.

அனுமனும் இராமபிரானை அணுகி, "அண்ணலே! சரியான நேரத்தில் வந்து சேர்ந்தீர்கள். தாங்கள் பணித்தபடி நான் இங்கு வந்து சேர்ந்தபோது பெரும் தீ மூட்டப்பட்டிருந்தது. நான் சில விநாடிகள் தாமதித்திருந்தாலும் பரதன் தீக்கு இரையாகி இருப்பார். தாங்கள் வந்து கொண்டிருப்பதாகக் கூறியபோதும் என் கருத்தைத் தங்கள் தம்பி கேட்கச் சித்தமாயில்லை. தங்களுடைய அடையாளமான மோதிரத்தைப் பெற்றுக் கொண்டதும் ஓரளவு சாந்தியடைந்தார்.

இருப்பினும் பரதனுடைய சந்தேகம் முற்றுமுழுதாக நீங்கவில்லை. தங்களுடன் வானரப் படைவீரர்களும் அசுரப் பிரமுகர்களும் வருவதாகக் கூறினேன். அவ்வாறு வானரப்படை வீரர்கள் பெருந்தொகையினராக வருவராயின், அவர்கள் அலைகடல் போல் பேரொலி எழுப்புவார்களே, என்று வினா எழுப்பினார். 'சோலை வனங்களில் தாளமாகக் காய்த்துக் குலுங்கும் கனிவர்க்கங்களைப் பறித்து உண்டு மகிழ்வதில் மூழ்கிக் கிடப்பார்கள் என்பதனால் அவர்கள் ஒலி எழுப்ப முடியவில்லை,' என்று கூறி வைத்தேன். மேலும் மேலும் பரதனின் சந்தேகம் வலுவடைந்த வண்ணமே இருந்தது. எனது கைகளாலேயே எரியும் நெருப்பைக் நீக்கி அணைத்தேன். இத்தனைக்கும் பின்னரே புட்பக விமானம் வரும் ஒலியும் வாழ்த்தொலிகளும் கேட்கத் தொடங்கின. தங்களுடைய ஒளிபொருந்திய முகத்திலிருந்து வீசிய கதிரொளி காணப்பெற்றதுமே, பரதன் என் கூற்றிலுள்ள உண்மையை ஒப்புக்கொண்டார். தங்கள் வரவு தாமதமாகியிருந்தால் தீயிடம் பரதன் சரணடைந்திருப்பார். தொடர்ந்து சத்துருக்கனும் தீயில் குதித்திருப்பார்.

தங்களுடைய ஆணையை நிறைவேற்றும் ஆற்றலிழந்தவனாகிய நானும்கூட இந்தத் தீக்குண்டத்தில் பொசுங்கியிருப்பேன்! தாங்கள் சரியான தருணத்தில் வந்து, தங்கள் தம்பிமாரையும் என்னையும் காத்தீர்கள். இல்லாவிட்டால் இவ்வனர்த்தங்களைக் கண்ணுறும் அயோத்தி மாநகரின் பெரும்பாலானோரும் அந்த நிமிடத்திலேயே உயிர் நீத்திருப்பர்!" என்று கூறிய ஆஞ்சநேயர் இராமபிரானின் முன் அட்டாங்கமாக விழுந்து தாள் தொட்டு வணங்கி நின்றார்.

இராமபிரான், அனுமனைத் தூக்கி அணைத்து மார்புறத் தழுவிக் கொண்டார். அனுமன் சிறு குழந்தையைப் போல் தேம்பித்



தேம்பி அழலானார். அவருடைய கண்களிலிருந்து பிரவகித்தோடிய கண்ணீரைத் தன் கைகளாலேயே துடைத்தெடுத்தார் இராமபிரான்.

பரதனும், அவனைத் தொடர்ந்து ஆஞ்சநேயரும், அயோத்தி அரசின் மந்திரிப் பிரதானிகளும் இராமபிரான், சீதாப்பிராட்டியார், இலக்குவன் ஆகியோரை பயபக்தியுடன் வலம் வந்தனர். திரண்டு நின்ற பெரு வெள்ளம் போன்ற அயோத்தி மக்கள் முண்டியடித்துக் கொண்டு முன்னேறிவந்து இராமபிரானைத் தொழுதெழ ஆர்வப்பட்டமையினால், பெரும் பிரளய காலத்தில் பெரும் கடல் கொந்தளிப்பது போன்ற நிலை ஏற்பட்டது. இராமபிரான் தனது இரு கைகளையும் மேலே உயர்த்தி அமைதி காக்கும்படி சைகையால் கேட்டுக்கொண்டார். அனைவரும் ஒரே நொடியில்- அவரவர் நின்றிருந்த இடங்களில்- ஆடாமல் அசையாமல் நின்றனர்.

### தாயைக் கண்ட தனயன்

இராமபிரான் தனது கண்களைச் சுழல விட்டார். அப்போது அயோத்தியின் பிரதம அமைச்சரான சுமந்திரனைக் கண்டார். அவர் அருகே, அவரை ஈன்றெடுத்த அன்னை கோசலாதேவியார் நிற்பதைக் கண்டு கொண்டார். பசியோடு- தன் தாய்ப்பசுவிடம் தாவி ஓடும் கன்றைப்போல, இராமபிரான், கூட்டத்தை விலக்கிக் கொண்டு முன்னோடினார். ஆஞ்சநேயர் இராமபிரானுக்கு முன்னால் சென்று அலைமோதிய மக்கள் கடலிடையே இடம்பிடித்துக் கொடுத்தார். அன்னையை அணுகிச் சென்று அவரடி தொழுதார். பல்லாண்டு காலம் பிரிந்திருந்த தன் செல்வப் புதல்வனை தாய் கோசலாதேவி வாரி எடுத்து அணைத்த வண்ணம் முத்தமாரி பொழிந்தார்.

கோசலைத் தாயின் அருகை நாடி இலக்குமணன் மற்றும் சத்துருக்கன் ஆகியோரின் தாயாரான சுமத்திரை வந்து கொண்டிருந்தார். இராமபிரான் சுமத்திரா தேவியையும் ஓடிச்சென்று அடி தொழுதெழுந்தார். இராமபிரானைத் தொடர்ந்து சீதாப்பிராட்டியார் தனது மாமிமார் இருவரையும் அடிதொழுதெழுந்தார். இலக்குவனும் தனது அண்ணனையும் அண்ணியையும் பின்பற்றி அன்னையரைத் தொழுதார்.

### தயங்கி நின்ற தாயொருத்தி

இரு தாய்மார்களையும் வணங்கிய இராமபிரானின் கண்கள் மேலும் ஒருவரை ஆவலுடன் தேடி அலைந்தன. தனது தனயனின் நோக்கைக் குறிப்பால் அறிந்த கோசலா தேவியார், கூட்டத்தை விலக்கிச் சென்று, தன் முகத்தை யாரிடமும் வெளிக்காட்டத் தயங்கி நின்றிருந்த ஒரு பெண்ணைத் தன் இரு கைகளாலும் கட்டி அணைத்தவாறு இழுத்து வந்தார். அவரைக் கண்டதும் இராமபிரான், அதுவரை இருந்த நிலையினையும் விட உணர்ச்சி வசப்பட்டார். என்ன நடைபெறப்போகிறதோ, என்று அங்கு சூழ்ந்து நின்றவர்கள் ஆவலுடன் பார்த்திருந்தனர். இராமபிரான் மிக வேகமாக ஓடிச்சென்று அந்த மாதின் தாளில் வீழ்ந்து, "தாயே!.... தாயே!" என்று தேம்பித் தேம்பி அழலானார். அவருடைய வாயிலிருந்து வேறு வார்த்தைகள் வரமறுத்தன. தன்னை மறைத்திருந்த முக்காடு தானாகவே நீங்க, கைகேயி, கதறி அழுதார். இதனைக் கண்ட பரதனின் முகம் கடுகடுப்பானது. அந்த இடத்துக்கு ஓடிச் சென்று தனது தாயாரையும் தமையனையும் பிரிக்க முயன்றார். அப்போது இராமபிரான், "தம்பி பரதா! இந்த அன்னை யாரால்தான் பெறற்கரிய பெரும்பேறுகளைப் பெற்றேன். நான் மனிதனாகப் பிறந்ததற்கான பெரும் பயனை இந்தத் தெய்வத்தின் அனுக்கிரகத்தால்தான் பெற்றேன். பரதா! இந்தத் தாயாரினால்தான் இன்று உலகம் உன்னைப் போற்றுகிறது. இந்த உலகம் உள்ளவரை உன் புகழ் நிலைத்திருக்க இந்த அன்னையே காரணகர்த்தா என்பதை மறந்துவிடாதே!" என்று கடிந்து கொண்டதுடன் மட்டுமல்லாமல், பரதனைத் தன் தாயின் அடிபணிந்து வணங்குமாறு பணித்தார். கைகேயி இராமபிரானைத் தன் வலது புறமும் பரதனைத் தன் இடது புறமும் அணைத்துக் கொண்டார்.

இதே இடத்தை வந்தடைந்த சீதாப் பிராட்டியாரும் இலக்குவனும் கைகேயியைத் தாள்தொட்டு வணங்கினர். சீதாப்பிராட்டியாரைக் கண்டதும் கைகேயியின் உடலெல்லாம் நடுங்கத் தொடங்கியது. பீறிட்டு வந்த அழுகையை அவரால் அடக்கமுடியவில்லை. சீதாப்பிராட்டியார் கைகேயியின் கண்ணீரைத் தனது சேலைத் தலைப்பால் துடைத்துவிட்டார்.

'பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ!' என்ற முதுரைக்கேற்ப, இதுவரை பிரிவுத்துயரால் துன்புற்றிருந்த அனைவரும் பெரு மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கித் தத்தளித்தனர்.

இதற்கிடையில் வசிட்டமாமுனிவர் அங்கு வந்து சேர்ந்தார். அவரைக் கண்டதும் இராமபிரான் ஓடிச்சென்று முனிபுங்கவரின் பாதங்களில் தனது சிரசு படும்படியாக வீழ்ந்து வணங்கினார். முனிவரும் இராமபிரானைத் தூக்கி நிறுத்தினார். இராமபிரான் தன்னுடன் வந்திருந்த இலங்கை வளநாட்டதிபன் விபீடணர் முதல் ஏனையோரையும் அங்கு நின்ற சகலருக்கும் அறிமுகம் செய்து வைத்தார். ஆஞ்சநேயரை அயோத்தி வாசிகளுக்கு அறிமுகம் செய்து வைக்கும்போது, "பேரறிவாளனும், பண்பில் சிறந்தவனும், மாபெரும் வீரனும், எடுத்த எக்கடமையையும் எவ்வாறாயினும் பிழையற முடிக்கும் ஆற்றல் மிக்கவனுமான வாயுபுத்திரன்- அனுமன், ஆஞ்சநேயன் ஆகிய மாருதி என்றென்றும் என் உள்ளத்தில் நிறைந்து சிரஞ்சீவியானவன்!" என்று உணர்ச்சிப் பெருக்கோடு கூறினார்.

(தொடர்ந்து வரும்)

இராஜகுமாரன்

### இராமாயணப் போட்டி: 116

**சரியானவிடை:- குபேரனுக்குச் சொந்தமானது.**

1. ஏ.ஜே. இஹ்ஷானா, நாச்சியா தீவு, அகதி முகாம், அநுராதபுரம்.
2. என். திபோஜினி, நற்பிட்டிமுனை-6, கல்முனை.
3. எம்.எம். தன்சீல், தக்வா நகர், 1ம் வட்டாரம், புல்மோட்டை.
4. செல்வி ரி. முனீஃபா, 49,எலமல்தெனியா, முறத்தககாகமுல்ல.
5. எஸ். சிறிபிரியா, 28, ஏ. பள்ளிவாசல் வீதி, நீர்கொழும்பு.

**போட்டி இல. 118** கேள்வி:- பரதன் தவக்கோலம் பூண்டிருந்த இடத்தின் பெயர் யாது?

ஜனவரி 31 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி-இல.118, தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.**

## பாட்டும் பதிலும்



யாழ் தேர்தலை முன்னிட்டு தமிழ்க் கட்சிகள் சினிமாப் பாடல்களை தங்கள் பிரசாரப் பாடல்களாக்கியுள்ளன. பாடல்களை செவிமடுக்கும் திருவாளர் பொது ஜனம் என்ன நினைப்பார்?

பாடல்: இப்படை தோற்கின்
எப்படை வெல்லும்?

**பொ.ஜனம்: இதற்கு பதில் சொன்னால் நாங்கள் காணாமல் போய்விடுவோம். நீங்கள் எங்களைத் தேடுவதாக கூறிக் கொண்டு வாக்குத் தேடுவீர்கள், இது தேவைதானா?!**

பாடல்: வெற்றியை நாளை
சரித்திரம் சொல்லும்!

**பொ.ஜ: யாருடைய வெற்றியை? ஹி.ஹி.ஹி.**

பாடல்: நெஞ்சம் உண்டு நேர்மை உண்டு
ஓடு ராஜா!

**பொ.ஜ: ராஜாக்களுக்கு சொல்லலாம். கூஜாக்களுக்கு?**

பாடல்: வெற்றி மீது வெற்றி வந்து
என்னைச் சேரும்-அதை
வாங்கித் தந்த பெருமையெல்லாம்
உன்னைச் சேரும்.

**பொ.ஜ: படையினரைப் பாராட்டுகிறீர்களா? அம்மையாரைப் பாராட்டுகிறீர்களா? என்று சொல்லி விட்டுப் பாடலாமே.**

பாடல்: ஏமாற்றாதே, ஏமாற்றாதே
ஏமாறாதே, ஏமாறாதே.

**பொ.ஜ: யார் யார் எந்த பாட்டைப் பயன்படுத்துவது என்று விவஸ்தையே இல்லையா?! நியாயமாக, இது நாங்கள் உங்களைப் பார்த்து பாடவேண்டிய பாடல்!**

பாடல்: வெற்றி நிச்சயம்
வெற்றி நிச்சயம்

**பொ.ஜ: யாருக்கு? அம்மையாருக்கும், அரசாங்கத்திற்கும்தானே!**

பாடல்: ஒரு தாய் மக்கள் நாமென்போம்
ஒன்றே எங்கள் குலமென்போம்!

**பொ.ஜ: கட்சிகள் நீங்கள் மட்டும் பல தாய் மக்களாக்கும்?!**


பாடல்: ஒண்ணாய் இருக்கக் கத்துக்கணும்
இந்த உண்மையைச் சொன்னா
ஒத்துக்கணும்!

**பொ.ஜ: குட்! வெரி குட்!! எப்ப கத்துக்கப் போறீங்க? போங்கப்பா, போய் கத்துக் கிட்ட பின்னாடி வந்து, வாக்குக்கு கையேந்துங்க!**

## தப்பிக்கொள்ள நாலு வழி

ஜனவரி 29ல் வாக்காளர் வேட்டை நடைபெற இருப்பதால், பொது மக்கள் பின்வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் ஈடுபடலாம்.

1. ஆண்கள் அனைவரும் அன்று



அதிகாலையிலேயே எழுந்து தலைமறைவாகிவிட வேண்டும்.

2. பெண்கள் கடும் சுகவீனம் உற்றோர் போல போர்த்துக் கொண்டு தூங்கலாம்.

3. வீதியில் நடமாடுவோர் உம்பில் எண்ணெய் பூசிக் கொண்டு நடமாட வேண்டும். கையிலே பிடித்து இழுத்தால் சுலபமாக வழுவிக்கொண்டு தப்பிச் செல்ல எண்ணெய்ப் பூச்சு பயன்படும்.

4. வாகனங்கள் குறிப்பாக வேன்களைக் கண்டால், ஒலிம்பிக் பந்தயத்தில் ஓடுவதாக நினைத்துக் கொண்டு பாய்ந்தோட வேண்டும். அடிக்கடி ஓடிய முன் அனுபவம் உள்ளதால் சிரமம் இருக்காது.

5. இத்தனை முன்னெச்சரிக்கைகளும் பயனளிக்காமல் போனால்,உங்களை கோழிகள்போல நினைத்து அமுக்கிக் கொண்டு போனால், புள்ளடிக்குப் பதிலாக முட்டையிட்டு விட்டு வாருங்கள். ஹி.ஹி.ஹி.

## போடுங்கம்மா வோட்டு பிடியுங்கம்மா நோட்டு

தமிழ்க் கட்சிகளிடம் போதிய பிரசாரப் பாடல்கள் இல்லையென்பதால், சினிமாப் பாடல்களையே நம்பியிருக்கின்றன. அதனால் உள்ளூர் சரக்காக ஒரு பாடல் தயாரித்துத் தரப்படுகிறது.

போடுங்கம்மா வோட்டு
பிடியுங்கம்மா நோட்டு!
கூடுங்கய்யா வந்து
குத்துங்கய்யா வோட்டு!
சாதி, மதம் பார்த்து
போடுங்கய்யா வோட்டு!
ஊரு முகம் பார்த்து
குத்துங்கய்யா வோட்டு!
வீட்டுக்கொரு சேலை
வென்று வந்தால்
வீட்டுக்கொரு வேலை!
ஆளுக்கொரு வேட்டி
வென்றுவிட்டால் பார்ட்டி!



பிடியுங்கம்மா நோட்டு
போடுங்கம்மா வோட்டு!
அய்யாவுக்குப் போத்தில்
அம்மாவுக்கு கேத்தில்
தம்பிக்கு காலண்டர்
தங்கச்சிக்கு டயறி
அண்ணாவுக்கு ஜீன்சு
அக்காவுக்கு சுரிதார்
எல்லாம் வாங்கிப் போட்டு
போடுங்கம்மா மொட்டை
போடுங்கய்யா மொட்டை
எங்களுக்கு மொட்டை!
போடுங்கம்மா வோட்டு
பிடியுங்கம்மா நோட்டு!

## இனிமேல் ஜாக்கிரதை



(இது தேர்தல் முடிந்த பின்னர்)

**ஆறுமுகம்: என்ன, அந்தக் கட்சி அலுவலகம் முன்னாலே ஒரே கூட்டமா இருக்கே. அவங்களெல்லாம் ஆதரவாளர்களா?**

முருகேசு: ஆதரவாளர்களா, இவங்களுக்கா? சீல் சாரயம் என்று லோக்கல் சரக்கை கொடுத்து ஏமாற்றிவிட்டார்களாம். அது தான் குடிமக்கள் முற்றுகையிட்டிருக்கிறார்கள்.

**ஆறுமுகம்: பெண்களும் நிற்கிறமாதிரித் தெரியுதே?**

முருகேசு: சேலை கொடுத்தாங்களாம், சாயம் போச்சுதாம். கிளம்பி வந்து நியாயம் கேட்கிறாங்கப்பா.!

**ஆறுமுகம்: எனக்கும் ஒரு வேட்டி தேவைதான். ஓசியிலே தருவதை ஏன் விடவேணும்? போய் வாங்கினா என்ன?**

முருகேசு: யோவ் ஆறுமுகம், எலக்ஷன் முடிஞ்சு போச்சய்யா. இப்ப போனா வேட்டியாதருவாங்க? உன் இடுப்பு வேட்டியையே உருவிடுவாங்கப்பா. ஜாக்கிரதை!

காதிலை பூ கந்தசாமி



படிப்பகம்

அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்! அதை
எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன
கிளை:
105, காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331

# கோமாளிகள் கும்மாளம்



ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657

➡ துன்ப துயரங்கள் மனதை வாட்டும்போது மனம் விட்டுச் சிரித்தால் துன்பச் சூழலை மறந்து குதூகலிக்கலாம். நகைச்சுவையை ருசி பார்க்க எல்லோருக்கும்தான் விருப்பம்வரும்.

துயருறும் மக்களை மகிழ்விப்பதற்காகவே நகைச்சுவையாளர்களும் கோமாளிகளும் தங்களை அர்ப்பணிக்கின்றனர். பிறரைச் சிரிப்பூட்டுவதையே தமது தொழிலாகக் கொண்டவர்கள் உலகெங்கும் உள்ளனர்.

பெரும்பாலும் வீரதீர சாகசச் செயல்களில் ஈடுபடுவோரைக் கொண்ட சேர்க்கஸ் குழுக்களில்தான் கோமாளிகள் நிரந்தர ஊழியர்களாகக் கடமையாற்றுவர்.

இவர்கள் அணியும் உடைகளே விசித்திரமாக இருக்கும். சேர்க்கஸ் விளையாட்டுக்கள் ஒவ்வொன்றிலும் இக்கோமாளிகள் புகுந்து சின்னஞ் சிறுவர் முதல் வயதான பெரியவர்கள்வரை குலுங்கிக் குலுங்கிச் சிரிக்க வைப்பார்கள். இந்தக் கோமாளிகள் எல்லோரும் சேர்ந்து தமக்கென சர்வதேச கோமாளிகள் சங்கம் என்றோர் அமைப்பினை 1946ம் ஆண்டு உருவாக்கினார்கள். அப்போதிருந்தே இக்கோமாளிகள் வருடா வருடம், ஏதாவது ஒரு நகரில் கூடி மாநாடு நடத்துவார்கள்.

1991ம் ஆண்டு இங்கிலாந்தில் மேற்குச் சசெக்ஸ் மாநிலத்திலுள்ள போக்னொர் ரெஜிஸ் என்ற இடத்தில் நடைபெற்ற சர்வதேசக் கோமாளிகள் மாநாட்டில் மொத்தம் 850 கோமாளிகள் ஒன்று கூடினர். இதுகால வரை நடைபெற்ற கோமாளிகள் மாநாடுகளில் இதில்தான் பெரும் எண்ணிக்கையில் கோமாளிகள் கலந்து கொண்டனர். அதனால் இதுகோமாளிகளின் உலக சாதனை மாநாடாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

எப்போதும் சிரித்துக் கொண்டே கவலைக்கு இடம் கொடுக்காமல் காலம் கழிப்பவர்கள் நீண்டகாலம் உயிர்வாழ்வார்கள் என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.பிறரைச் சிரிப்பூட்டித் தாமும் மகிழ்ச்சியாக மிக நீண்டகாலம் கோமாளியாக வாழ்ந்தவர்கள் பலர்.


இவர்களில் கிறோக், கோகோ மற்றும் ஒட்டோ கிரீபிளிங் ஆகியோர் ஒவ்வொருவரும் 74 வயதுவரை வாழ்ந்து இறுதிவரை கோமாளித் தொழிலிலேயே ஈடுபட்டு வந்துள்ளனர். இவர்களைத் தவிர விம்சிகல் வோக்கர் மற்றும் லோ கேக் கப்ஸ் ஆகிய இருவரும் 80 வயதுவரை உயிர் வாழ்ந்துள்ளனர். ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த சார்ளி ரிவெல் மற்றும் டென்மார்க்கைச் சேர்ந்த 'கக்ளி' என்ற புனைபெயருடைய அர்னோல்ட் ஸ்கிமிட் ஆகியோர் தமது 87வயதில்- இன்றும் கோமாளிகளாகவே வேடம் புனைந்து வேடிக்கை காட்டி வருகின்றனர்.

---

➡ பேச்சுவார்த்தைக்காக, அல்லது பெரிய மாநாட்டுக்காக போடப்பட்ட பிரமாண்ட மேசை போல தோன்றுகிறதா? அல்ல..அல்ல...

உலகத்திலேயே மிகப் பெரிய கிட்டார்தான் இது. இந்த வாத்தியக் கருவியை அமெரிக்க இண்டியானா மாநிலத்திலுள்ள ஐசநோவில் நகர ஷாக்மக் உயர் நிலைப்பள்ளி மாணவர்கள் அசத்தலாக தயாரித்து முடித்தனர். அதே பள்ளி மாணவர்கள் ஆறுபேர் ஒன்றாகச் சேர்ந்து வாசித்துள்ளனர். 1991ம் ஆண்டு மே மாதம் இச்சாதனை இடம்பெற்றது.

இக்கருவியின் உயரம் 11.63 மீட்டர் (38 அடி 2 அங்குலம்) எடை 446 கிலோ (1,865 இறாத்தல்). மீட்ட இருகைகள் போதாது. அதுதான் ஆறுபேர் சேர்ந்து நீளமாக மீட்டியுள்ளனர்.



## நீட்டமான மீட்டல்



## விழா


⬆ உலகெங்கணும் நடைபெறும் கலைவிழாக்களில் மிக அதிகமான நிகழ்ச்சிகளை உள்ளடக்கியது- வருடா வருடம் நடைபெறும் எடின்பரோ விழாவாகும். பிரிட்டனிலுள்ள எடின்பரோ நகரில் நடைபெறும் வருடாந்த விழாவில் உலகின் பல பாகங்களிலிருந்தும் கலைக் குழுவினர் வந்து கலை நிகழ்ச்சிகளை நடத்துவார்கள்.

1947ல் தான் எடின்பரோ கலைவிழா முதன் முதலில் ஆரம்பமானது. அப்போது 19 கலை நிறுவனங்கள் மட்டுமே பங்கேற்றன. ஆனால் 1958 முதல் 1996 வரை பங்கேற்கும் கலைக் குழுக்களின் எண்ணிக்கை பல மடங்காக அதிகரித்தன.

1993ம் ஆண்டு ஆகஸ்ட் 15 முதல் செப்டம்பர் 4ம் திகதிவரை 582 கலைக்குழுக்கள் மொத்தம் 1,643 நிகழ்ச்சிகளை 14,108 தடவைகள் நடத்தியுள்ளன.

கலை நிகழ்ச்சிகள் யாவும் மேடைகளில்தான் நடைபெறும். ஒரே மாதிரியானவையாக அமைய வேண்டுமென்பதில்லை. இங்கே உச்சி முதல் உள்ளங்கால்வரை- பாதணி முதல் தொப்பிவரை (குடை உட்பட) ஒரே வர்ணத்தில் அலங்கரித்துக்கொண்ட கலைஞர்களும் எடின்பரோ கலை விழாவில் பார்வையாளர்களைக் கவர்ந்தனர்.

உலகில் அதிக நிகழ்ச்சிகளைக் கொண்ட கலைவிழா என்ற பெருமையையும்,உலக சாதனையையும் எடின்பரோவில் 1993இல் நடைபெற்ற கலைவிழா பெற்றுள்ளது.



## பெரிசு

⬆ 'புகட்டி ரோயல்' என்ற இந்த மோட்டார் கார்தான் உலகிலேயே- தனியார் பாவனைக்கென்று முதன் முதலில் உருவாக்கப்பட்ட மிக நீளமான காராகும். 1927ம் ஆண்டு இத்தாலிய 'எட்டோர் புகட்டி' நிறுவனத்தாரால் ஃபிரான்சிலுள்ள மொல்ஷெயிம் என்ற இடத்தில் பொருத்தப்பட்ட இவ்வண்டி, இப்பொழுது அமெரிக்க கலிஃபோர்னியா மாநிலத்திலுள்ள பெபிள் பீச் எனும் இடத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

இவ்வண்டியின் நீளம் 6.7 மீட்டர். (22 அடி) 8 சிலிண்டர் இயந்திரம் கொண்டது இந்த வண்டி. அதன் கொள்ளவு 12.7 லீட்டர்.

இதனுடைய முன் 'பொன்னற்' மட்டும் 2.13 மீட்டர் (7 அடி) நீளமானதாகும். (மூக்கு ரொம்ப நீளம்) ஏற்கனவே வாகன நெரிசல்கள் உலகில் அதிகமாகி வருகின்றன. இப்படி நாலு கார் வேண்டாம் இரண்டு கார் இருந்தாலே போதும், ஏனைய வாகனங்கள் போய்ச்சேர்ந்த மாதிரித்தான். அதுதான் இப்போதெல்லாம் சின்னச் சின்ன சிங்காரக் கார்களாக செய்கிறார்கள். □

## 1வது பிறந்தநாள் வாழ்த்து

(03.12.1997)



புங்குடுதீவு 2ம் வட்டாரத்தைச் சேர்ந்த மகேஸ்வரன்- தேன்மொழி தம்பதியினரின் செல்வப் புதல்வி **மதுரா** தனது முதலாவது பிறந்த தினத்தை **03.12.97** புதன்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். மதுராவை அன்பு அப்பா, அம்மா, (Ceylon) அப்பப்பா, (Swiss) அப்பம்மா, (Canada) அம்மம்மா, (Swiss) பெரியப்பா, பெரியம்மா, (Canada) பெரியமாமா, பெரிய மாமி (Swiss)

**செல்வி மதுரா மகேஸ்வரன்**

மாமா, மாமி, சித்தப்பாமார், சித்தி, (Canada) மாமாமார், (Swiss) அண்ணா, மச்சாள்மார், மச்சான், அக்கா, தம்பி, Canada மச்சாள், மச்சான் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் மதுராவை முத்துமாரி அம்பாள் துணையுடன் சீரும், சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

தகவல்:- மகேஸ்வரன் தேன்மொழி (Toronto, Canada)



⬅ பந்துவீச்சை மேலும் கூர்மைப்படுத்தி மெருகூட்டுவதில் இந்திய அணி கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளது.

அணிக்கு புதிய இரத்தம் பாய்ச்சும் வேலைகளும் நடக்கின்றன. சமீபகாலத்தில் இந்திய அணியில் சேர்க்கப்பட்டுள்ளவர்களில் ஒருவர் சாய்ராஜ் பகுதுலே.

பார்த்தால் முகத்தில் பால் வடிகிறது. ஆனால் 23 வயது. மும்பாயைச் சேர்ந்தவர். இந்தியாவில் நடைபெறும் உள்ளூர் போட்டிகளான ரஞ்சி கோப்பைப் போட்டியில்தான் இந்த முத்தைக் கண்டெடுத்தார்கள். மொத்தம் 200 விக்கெட்டுக்களை ரஞ்சி கோப்பை போட்டிகளில் மட்டும் சாய்த்திருக்கிறார். இரண்டு வருடமாக இந்திய 'ஏ' அணியிலும் விளையாடியுள்ளார்.

கடந்த ஆண்டு மட்டும் நாலு உள்ளூர் போட்டிகளில் 14 விக்கெட்டுக்களை சரித்ததுடன், இரண்டு சதங்களும் எடுத்துள்ளார். உள்ளூர் போட்டிகளில் இவரது திறமையைப் பார்த்த விமர்சகர்கள் சூட்டியுள்ள பட்டம், 'இந்தியாவின் ஷேன் வோர்ன்'. சாய்ராஜின் சுழல் வித்தையால் வியப்புற்று கொடுத்தபட்டம். வலதுகை சுழற்பந்து வீச்சாளர். இடது கை துடுப்பாட்ட வீரர். சகலதுறை ஆட்டக்காரர். சர்வதேச ஒருநாள் போட்டிகளில் இப்போதுதான் பிரகாசிக்க ஆரம்பித்துள்ளார். இவரது முதல் விக்கெட் ரொஷான் மகானாம. எதிர்காலம் வெகு பிரகாசமாக இருக்கிறது. ஜமாய்ப்பார். ■

## சுழல் வித்தை



இப்பத்திரிகை கொழும்பு கிருலப்பனை காவிந்த பிளேஸ், ... இலக்கத்தில் நிரந்தர ... 25, வெல்லம்பிட்டிய ... அச்சகத்தில் ... ஜூன் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.